வீர ரஷ்யா

வி.எஸ். நாராயணன்

49

7-APR 19

2

8 அணா

திப்பாசிரியர். பி. ஸ்ரீ. தினமணி வெளியீடு 1

தினமணி வெளியீடு : 18

பதிப்பாசிரியர் : பி. ஸ்ரீ.

வீர ரஷ்யா

[பாகம் 2]

வி. எஸ். நாராயணன்

டாக்டர் பி. சுப்பராயன், முன்னுரையுடன்

320.947

7-APR 194

"இருள் அகற்றும்
கைவிளக்கே கற்ற அறிவுடைமை"

தினமணி காரியாலயம்
100, மவுண்டு ரோடு
சென்னை
1945

காபிரைட்]

[விலை அணா 8

N-58

தினமணி வெளியீடு

இலக்கிய ஆலோசனையாளர்கள்

ஸ்ரீமதி. எஸ். அம்புஜம்மாள்,
ஆழ்வார்பேட்டை, சென்னை

திரு. கி. சந்திரசேகரன்,
மயிலாப்பூர், சென்னை

,, ஏ. என். சிவராமன்,
"தினமணி" ஆசிரியர்

,, கே. சுவாமிநாதன்,
ஆங்கிலப் பேராசிரியர்,
ப்ரெஸிடென்ஸி காலேஜ், சென்னை

,, டாக்டர் டி. எஸ். திருமூர்த்தி,
நுங்கம்பாக்கம், சென்னை

,, கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார்,
சரித்திரப் பேராசிரியர்,
சென்னை யூனிவெர்ஸிடி

,, ஸி. என். முத்துரங்க முதலியார்,
பேட்டை, செங்கற்பட்டு ஜில்லா

,, ஏ. வி. மெய்யப்ப செட்டியார்,
ஸரஸ்வதி ஸ்டோர்ஸ், பிரகதி பிக்சர்ஸ்,
சென்னை

,, எஸ் வையாபுரிப் பிள்ளை,
தமிழ் ஆராய்ச்சித் தலைவர்,
சென்னை யூனிவெர்ஸிடி

பொருள் அடக்கம்

			பக்கம்
I	பாட்டாளி மக்களின் குடியரசு	....	9
II	உண்மையான ஜனநாயகம்	....	20
III	பொதுஜன விரோதிகள்	....	28
IV	சமாதான சகாப்தம்	....	39
V	ஹிட்லர் விஜயம்	....	49
VI	மூனிக் நாடகம்	....	56
VII	ரஷ்யா-ஜெர்மன் உடன்படிக்கை	....	61
VIII	போலந்தின் மறைவு	....	64
IX	துரோகமா, தந்திரமா?	....	68
X	ஐரோப்பா அடிபணிந்தது	....	73
XI	ஜெர்மன் படையெடுப்பு	....	77
XII	லெனின்கிராட்	....	80
XIII	ஸ்டாலின்கிராட்	....	83
XIV	ஸெபஸ்டபோல்	....	87
XV	ரஷ்யரின் எதிர்த்தாக்குதல்	....	89
XVI	ஜெர்மன் வாபஸ்	....	92
XVII	பெர்லினுக்கு 'யாத்திரை'	....	96

ஹாஸ்ய நாடகங்கள் — கட்டுரைகள்

ஸ்ரீ. வி. ஸி. கோபாலரத்னம் பி. ஏ., பி. எல்.,

ஸ்ரீ. எஸ். ஒய். கிருஷ்ணஸ்வாமி, ஐ. ஸி. எஸ்.

முன்னுரையுடன்

பெடரல் ஜட்ஜ் ஸர். எஸ். வரதாசாரியார் எழுதுவது :

இந்த ஹாஸ்யக் கதைகளைப் பெரிதும் அனுபவித்தேன். விலாத்தெறிக்கச் சிரிப்பதற்கு என் மனப்பான்மை இடங்கொடுப்பதில்லை; ஒருவேளை வயதும் காரணமாக இருக்கலாம். இதனால் இக்கதைகளைப் பற்றிய என் ஹிருதய பூர்வமான மதிப்பு கொஞ்சமும் குறைந்துவிடவில்லை.

கி. சந்திரசேகரன், எம்.ஏ., பி.எல். (ஆச்ரமம்) எழுதுவது :

உடனே வாசிக்கத் தொடங்கி..............முடித்தாய் விட்டது.........அதற்குள் என் சந்தோஷத்தையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்ள உத்ஸாகம் உண்டாகிவிட்டது...........ஆசிரியரிடம் அடங்காததோர் அபிமானமுண்டாகிறது. வாழ்க்கையில் நகைச்சுவை எவ்வளவு அவசியம்!.........“ஐயோ கடவுளே!” என்பதை வாசித்து அதில் அடங்கிய நுண்ணிய கருத்துக்களையும் உலக அனுபவங்களையும் புரிந்து கொள்ளாதவன் படித்தவன் என்று சொல்லிக்கொள்வது வீண் ஜம்பமாகும். எஸ் ஒய். கே. (எஸ். ஒய். கிருஷ்ணஸ்வாமி ஐ. ஸி. எஸ்)யின் முன்னுரை வாய்ப்பாய் அமைந்தது பற்றியும் எனக்குச் சந்தோஷம்தான், நிச்சயம் ‘தினமணி’ வெளியீட்டில் இந்த ஒரு புஸ்தகம் மட்டும் ஐயாயிரம் என்ன, பதினாயிரம் விற்பனையாகும்; சந்தேகமில்லை.

அழகிய கட்டுக்கோப்பு. தெளிவான அச்சு.

விலை நிர்ணயங்கள் ‘கவர்’ப் பின்பக்கம் பார்க்க.

முன்னுரை

டாக்டர் பி. சுப்பராயன்

இதன் முதல் பாகத்திற்கு எழுதிய முன்னுரையில், முன்பே இப்பாகத்திலிருக்கும் சிலவற்றைப் பற்றிக் கூறியுள்ளேன். இந்தப் பாகத்தில் ஆசிரியர் ரஷ்யாவின் சரித்திரத்தை பெர்லின் நகரைத் தாக்கும் தறுவாய் வரை யெழுதியுள்ளார். ரஷ்ய அரசியல் எவ்வாறு மக்களின் குடியரசாக நடக்கின்றதென்பதை ஆசிரியர் ஆராய்ந்துவிட்டு, 'இது ஜன நாயகமா, இல்லையா?' என்பதற்குப் பதில் கூறியிருக்கிறார். எதற்காக புக்காரின், டிராட்ஸ்கி முதலியோரை அரசியலிலிருந்து விலக்கும்படி நேர்ந்ததென்பதை எளிதாக வாசகர்கள் அறிந்துகொள்ளும்படியாக எடுத்துக் காட்டியுள்ளார். வார்ஸேல்ஸ் உடன்படிக்கையிலிருந்து உலகத்தில் சமாதானம் ஏற்படுவதற்கு ஐந்து ரஷ்ய மந்திரிகளும் செய்து வந்த வேலைகளையும் எடுத்துக் காட்டியிருக்கிறார். ரஷ்ய அயல் நாட்டுக் கொள்கை உலக சமாதானத்திற்காக நிறுவ வேண்டிய முறைகளை எடுத்துக் காட்டிச் சர்வ தேச சங்கம் வழியாகக் கூட்டுப் பாதுகாப்பு ஏற்படுத்தி, அமைதி நிறுவ முடியுமென்பதற்கு ரஷ்ய அயல் நாட்டு மந்திரிகள் பிரயத்தனம் செய்தார்கள். ஆனால் போல்ஷ்விக் கட்சிக்காரர்களிடம் இருந்த அவநம்பிக்கையினால் மற்ற தேசங்கள் இதற்குச் சரியான உதவி புரியவில்லை. இதுவே யுத்தத்திற்கு முதல் காரணம் என்பதை ஆசிரியர் எடுத்துக் காட்டியுள்ளார்.

ஹிட்லர் அரசாங்கம் எவ்வாறு வந்தது என்று கூறிவிட்டு, மூனிக் ஒப்பந்தத்தினால் யுத்தம் கட்டாயம் வருவதற்கு வித்து ஊன்றப்பட்டதென்பதைத் தெளிவாக எழுதியிருக்கிறார். ரஷ்ய-ஜெர்மன் உடன்படிக்கையும், போலந்தைச் சமரசமாகப் பிரித்துக் கொண்டதும் 'தந்திரமா அல்லது துரோகமா?' என்ற கேள்விக்கு, இது ரஷ்யாவின் பாதுகாப்பிற்காகத்தான் செய்யப்பட்டது என்றும், இதனால்தான் ஐரோப்பா முழுவதும் ஹிட்லரின் ஆக்கினைக்கு உட்பட்ட

போதிலும் ரஷ்யா இந்த யுத்தத்தில் ஜெர்மனியுடன் சமமாக நின்று, இப்பொழுது வெற்றியடைவதற்கு இயன்றது என் பதை எளிதில் அறிந்து கொள்ளும்படி எழுதியிருக்கிறார். லெனின்கிராட், ஸ்டாலின்கிராட் முதலிய இடங்களில் பாதுகாப்புச் சண்டை செய்ய இயன்றதற்கும் காரணம் இதுதான்.

இந்த இரண்டு பாகங்களிலும் ரஷ்ய சரித்திரத்தைத் தமிழ் மக்கள் எளிதாக அறிந்துகொள்ளும் உபகாரத்தை ஆசிரியர் திறமையுடன் செய்துள்ளார். ரஷ்யாவின் சரித்திரத்தை நாம் அறிந்து கொள்வது மிகவும் முக்கியம். இதற்கு இப்புத்தகம் தமிழ் மக்களுக்கு இன்றியமையாத கருவி. ஆசிரியரின் உழைப்பை மிகவும் பாராட்டுகிறேன்.

இரண்டு சிறு கதைத் தொகுதிகள்

712

1. சிறு கதை மஞ்சரி

ஒவ்வொரு தமிழ்க் குடும்பத்திற்கும் நல்ல பொழுது போக்கிற்கு உரிய சிறு கதைகளும் நாவல்கள் முதலான பெரிய கதைகளும் வெளிவர வேண்டியதும் அவசியமாகும். இந்த நோக்கத்தோடு "சிறு கதை மஞ்சரி" என்ற தொகுதியொன்று வெளிவந்திருக்கிறது. இக்கதைகளை எழுதிய தமிழ்ப் பேராசிரியரின் பெயர் நாடெங்கும் பிரசித்தமானது. 'பாலையா' என்ற புனை பெயருடன் இவரது கதைகள் வெளியிடப்படுகின்றன.

2. முன்னிலா

இச்சிறு கதைத் தொகுதியும் வாசகர்களுக்கு நல்ல பொழுது போக்கு, நல்ல விருந்து.

இதை எழுதியவர்கள் :—

ஸ்ரீமான் எம். அனந்தநாராயணன், ஐ. ஸி. எஸ்.
,, எம். கிருஷ்ணன், எம். ஏ.
ஸ்ரீமதி மீனாம்பாள்,
,, லக்ஷ்மி அம்மாள், எம். ஏ.
,, விசாலாக்ஷி அம்மாள் (காசினி),
,, டாக்டர் ஸரஸ்வதி அம்மாள்.

இன்னும் இத்துறையில் நல்ல நல்ல புஸ்தகங்கள் வெளிவரும்.

விலை நிர்ணயங்கள் 'கவர்'ப் பின்பக்கம் பார்க்க.

தினமணி வெளியீடு 17

கதா நாடக மஞ்சரி

ஸ்ரீ. எஸ். கே. யக்ஞநாராயணையர், எம். ஏ.

எழுதியது

தம்பி தஞ்சாவூருக்குப் போனது

சாளுப் பாட்டியின் ஊசி

என்ற இரண்டு சிறு வேடிக்கைக் கதைகளும்,

நவீன அர்ச்சுனன்

என்ற குட்டி ஹாஸ்ய நாடகமும் அடங்கியது.

விலை அணா 8

தினமணி ஏஜெண்டுகளிடம் கிடைக்கும்

புஸ்தக வியாபாரிகளிடமும் கிடைக்கும்

7-APR 1943
MADRAS

வீர ரஷ்யா

[பாகம் 2]

I பாட்டாளி மக்களின் குடியரசு

புதிய ஸோவியத் அரசாங்கம் ஏற்பட்டதும், அதன் கவனம் முழுவதும் பெரும்பான்மையோரான உழைப்பாளி மக்களின் பொது நலன்களுக்காகச் சட்ட திட்டங்கள் நிறைவேற்றுவதில் செலுத்தப்பட்டது. தொழிலாளர்கள், படை வீரர்கள், விவசாயிகள் ஆகிய பாட்டாளி மக்களின் குடியரசு ரஷ்யா—என்று 1918--ம் வருஷம் ஜனவரி மாதம் கூடிய மூன்றுவது ஸோவியத் காங்கிரஸ் ஒரு தீர்மானத்தின் மூலம் பிரகடனம் செய்தது. ஸோவியத் குடியரசின் அரசியல் அமைப்பு 1918-ம் வருஷம் ஜூலை மாதம் 5-வது ஸோவியத் காங்கிரஸால் வகுக்கப்பட்டது.

18 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு பிரஜைக்கும் வாக்குரிமை உண்டு. அவர்கள் எந்த மதத்தைச் சேர்ந்திருந்தாலும், கறுப்பரா யிருந்தாலும் வெள்ளையரா யிருந்தாலும், ஆடவர்களா யிருந்தாலும் பெண்களா யிருந்தாலும் வோட்டுக் கொடுக்கலாம். அவர்கள் அபேட்சகராகவும் நிற்கலாம். சரீர உழைப்பாளிகள், உற்பத்தியாளருக்கு உதவியாக வீட்டு வேலை செய்கிறவர்கள், ஸோவியத் படை வீரர்கள், கடற்படை வீரர்கள் அனைவருக்கும் வோட்டுரிமை யுண்டு. பரசிரம ஜீவிகள், தரகர், மத்திய வகுப்பினர், பாதிரிகள், பழைய போலீஸ் வர்க்கத்தின் கையாட்கள், மன்னர் குடும்பத்தினர், பைத்தியக்காரர்கள் ஆகியோர் தேர்தலில் வாக்காளர்களாகவோ, அபேட்சகர்களாகவோ கலந்துகொள்ள முடியாது.

உழைப்பாளிகள் வோட்டுக் கொடுக்கவும் தேர்தலுக்கு நிற்கவும் மற்றத் தேசங்களைப் பார்க்கிலும் ஸோவியத் ரஷ்யாவில் குறைந்த வயதிலேயே உரிமை பெற்றிருக்கிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் வாக்காளர்களுக்குத் திருப்திகரமாக நடக்கவில்லை யென்றால், வாக்காளர்கள் அவர்களை ஸ்தானங்களிலிருந்து நீக்கிவிடலாம். உழைப்பாளிகளான ஆண்களும் பெண்களும் ஓய்வு நேரத்தில் அரசாங்கத்தின் பலவேறு ஸ்தாபனங்களிலும் பிரதிநிதிகளாயிருக்க ஆரம்பத்திலிருந்தே திட்டம் வகுக்கப்பட்டது. யார் வேண்டுமானாலும் அபேட்சகர்களாக நின்று வோட்டுகளைப் பெற்றுவிட முடியாது. நகரங்களில் தொழிற் சங்கக் கமிட்டிகள் தொழிலாளர்களின் கூட்டத்தை நடத்தும். அபேட்சகர்கள் கடந்த காலத்தில் என்ன நல்ல காரியங்கள் செய்திருக்கிறார்கள் என்பதைப் பற்றி விவாதிக்கப்படும். அவர்களுடைய யோக்யதாம்சங்களைப் பற்றிக் கேள்விகள் கேட்கப்படும். இந்தக் கேள்விகளுக்கு எல்லாம் அபேட்சகர்கள் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும்.

கிராமங்களில் பகிரங்கமான இடங்களில் தேர்தல்கள் நடைபெறும். ஒரு ஸ்தாபனமோ அல்லது தனி நபர்களோ அபேட்சகரை நிறுத்தலாம். எவருக்கும் அபேட்சகரைக் கேள்வி கேட்கவோ அல்லது எதிர்க்கவோ உரிமையுண்டு. கம்யூனிஸ்ட் கட்சி அபேட்சகரை நிறுத்துவது வழக்கம். தொழிற் சங்கங்களும் இதர ஸ்தாபனங்களும் அவ்வாறே செய்யும். கம்யூனிஸ்ட் கட்சியின் அபேட்சகர்களாக இருந்தாலும், செல்வாக்குள்ளவர்களாக இல்லாவிட்டால் தேர்ந்தெடுக்கப்பட மாட்டார்கள். அவர்களைத்தான் தேர்ந்தெடுக்கவேண்டும் என்ற நிர்ப்பந்தமும் கிடையாது. கம்யூனிஸ்ட் கட்சியும் தன்னுடைய கட்சி அபேட்சகரைத் தான் ஆதரிக்கவேண்டும் என்பதில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தேர்தல் உறுதிமொழியை நிறைவேற்றத் தவறினால், ஸ்தானங்களை ராஜிநாமாச் செய்யும்படி நிர்ப்பந்திக்கப்படுவார்கள். ஆலைத் தொழிலாளரும் கிராமவாசிகளும் கூட்டங்களில் ஸோவியத்துகளுக்குப் பிரதி

நிதிகளைத் தேர்ந்தெடுக்கும் கைங்கரியத்தை மாத்திரம் செய்யவில்லை. ஸோவியத்துகளின் பலவேறு இலாகாக்களில் சம்பளமின்றிச் சுயேச்சையாக வேலைசெய்ய உடன்படும் ஆயிரக்கணக்கானவர்களையும் பொறுக்கி யெடுக்கிறார்கள். இவர்கள் ஸ்தல தேசீய நிர்வாக சபைகளில் சேர்ந்து இலவசமாய்ச் சமூக ஊழியம் செய்வர்.

மனிதனை மனிதன் சுரண்டும் கொடிய வழக்கத்தை ஒழிப்பது, சமூகத்தின் வர்க்கப் பிரிவினையைக் குழி தோண்டிப் புதைப்பது முதலியன ஸோவியத் குடியரசின் அடிப்படையான நோக்கமாகும். இது ஸோவியத் குடியரசின் அரசியல் திட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது. சமூகத்திற்கு நன்மை பயக்கும் வேலைகளை எல்லோரும் செய்யவேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டது. தொழிலாளர்களைச் சுரண்டுகிறவர்களுக்கு ஸர்க்கார் ஸ்தாபனத்தில் இடம் கிடையாது. லாபங் கருதிக் கூலியாட்களை அமர்த்துகிறவர்கள், தனவந்தர்கள் முதலியவர்களின் அரசியல் உரிமைகள் பறிக்கப்பட்டன. 1933-ம் வருஷத்திலிருந்து ஸோவியத் யூனியனில் முதலாளித்துவம் மடிந்துவிட்டது. கூலிக்கு ஆட்களை அமர்த்தி, அவர்ளுடைய உழைப்பின்மூலம் லாபம் அடித்துவந்த கூட்டம் மறைந்துவிட்டது. பிறர் பணப் பெட்டிகளை நிரப்புவதற்காக அடிமை வேலை செய்யும் அநீதியும் அடியோடு ஒழிந்தது. இவ்வாறு ஆரம்ப அரசியல் திட்டங்களில் அடங்கிய நோக்கங்கள் பூரணமாக நிறைவேறின.

1935-ம் வருஷத்தில் 7-வது ஸோவியத் காங்கிரஸில் ஸோவியத் யூனியனுக்கு ஒரு புதிய அரசியல் திட்டத்தைத் தயாரிக்கத் தீர்மானமாயிற்று. 1936-ம் வருஷம் டிஸம்பர் மாதம் 5-ந் தேதியன்று புதிய அரசியல் திட்டம் 8-வது ஐக்கிய ஸோவியத் காங்கிரஸில் முடிவாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. முதலாவது ஸோவியத்துகள் முன்போலவே தேசத்தின் அதிகாரம் பெற்ற ஸ்தாபனங்கள். இப்பொழுது ஸோவியத் அரசாங்கம், தொழிலாளர் விவசாயிகள் ஆகியோரின் ஸோஷியலிஸ்ட் அரசாங்கம் என்று அழைக்கப்படுகிறது. 1918-ம் வருஷ அரசியல் திட்டத்தின் முக்கிய

மான நோக்கம் ஸோஷியலிஸத்தை ஏற்படுத்துவது மாத்திரந்தான் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. உற்பத்திச் சாதனங்கள் அனைத்தும் பொது உடைமை யாக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் பிரஜைகள் தங்களுடைய ஊழியங்களையும், சேமிப்புகளையும், சொந்த சௌகரியத்திற்கு அவசியமானவற்றையும் தனி உடைமையாக வைத்துக் கொள்ளலாம். பிறருக்கு உழைக்காத சுயேச்சையான சொற்ப உற்பத்தியாளர் தங்களுடைய சொந்த உற்பத்திச் சாதனங்களையும் சொந்த சௌகரியத்திற்கு அவசியமானவற்றையும் தனி உடைமையாக வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் பிறரைக் கூலிக்கு அமர்த்தமுடியாது.

ஸோவியத் அரசாங்க அமைப்பு நிரந்தரமானதல்ல. அது மாறுதலுக்கு உட்பட்டதுதான். ஆனால் ஸாராம்சத்தில் எவ்வித மாறுதலும் இருக்கமுடியாது. ஸோவியத் அரசாங்கம் பாட்டாளி மக்களின் ஸர்வாதிகாரமாகவே இருக்கும். ஸோவியத் யூனியனில் வேலை செய்யத் திறமையுள்ள ஒவ்வொரு பிரஜையும் வேலை செய்யக் கடமைப்பட்டிருக்கிறான். உழைக்காதவன் ஸோவியத் யூனியனில் ஜீவியம் செய்யமுடியாது. 'சக்திக்குத் தகுந்த உழைப்பு, உழைப்புக்குத் தகுந்த ஊதியம்' என்னும் ஸோவியத் கொள்கை அனுஷ்டிக்கப்படுகிறது. ஒவ்வொரு பிரஜையும் அரசியல் திட்டத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும். ஒவ்வொரு பிரஜையும் ஸோவியத் யூனியனைப் பாதுகாக்கக் கடமைப்பட்டிருக்கிறான்.

உழைப்பாளி மக்களின் பிரதிநிதிகள் அடங்கிய ஸோவியத்துகளே (கவுன்ஸில்களே) ஸோவியத் யூனியனை ஆட்சி செய்கின்றன. இந்த ஸோவியத்துகள் கிராமங்களிலும் நகரங்களிலும், சுய ஆட்சிப் பிரதேசங்களிலும் குடியரசுகளிலும், மற்றும் யூனியன் முழுவதற்குமே, தேர்ந்தெடுக்கப்படுகின்றன. உயர்தர ஸோவியத் அல்லது ஸோவியத் பார்லிமெண்டு இரண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட சபைகளையுடையது. ஒன்றுக்கு 'யூனியன்-ஸோவியத்' என்று பெயர். மற்றொன்றுக்குத் 'தேசீய இனங்களின் ஸோவியத்' என்று

பெயர். யூனியன் - ஸோவியத்தில் 569 மெம்பர்களும், தேசிய இனங்களின் ஸோவியத்தில் 574 மெம்பர்களும் உண்டு. 3 லட்சம் ஜனங்களுக்கு ஒரு மெம்பர் வீதம் யூனியன் ஸோவியத்தின் மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். யூனியனின் ஒவ்வொரு குடியரசுக்கும் 25 மெம்பர்கள் வீதமும், ஒவ்வொரு சுயேச்சைக் குடியரசுக்கும் 11 மெம்பர்கள் வீதமும், ஒவ்வொரு சுயேச்சைப் பிரதேசத்திற்கும் 5 மெம்பர்கள் வீதமும், ஒவ்வொரு தேசியப் பிரதேசத்திற்கும் ஒரு மெம்பர் வீதமும் தேசிய இனங்களின் ஸோவியத்துக்கு மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இவ்விதமாக, மிகச் சிறிய தேசிய இனத்திற்குக் கூடப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. 1939-ம் வருஷத்தில் யூனியன்-ஸோவியத்தின் ஸ்தானங்களில் 38·9 சத வீதம் தொழிலாளர்களும், 35·3 சத வீதம் விவசாயிகளும், 52·8 சத வீதம் ஆபீஸ் சிப்பந்திகளும் தேக உழைப்புச் செய்யாதவர்களும் வகித்துவந்தார்கள்.

உயர்தர ஸோவியத் அல்லது பார்லிமெண்டின் இரு ஸோவியத்துகளும் (சபைகளும்) குறைந்த பட்சம் வருஷத்திற்கு இருமுறை பத்துத் தினங்களாவது கூடும். பெரும்பாலான மெம்பர்கள் தங்களுடைய வழக்கமான வேலைகளைச் செய்ய ஆரம்பித்துவிடுகிறார்கள். 'பிரஸிடியம்' என்பதுதான் உயர்தர ஸோவியத்தின் நிரந்தரக் கமிட்டியாகும். இதன் மெம்பர்கள் உயர்தர ஸோவியத்தால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். 'பிரஸிடியம்' ஸ்தானிகர்களையும் மந்திரிகளையும் நியமனம் செய்வதுடன் உடன்படிக்கைகளையும் ஊர்ஜிதம் செய்கிறது. அதன் தலைவர் தோழர் காலினின். ஜனங்களின் 'கமிஷார்கள்' என்று சொல்லப்படுகிறவர்களே மந்திரிகள். அவர்களுடைய கவுன்ஸிலே மந்திரி சபை.

ஸோவியத் யூனியனின் ஒவ்வொரு குடியரசுக்கும் சுயேச்சைப் பிரதேசத்திற்கும் தனித்தனியாகப் பார்லிமெண்டும் பிரஸிடியமும், அரசாங்க இலாகாக்களும் இருக்கின்றன. வேறு எந்தத் தேசத்திலும் இந்த ஏற்பாடு கிடையாது. உற்பத்திச் சாதனங்கள் தனி உடைமையாக

இல்லாததால் கட்டுமானம், நெசவு, சுரங்கத் தொழில் முதலிய தொழில்கள் ஒவ்வொன்றுக்கும் தனி மந்திரிகள் இருக்கிறார்கள். மத்திய ஸர்க்காரையும் பார்லிமெண்டை-யும் தவிர, ஸோவியத் யூனியனில் நமது நகர சபைகளை-யும் ஜில்லா போர்டுகளையும் ஒத்த ஸ்தாபனங்களும் இருக்கின்றன.

ஸோவியத் யூனியனில் தேர்ந்தெடுக்கப்பட்ட சபைகளின் ஒவ்வொரு மெம்பரும் தங்களுடைய தொகுதிகளைச் சேர்ந்த ஜனங்களின் வாழ்க்கை நிலைமையைப்பற்றி அறிவிக்கவேண்டும். அவர்கள் தங்களுடைய ஜனங்களுக்குத் தாங்கள் செய்துவரும் நன்மையையும் தெரிவிக்க வேண்டும். வாக்காளர்களுக்கு அதிருப்தி ஏற்பட்டால், அவர்கள் பொதுத் தேர்தலுக்குக் காத்திராமல் தங்களுடைய பிரதிநிதிகளைத் திரும்ப அழைத்துக்கொண்டு புதிய பிரதிநிதிகளை நியமனம் செய்யலாம்.

ஸோவியத் யூனியனில் கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றுதான் சட்ட பூர்வமான கட்சியாகும். ஸோவியத் அரசாங்கத்தில் கம்யூனிஸ்ட் கட்சியே ஆட்சிப் பொறுப்பை வகிக்கிறது. சகல ஸோவியத் ஸ்தாபனங்களுக்கும் கம்யூனிஸ்ட் கட்சியே தலைமை வகிக்கிறது. 1936-ம் வருஷத்தின் புதிய அரசியலிலேயே கம்யூனிஸ்ட் கட்சிக்குச் சட்ட பூர்வமான அங்கீகாரம் அளிக்கப்பட்டது. ரஷ்ய ஸோஷியல் ஜனநாயகக் கட்சியிலிருந்து ஸோவியத் யூனியனின் கம்யூனிஸ்ட் கட்சி வளர்ந்தது. இந்தக் கட்சியை ஸ்தாபித்தவர் லெனின். மொத்தத்தில் இக்கட்சியில் 80 லட்சம் மெம்பர்கள் இருக்கிறார்கள். இதில் எல்லோரும் சேரவேண்டும் என்ற நிர்ப்பந்தம் கிடையாது. இதன் நிபந்தனைகள் மிகவும் கடுமையானவை. கம்யூனிஸ்ட் கட்சியின் மெம்பர்கள் மிகவும் ஆர்வமும் ஊக்கமும் உள்ளவர்களாக இருக்கவேண்டும். ஸோஷியலிஸ்ட் கொள்கையைப் பரப்புவதற்கு அவர்கள் மிகவும் திறமையாக வேலைசெய்ய வேண்டும். அவர்கள் சிறந்த பிரஜைகளாக வாழ்ந்து மற்றவர்களுக்கு முன் மாதிரியாக இருக்கவேண்டும். கட்சியில் சேராத ஜனங்

களுக்கு அவர்கள் கம்யூனிஸ்ட் தத்துவத்தை விளக்க வேண்டும். ஸ்தல ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் அடங்கிய தேசீயக் காங்கிரஸில் முக்கியமான கம்யூனிஸ்ட் அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்படுகிருர்கள். காங்கிரஸ் கூடாத சமயங்களில் நிர்வாகக் கமிட்டி வேலே செய்கிறது. நிர்வாகக் கமிட்டி தேசீயக் காங்கிரஸுக்குக் கட்டுப் பட்டது. நிர்வாகக்கமிட்டியின் தீர்மானங்களே மெம்பர்கள் நிறைவேற்றி வைக்கவேண்டும்.

மனிதரை மனிதர் சுரண்டும் வழக்கத்தை ஒழித்து, தொழிலாளர்களே ஒரு ஸோஷியலிஸ்ட் சமுதாய அமைப்பை நோக்கி — கம்யூனிஸத்தின் முதல்படிக்கு அழைத்துச் செல்வதே கம்யூனிஸ்ட் கட்சியின் நோக்க மாகும். ஸோஷியலிஸத்திற்கும் கம்யூனிஸத்திற்கும் உள்ள வித்தியாசத்தைத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். ஸோஷியலிஸ்ட் சமுதாயத்தில் தொழில்-பாகு பாடு காரணமாக மனிதரை மனிதர் அடிமைப்படுத்தும் கொடுமை இருக்காது. சரீர உழைப்பாளிக்கும் மூளே உழைப்பாளிக்கும் உள்ள ஏற்றத் தாழ்வு ஒழிந்து விடும். நிலம், தொழிற்சாலேகள், ஆலேகள், சுரங் கங்கள் முதலிய உற்பத்தி - சக்திகள் அரசாங்கத்தின் வசம் இருக்கும். இப்பொழுது ஸோவியத் யூனி யனில் ஸோஷியலிஸம் பலமாக வேரூன்றிவிட்டது. ஸோவியத் மக்கள் ஸோஷியலிஸத்திற்கு அடுத்த படியான கம்யூனிஸத்தை நோக்கி முன்னேறிக் கொண் டிருக்கிருர்கள். "திறமைக்குத் தகுந்த ஊதியம் அல்ல, ஆனல் தேவைக்குத் தகுந்த ஊதியம்" என்பதுதான் கம்யூனிஸ்ட் சமுதாயத்தின் கொள்கை. ஒவ்வொரு மனி தனும் சமுதாயத்தின் நன்மையைக் கருதியே ஊழியம் செய்கிருன். தாராளமாகப் பிரதிபலனும் அனுபவிக் கிருன். வகுப்பு வேற்றுமை அறவே ஒழிந்துவிடுகிறது. உழைப்பாளிகள் சுதந்திரமாக வாழ்கிருர்கள். அவர்கள் தங்களுக்குள் எவ்வித வேற்றுமையும் பாராட்டமாட் டார்கள். ஒவ்வொரு பிரஜையும் யாதொரு நிர்ப்பந்தமும் இன்றி மனப்பூர்வமாகத் தங்களுடைய கடமையைச் செய்

கிறன். ஒரு கட்டுப்பாடான குடும்பத்தைப் போன்று கம்யூனிஸ்ட் குடும்பமும் ஒழுங்காக நடைபெறும். ஜனங்கள் தங்களுக்குத் தேவையான சாமான்களைப் பொதுப் பண்டசாலைகளிலிருந்து எடுத்துக் கொள் வார்கள். முதலாளித்துவத்தின் சுரண்டல் இல்லாத தால் தரித்திரம் இருக்காது. உற்பத்தி அமோகமாக இருக்கும். ஆகவே ஜனங்கள் தங்களுடைய தேவைக்கு அதிகமான சாமான்களைச் சேமித்து வைக்க மாட்டார் கள். சேமித்து வைக்கவேண்டிய அவசியமும் இல்லை. மக்கள் 'தரித்திர ராஜ்ய'த்திலிருந்து 'தாராள ராஜ் ய'த்தில் பிரவேசித்துவிடுவார்கள். கம்யூனிஸ்ட் சமூகம், ஆதியோடந்தம் மக்களே ஆட்சி செய்யும் சுதந்திர சமூகமே. இத்தகைய அமைப்பை அழிப்பதற்கு விரோதிகள் இருக்கமாட்டார்கள். ஆகவே அவர்களை ஒழிப்பதற்குப் பலாத்கார நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள அரசாங்கமும் வேண்டியதில்லை, கம்யூனிஸ்ட் சமூகத்திலே. இவ்வாறு ஸோஷியலிஸத்திற்கும் கம்யூனி ஸத்திற்கும் உள்ள வித்தியாசத்தைக் கார்ல் மார்க்ஸ் 74 வருஷங்களுக்கு முன்னர் நன்கு விளக்கியிருக்கிறர். மேற்கூறிய கம்யூனிஸ்ட் சமூக அமைப்பை நோக்கித்தான் ஸோவியத் மக்கள் முன்னேறிக் கொண்டிருக்கிறர்கள்.

1917-ம் வருஷத்தில் அதிகாரத்தைக் கைப்பற்றிய ஸோவியத் சர்க்கார் இன்னும் கம்யூனிஸ்ட் சமூகத்தை ஸ்தாபிக்கவில்லையா என்று கேட்கலாம். 1917-ம் வரு ஷத்தில் ரஷ்யா ஐரோப்பாவின் மிகவும் பிற்போக்குள்ள நாடுகளில் ஒன்ருக விளங்கியது. யுத்தத்தின் சொல் லொணுக் கஷ்டங்களை ரஷ்ய மக்களால் சகிக்க முடிய வில்லை. தேசத்தின் பொருளாதாரம் தகர்ந்து கொண் டிருந்தது. யுத்தம் நிற்கவேண்டும் என்று ஜனங்கள் துடித்துக் கொண்டிருந்தார்கள். சமாதானத்தை ஸ்தாபிக்க வேறு எந்த ஸர்க்காராலும் முடியவில்லை. இச்சமயத்திலேயே போல்ஷிவிக்கர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றினர். ஆரம்பத்தில் ஏற்பட்ட இன்னல்களைக் கவனிக்கும்போது ஸோவியத் அரசாங்கத்தின் சாதனை

களைக் குறைத்து மதிப்பிடமாட்டோம். இவ்வளவு காலம் அது பிழைத்து நின்றதே ஆச்சரியம் என்றல்லவா நாம் கருதுவோம்?

ஸோவியத் ரஷ்யாவில் இருக்கும் ஒரே அரசியல் கட்சி கம்யூனிஸ்ட் கட்சிதான். அங்கே கட்சி முறை அவசியம் இல்லை. பார்லிமெண்டு ஆட்சியிலேயே கட்சி முறை அவசியம். 1931-ம் வருஷத்திற்கும் 1937-ம் வருஷத்திற்கு மிடையே ஸோவியத் ரஷ்யாவுக்குப் பன்முறை விஜயம் செய்து அங்குள்ள நிலைமையை நன்கு கவனித்த பிரபல பிரிட்டிஷ் ஆசிரியராகிய ஸ்ரீ பாட்ஸ்லோவான் எழுதுகிறார்:—“கட்சி முறையில்லாத ஸோவியத் ரஷ்யாவிலே ஜனநாயக ஆட்சி நடப்பதாக எப்படி நம்ப முடியும் என்று நான் ஆச்சரியப்பட்டேன். நான் ஸோவியத் ரஷ்யாவுக்கு விஜயம் செய்த முதலாவது வருஷத்தில் இவ்விஷயமாகப் பல ரஷ்ய நண்பர்களிடம் கேட்டேன். அவர்கள் ஒருமுகமாய்ச் சொன்னார்கள்:—‘எதற்காக எங்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிகள் வேண்டும்? எங்களுடைய கட்சியோ உழைப்பாளிகளின் கட்சி. எங்களுடைய ராஜ்யமோ உழைப்பாளிகளின் ராஜ்யம். எங்களுடைய ஸோஷியலிஸ்ட் அரசாங்கத்தை ஒழிப்பதற்கு முதலாளித்துவக் கட்சிகள் வேண்டுமா?’ அவர்களுடைய பதில் எனக்குத் திருப்திகரமாகத் தோன்றவில்லை. ஸோவியத் ரஷ்யாவில் தங்கி உழைத்துவிட்டு இங்கிலாந்துக்குத் திரும்பி அங்குள்ள நிலைமையுடன் ஸோவியத் நிலைமையை ஒப்பிட்டுப் பார்த்த பின்னரே எனக்கு மனமாற்றம் ஏற்பட்டது.”

பார்லிமெண்டரி ஆட்சியில் கட்சி முறை ஒரு விசேஷ அம்சமாய்க் கருதப்படுகிறது. பொது நலனுக்காக உழைக்கும் பாட்டாளி மக்களின் அரசாங்கத்தில்—பொது உடைமை ராஜ்யத்தில்—கட்சிமுறைக்கு இடம் கிடையாது; அவசியமும் இல்லையே. பார்லிமெண்டு ஆட்சி முறையிலோ வெவ்வேறு கட்சிகள் சமூகத்தின் பல வேறு பிரிவுகளின் நலன்களுக்காக உழைக்கின்றன. ஏதேனும் குறிப்பிட்ட வேலைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு எந்தக் கட்சி

யினராவது பெரும்பான்மையோராகத் தேர்ந்தெடுக்கப்படு கிறார்கள். பிரிட்டிஷ் பார்லிமெண்டின் கட்சி முறையைப் பரிசீலனை செய்வோம். பிரிட்டிஷ் கன்ஸெர்வெடிவ், லிபரல் கட்சிகள் உற்பத்திச் சாதனங்களின் தனி உடைமையையும் முதலாளித்துவக் கொள்கையையும் பாதுகாப்பதற்காகவே ஏற்பட்டிருக்கின்றன. உற்பத்திச் சாதனங்கள் சொந்த மாக இல்லாத மக்களே முக்கியமாகத் தொழிற் கட்சியை ஆதரிக்கின்றனர். உற்பத்திச் சாதனங்களைச் சமூகத்தின் பொது உடைமை யாக்குவதே தொழிற் கட்சியின் முக்கிய மான வேலைத் திட்டமாகும். இத்தகைய கட்சிகள் புரட் சிக்கு முன்பு ரஷ்யாவிலே பல இருந்தன. இப்பொழுது பிரிட்டனில் தொழிற் கட்சி வகித்து வரும் ஸ்தானத்தையே ஏறக்குறையப் புரட்சிக்கு முன்பு ரஷ்யாவில் ஸோஷியல் ஜனநாயகக் கட்சி (போல்ஷிவிக்) வகித்து வந்தது. ஆனால் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் வழிகளில் மாத் திரம் வித்தியாசம் உண்டு.

ஸோஷியல் ஜனநாயகக் கட்சி புரட்சியை நடத்தி அதி காரத்திற்கு வந்தது. நிலச் சுவான்தார்களின் நிலங்களையும் முதலாளிகளின் உற்பத்திச் சாதனங்களையும் பறிமுதல் செய்தது. பின்னர் இந்த வர்க்கத்தினரின் நலன்களைப் பாது காப்பதற்குக் கட்சிமுறை அவசியம் இல்லாமல் போயிற்று. புதிய நிலைமையில் வெவ்வேறு கட்சிகள் வேலைசெய்ய இடம் கொடுத்தால், அவை ஸோஷியலிஸ்ட் புரட்சிக்கு விரோத மான எதிர்ப் புரட்சியை ஆரம்பிக்கவே முயற்சி செய்யும். ஆகவே, அவற்றை ஸோஷியலிஸ்ட் புரட்சி முறியடித்து அழித்துவிட்டன. புரட்சியின் தலைமையில் ஏற்பட்ட கம்யூனிஸ்ட் கட்சி, புரட்சியின் நோக்கங்களை நிறை வேற்றிவைக்க ஆரம்பித்தது. ஸோஷியலிஸ்ட் புரட்சி, உற்பத்திச் சாதனங்களைப் பலமான அஸ்திவாரத்தில் பொது உடைமை யாக்கிவிட்டதால், ஜன சமுதாயத்தில் கட்சிமுறை புனர் ஜன்மம் எடுப்பதற்கு அடிப்படையே இல்லாமல் போய்விட்டது. மேலும் ஸோவியத் அர சாங்கம் ரஷ்ய மக்களின் நன்மைக்காக அவர்களாலேயே ஸ்தாபிக்கப்பட்டது. ஆகவே கட்சி முறை அவசியம்

இல்லை. 'கட்சி முறை' ஜனநாயக ஸ்தாபனங்களுக்கு மூலாதாரம் என்று கூறுவது முற்றிலும் தவறு என்பது தான் ஸோவியத் தலைவர்களின் அபிப்பிராயம். முரண்பாடுகள் உள்ள வர்க்கங்களுக்கு இடையே ஏற்படும் வித்தியாசங்களைச் சமரஸப்படுத்திக் கொள்வதற்காகவே பார்லிமெண்டு அரசாங்கங்களில் கட்சி முறை ஏற்பட்டிருப்பதாக அவர்கள் கருதுகிறுர்கள்.

ஸோவியத் யூனியனில் எதிர்க் கட்சியால் எவ்விதப் பிரயோஜனமும் ஏற்படாது; தீங்குதான் ஏற்படும். தொழிலாளர்களைக் கசக்கிப் பிழிந்துவந்த பழைய முதலாளிகள், ஏழை மக்கள் உழைப்பின் பலனை அனுபவித்து வந்த மனித அட்டைகள், தரகர்கள், மற்றும் புதிய சமூக அமைப்பை எதிர்த்தவர்கள் ஆகியோர் இன்றைய ஸோவியத் சமூகத்தின் சத்துருக்கள். அவர்கள் ஒன்று சேர்ந்து ஸோவியத் சர்க்கார் செய்துகொண்டிருக்கும் முன்னேற்ற வேலைகளைத் தடைசெய்வார்கள். அவர்கள் ஸோவியத் சர்க்காரின் நற்பெயரையும் செல்வாக்கையும் கொடுக்க முயல்வர். ஆகவே 'எதிர்க் கட்சி' என்னும் பெயரால் ஏற்படும் இக் கூட்டுறவு அறவே வெறுக்கப்படுகிறது.

போல்ஷிவிக் ஆட்சியின் ஆரம்ப காலத்தில் அரசாங்க யந்திரத்திற்கும் கம்யூனிஸ்ட் ஸ்தாபனத்திற்கும் வித்தியாசம் கண்டுபிடிக்க முடியவில்லை. காலக்கிரமத்தில் வித்தியாசங்கள் புலப்பட்டன. அரசாங்கத்தின் அலுவல்களும் கம்யூனிஸ்ட் கட்சியின் கடமைகளும் திட்டமாக நிர்ணயிக்கப்பட்டன. போல்ஷிவிக் கொள்கைகளை நிர்ணயிப்பதற்குக் கட்சி ஸ்தாபனம் ஒரு கருவியாக அமைந்தது. கட்சித் தலைவர்கள் போட்ட திட்டங்களையும் நிர்ணயித்த கொள்கைகளையும் நிறைவேற்றி வைக்கும் கருவியாக அமைந்தது அரசாங்கம். பழைய அரசியலின்கீழ் அரசாங்கத்தையும் கட்சி ஸ்தாபனத்தையும் பூரணமாகப் பிரிக்க முடியவில்லை. ஸோவியத் அரசாங்கத்தில் முக்கியமான ஸ்தானங்கள் ஸோவியத் காங்கிரஸ்களால் நிரப்பப்பட்டன. ஆகவே

ஸோவியத் ஆட்சி முறையில் கம்யூனிஸ்ட் கட்சியே முக்கிய மான ஸ்தானத்தை வகித்தது. கட்சியின் நோக்கங்களையும் கட்டளைகளையும் நிறைவேற்றி வைக்கும் ஸ்தாபனமாகவே விளங்கியது அரசாங்கம். 1936-ம் வருஷப் புதிய அரசியல் திட்டத்தில் பார்லிமெண்டரி ஜனநாயக ஆட்சி முறையின் சிறந்த அம்சங்கள் புகுத்தப்பட்டன.

II உண்மையான ஜனநாயகம்

ஸோவியத் அரசாங்கம் ஸோவியத் மக்களின் நன்மைக்காக ஸோவியத் மக்களாலேயே நடத்தப்படுகிறது. அது ஸோவியத் மக்களின் அரசாங்கமே. ஆகவே ஸோவியத் அரசாங்கம் ஜன நாயகத்தின் எல்லா யோக்யதாம்சங்களையும் பெற்றிருக் கிறது. உண்மையான ஜனநாயக அரசாங்கத்தில் ஒவ்வொரு நிர்வாக இலாகாவிலும் ஜனங்கள் பங் கெடுத்துக்கொள்ளச் சந்தர்ப்பம் இருக்க வேண்டும். ஸோவியத் மக்கள் அனைவருக்கும் இச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருக்கிறது. தேசிய இனம், ஆண் பெண் என்னும் வேற்றுமைகள் காரணமாகச் சிலர் அரசாங்க நிர்வாகத்தில் பங்கு பெறமுடியாமல் இருந்தால், குறுகிய ஜனநாயகத்திற்கு இதைப் பார்க்கிலும் சிறந்த அத்தாட்சி தேவையில்லை. இத்தகைய குறுகிய ஜனநாயகம் ஸோவி யத் ரஷ்யாவில் தலைகாட்ட முடியாது. பிரஜைகள் அனை வரும் தங்களுடைய யோக்யதாம்சங்களுக்குத் தகுந்தபடி அரசாங்க நிர்வாகத்தில் பங்கு எடுத்துக்கொள்ள உரிமை பெற்றிருப்பதே உண்மையான ஜனநாயகமாகும். நிர் வாகத்தில் பங்கு எடுத்துக்கொள்ள உரிமை பெற்றிருந் தால் மாத்திரம் போதுமா? அந்த நிர்வாகத்தில் உள்ள குறைகளை எடுத்துக் கூற உரிமை யில்லாவிட்டால், அதை ஜனநாயகம் என்று சொல்லமுடியுமா? ஆகவே பத்திரிகைகளும் பொதுக்கூட்ட மண்டபங்களும் பொது மக்கள் வசம் இருக்க வேண்டும். அவை ஆட்சி புரியும்

ஒரு சிறிய கூட்டத்தின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டிருக்கக் கூடாது.

ஸோவியத் யூனியனில் உற்பத்திச் சாதனங்களும் பிரசார சாதனங்களும் சமூகத்தின் பொது உடைமையா யிருக்கின்றன. இவ்வாறிருந்தால்தான் முதலாளி வர்க்கம் அதிகார பீடத்தில் அமர்ந்த சமூகத்தின்மீது ஆதிக்கம் செலுத்த முடியாது. ஸோவியத் யூனியனில் தொழிற்சாலைகள் ஒருவருக்கும் சொந்தமல்ல. அவை சமூகத்தின் பொதுச் சொத்துக்கள். எனவே ஒருவன் மற்ருெருவன்மீது ஆதிக்கம் செலுத்தமுடியாது. முதலா ளித்துவ நாடுகளில் சொத்து, குடியிருப்பு இவற்றைக் கவனித்தே வாக்குரிமை வழங்கப்பட்டிருக்கிறது. ஆனல் ஸோவியத் யூனியனிலோ வயது வந்தவர் அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டிருக்கிறது. ஒரு தேசிய இனம் மற்ருெரு தேசிய இனத்தை அடக்கியாள முடியாது. ஏனெனில் சிறுபான்மையோரின் கலாசாரம், பாஷை, கல்வி, முதலிய உரிமைகள் சட்ட பூர்வமாகப் பாது காக்கப்பட்டிருக்கின்றன. தேசிய இனங்களுக்குச் சுய நிர்ணய உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. எனவே ஸோவியத் மக்கள் உண்மையான ஜனநாயகத்தை அனு பவித்து வருகிருர்கள்.

ஜனநாயகம் என்பது தனிப்பட்ட ஜனங்களுக்கு அபிப்பிராய சுதந்திரம் அளிப்பது மாத்திரமல்ல. ஜனங் களின் நலன்களைப் பாதிக்கக்கூடிய அபிப்பிராயங்கள், ஜன சமுதாயத்தின் சுபிக்ஷத்திற்காக அமல் நடத்த வேண்டிய திட்டத்திற்குத் தடையாக இருக்கும் கருத் துக்கள் முதலியவற்றை மறுப்பதற்கும் ஜனங்களுக்குச் சுதந்திரம் இருக்கவேண்டும். முதலாளித்துவ அரசாங் கத்தின்கீழ் உள்ள ஜனநாயக ஸ்தாபனங்களின் கட்டுப் பாட்டை மீறுகிறவர்கள் ஸ்தாபனங்களிலிருந்து மாத்திரம் வெளியேற்றப்படுவார்கள். ஆனல் ஸோவியத் அர சாங்கம் அத்தகைய அங்கத்தினரை ஸ்தாபனத்திற்கு வெளியே தள்ளிவிட்டுச் சும்மா இருக்க முடியாது. இதற்கு இரு முக்கியமான காரணங்கள் இருக்கின்றன. முதலாவ

தாக ஸோவியத் ஸ்தாபனத்திலிருந்து தள்ளப்படுகிறவர்களைச் சுற்றிலும் உள்ள முதலாளித்துவ அரசாங்கங்கள் ஏற்றுக்கொள்ளும். இரண்டாவதாக, அவ்வாறு தள்ளப்படுகிறவர்கள் நாட்டுக்கு வெளியே இருந்தால், அவர்களை விரோதிகள் பயன்படுத்திக்கொள்வார்கள்.

ட்ராட்ஸ்கி ஸோவியத் அரசாங்கத்திலிருந்து வெளியே தள்ளப்பட்டார். பின்னர் ஸைபீரியாப் பிரதேசத்தில் தனித்து வைக்கப்பட்டார். இறுதியாக நாடு கடத்தவும் பட்டார். இவையெல்லாம் ஸ்டாலினுடைய ஸர்வாதிகாரத்தைக் காட்டவில்லையா என்று கேட்கலாம். ட்ராட்ஸ்கியின் ஸ்தாபனத்தைக் கலைத்ததும் ஸர்வாதிகாரத்தின் நடவடிக்கைதானே என்றும் கேட்கலாம். ஸோவியத் ரஷ்யாவில் ராஜீய எதிரிகளைச் சமூகப் பிரஷ்டம் செய்வது அக்கிரமம் என்றும் சிலர் எண்ணலாம். மாறுபட்ட அபிப்பிராயத்திற்காக மாத்திரம் ஸோவியத் பிரஜைகள் பிரஷ்டம் செய்யப்படுவதில்லை. சிலர் தங்களுடைய சொந்தக் கொள்கைகள் தோல்வியடைந்த பிறகும், அவற்றைத் திரும்பத் திரும்ப ஜனங்கள் மீது திணிக்கப் பார்க்கிறார்கள். அவர்கள் நிர்மாண வேலைகளுக்குத் தடையாக இருப்பதால் பிரஷ்டம் செய்யப்படுகிறார்கள். ட்ராட்ஸ்கி அவ்வாறேயிருந்தார். அவர் பல வருஷங்களாக ஸோவியத் ஸர்க்காருக்கு விரோதமாகத் தமது சிறுபான்மை அபிப்பிராயத்தைப் புகுத்த எத்தனித்தார். அவருடைய நடத்தையைப் பற்றி நீண்ட காலம் விவாதம் நடந்தது. பொதுஜன ஆதரவு தமக்கு இல்லை என்பதை அறிந்து, ஜனங்களுடைய ஜனநாயகத் திட்டங்களைத் தகர்ப்பதற்காக அவர் ரகஸ்ய சதியாலோசனைக் கூட்டங்களை நடத்தலானார். இக்காரணமாகத் தான், அவர் தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டார். ட்ராட்ஸ்கிக்குப் பேச்சுச் சுதந்திரம் கொடுத்திருக்கலாம். லண்டனில் பாஸிஸ்ட் தலைவர் ஆஸ்வால்ட் மோஸ்லி நடத்தும் கூட்டங்களுக்குப் போலீஸ் அதிகாரிகள் பாதுகாப்பு அளிப்பதைப் போல, ஸோவியத் போலீஸ் அதிகாரிகளும் ட்ராட்ஸ்கியின் கூட்டங்களுக்குப் பாதுகாப்பு

அளித்திருக்கலாம். ஆனால் ஸோவியத் யூனியனில் இத் தகைய நடவடிக்கை ஜனநாயகக் கொள்கைக்கும் பொது ஜன நலன்களுக்கும் விரோதமானதாகக் கருதப்படும். ஆகவே பொதுஜனங்களின் ஸ்தாபனம் எதிர்க் கட்சியை நசுக்குவதைத் தவிர வேறு வழியில்லை. அவ்வாறே செய்யப்பட்டது. மற்றொரு எதிர்ப் புரட்சியை நடத்து வதன் மூலமாகவே ஸோவியத் தொழிலாளர்களுக்குக் கதிமோக்ஷம் ஏற்படும் என்று ட்ராட்ஸ்கி 'புரட்சிக்குத் துரோகம்' என்னும் தமது நூலில் பட்டவர்த்தனமாக எழுதியிருந்தார்.

எதிர்க் கட்சியின் எல்லாத் தலைவர்கள் மீதும் ஸோவியத் ஸர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுத் துக்கொள்ளவில்லை. ஸோவியத் ரஷ்யாவுக்கு விரோத மான அந்நிய நாடுகள், ஸோவியத் அரசாங்கத்தின் உள்நாட்டு விரோதிகளுடன்—முதுகெலும்பு இல்லாத வர்களுடன் — ஸோவியத் தொழிலாளர்களின் நம் பிக்கையை ஒருபோதும் பெற்றிராத கோழைத் தலைவர்க ளுடன்—தொடர்பு வைத்துக் கொள்ளலாயின. அவர்கள் பதவி இழந்தவர்களாகவும், மீண்டும் தலைமைப் பதவி களில் மோகம் கொண்டவர்களாகவும் இருந்தால், அயல் நாடுகளின் உதவியை மகிழ்ச்சியுடன் வரவேற் பார்கள். ஏனெனில் அவர்கள் ஸோவியத் பொதுஜன ஆதரவின் மூலம் அதிகாரத்திற்கு வரமுடியாதென்பதை நன்கு அறிந்திருப்பார்கள். இத்தகைய உள்நாட்டுச் சத்துருக்களை அழிப்பதில் ஸோவியத் ஸர்க்கார் கொஞ் சங்கூடத் தாக்ஷிண்யம் காட்டுவதே யில்லை. இவ்விஷய மாக அடுத்த அத்தியாயத்தில் விரிவாகக் காணலாம்.

ஒரு ஜனநாயக ஸ்தாபனத்தில் கட்டுப்பாட்டைக் கண்டிப்பாக அமல் நடத்துவது சாதாரணப் பிரஜைகளின் சுதந்திரத்தில் கை வைப்பதாகாது. அத்தகைய கட்டுப் பாடு பொது நன்மைக்கு அவசியம் என்பதைச் சாதாரணப் பிரஜைகள்கூட உணர்கிறார்கள். ஆகவே அவர்கள் அக் கட்டுப்பாட்டிற்கு அடங்கி நடக்கிறார்களே யொழிய, மீறு கிறார்களில்லை. ஸோவியத் உழைப்பாளி மக்கள் ஸர்க்கா

ரைப் பொதுக் கூட்டங்களில் தாக்கிப்பேச விரும்பவில்லை. ஏனெனில் அரசாங்கம் அவர்களுடையது தானே. ஆகவே ஸோவியத் மக்கள் தங்களுடைய அரசாங்கத்தைப் பாது காக்கவே விரும்புவார்கள். ஸோவியத் யூனியனில் ஸர்க் காரைக் குறைகூற விரும்புகிறவர்கள் இல்லை என்று கூற முடியாது, இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் அவர்கள் மிகச் சிலரே.

1935-ம் வருஷத்தில் பிரபல அமெரிக்கப் பத்திரிகை நிருபர் ஸ்ரீ ராய் ஹோவார்டு ஸ்டாலினுடன் விவாதித்த பல விஷயங்களில் குறிப்பிடத் தகுந்தது சுதந்திரத்தைப் பற்றியதாகும். அவரிடம் ஸ்டாலின் கூறினார்:

> "தனி மனிதர்களுக்குச் சுதந்திரம் வேண்டும் என்கிறீர் களே! வேலையின்றிப் பட்டினியாகச் சுற்றும் ஒரு மனிதனுக்கு—வேலை கிடையாமல் தவிக்கும் அந்தத் தனி 'ஆத்மாவுக்கு' எவ்வாறு சுதந்திரம் இருக்க முடியும்? எங்கே மனிதரை மனிதர் சுரண்டும் கொடுமை ஒழிக்கப்பட்டிருக்கிறதோ—எங்கே சிலர் பலரை அடக்கி யாளவில்லையோ – எங்கே வேலையில்லாத் திண்டாட் டமும் தரித்திரமும் துன்புறுத்தவில்லையோ – எங்கே மனிதர்களில் வேலை, வீடு, உணவு இவை எந்த நிமிஷத்திலும் பறிக்கப்படும் என்ற பயம் இல்லையோ— அங்கேதான் – அந்தச் சமுதாயத்தில்தான், உண்மையான சுதந்திரம்—கடுதாசிச் சுதந்திரமல்ல—நிலைபெற முடியும்."

ஸோவியத் யூனியனில் சுதந்திரத்திற்கு உள்ள தாத்பரியத்தை ஸ்டாலின் அழகாகவும் ஆணித்தரமாகவும் விளக்கிவிட்டார். எந்தத் தேசத்தை எடுத்துக் கொண் டாலும் ஆண்களும் பெண்களும் முதன் முதலில் தங்க ளுடைய ஜீவனத்திற்குப் பாதுகாப்பை விரும்புகிறார்கள். ஏனெனில் இத்தகைய பாதுகாப்பு உண்மையான சுதந் திரத்திற்கு அத்தியாவசியமாகும். தேசத்தின் சமூக, பொருளாதார வாழ்க்கையைப் பூரணமாக மாற்றி யமைத்தாலொழிய, ஜீவனத்திற்குப் பாதுகாப்பு ஏற்பட முடியாது என்பதையும், வாழ்க்கைத் தரத்தைப் படிப்

படியாக உயர்த்த முடியாதென்பதையும் ஸோவியத் மக்கள் அனுபவ பூர்வமாக உணர்ந்து கொண்டனர். ஸோவியத் ரஷ்யாவைப் போல ஜீவனத்திற்குப் பாது காப்பு ஏற்பட்டாலன்றி, மற்ற நாடுகளின் உழைப்பாளி-மக்கள் தங்களுடைய கற்பனு சக்தியை அபிவிருத்தி செய்து கொள்ள முடியாது. தொழிற்சாலைகளை ஓட்டுவதற்குத் தங்களுடைய உரிமையைத் தொழிலாளர்கள் ஸ்தாபித்துக் கொண்டதாலும், நிலங்களைச் சொந்தமாக்கிப் பண்படுத்துவதற்கு விவசாயிகள் தைரியமாக முன் வந்ததாலுமே ஸோவியத் அரசாங்கம் ஏற்பட்டது. ஆகவே பாட்டாளி மக்கள் தங்களுடைய சுதந்திர உரிமையை ஸ்தாபித்து, புதிய சமூக அமைப்புக்கு அஸ்திவாரம் போட்டனர். முன்னர் கனவிலும் எண்ணுதற்கு அரிய வசதிகளைப் பாட்டாளி மக்கள் புதிய சமூக அமைப்பின் மூலமாகப் பெற்றனர். பொருளாதார வசதிகள், கல்வி பயில்வதற்குச் சமய சந்தர்ப்பங்கள், கலை ஆராய்ச்சிக்குச் சௌகரியங்கள் முதலியன அவர்களுக்குக் கிட்டின.

புதிய ஸோவியத் சமூக அமைப்பைப் பழைய ரஷ்யாவை ஆட்சி புரிந்த வர்க்கத்தினர் விரும்பவில்லை. விவசாயிகள் நிலங்களுக்குத் தங்களுடைய பாத்தியதையை ஸ்தாபித்துக் கொண்டதால், பழைய நிலச்சுவான்தார்களுக்கு இந்தப் பாத்தியதை மறுக்கப்பட்டது. தொழிலாளர்கள் தொழிற்சாலைகளின் நிர்வாகத்தில் தங்களுடைய பாத்தியதையை ஸ்தாபித்துக் கொண்டதால், அந்தப் பாத்தியதை பழைய முதலாளிகளுக்குக் கொடுக்கப்படவில்லை. தனி உடைமைகளாக இருந்த பத்திரிகைகள் நடத்திவந்த பொய்ப் பிரசாரத்தை ஒழிக்கும் பொருட்டு, அப்பத்திரிகைகள் பொதுச் சொத்துக்களாக்கப்பட்டன. இதன் பயனுகப் பொது ஜனங்களுக்குப் பத்திரிகைகளை நடத்த முதல் தடவையாகச் சுதந்திரம் ஏற்பட்டது. பழைய சொந்தக்காரர்களுக்கு இச்சுதந்திரம் மறுக்கப்பட்டது. அவர்கள் அக்காலத்தில் பணக்காரர்களாக இருந்ததாலேயே பத்திரிகைகளைச் சொந்தமாக நடத்த முடிந்தது; இஷ்டம்போல் பொய்ப் பிரசாரம் செய்யவும் முடிந்தது.

முதலாளிகளும் நிலச்சுவான்தார்களும் முன்னர் அனுபவித்து வந்த சுதந்திரத்தை ஸோவியத் பாட்டாளி மக்கள் அனுபவிக்கலாயினர். நிலங்களையும் தொழிற்சாலைகளையும் பொதுச் சொத்துக்களாக்கியதுடன் ஸோவியத் அரசாங்கம் நிற்கவில்லை. எல்லாக் கல்வி ஸ்தாபனங்களும் தொழிலாளர்களுக்குத் திறந்துவிடப்பட்டன. தொழிலாளர் வர்க்கத்தைச்சேர்ந்த மாணவர்களுக்கு ஆரம்பத்தில் சில பேராசிரியர்கள் பாடம் சொல்லிக் கொடுக்க மறுத்தனர். மற்றும் சில பேராசிரியர்கள் பாடம் சொல்லிக் கொடுக்க இணங்கிவிட்டுத் தங்களுடைய புதிய மாணவர்களைப் பழிக்க ஆரம்பித்தனர். இன்னும் சில பேராசிரியர்கள் ஸோவியத் அரசாங்கத்தின் விரோதிகளிடம் பகிரங்கமாக அனுதாபம் தெரிவித்தனர். "இந்தப் பேராசிரியர்கள் எங்களுக்கு வேண்டாம். இவர்கள் எங்கள் இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. இவர்களை நீக்கி விடவேண்டும்" என்று மாணவர்கள் புகார் செய்தனர். புதிய விதமான மாணவர்களுக்கு அவர்களுடைய அபிப்பிராயத்திற் கிணங்க, திறமையாகவும் மனப்பூர்வமாகவும் பாடம் சொல்லிக் கொடுக்கக்கூடிய பேராசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டனர். இதுவே உண்மையான ஜனநாயகம். ஆகவே ஸோவியத் சோஷியலிஸ்ட் ரஷ்யாவில் மாணவர்களுக்குக் கூட வேறு எந்த நாட்டின் மாணவர்களைப் பார்க்கிலும் அதிக சுதந்திரம் இருக்கிறது.

ஸோவியத் ரஷ்யாவில் மத சுதந்திரம் இல்லை என்று சொல்வதற்கு ஆதாரம் கிடையாது, ஆனால் ஸோவியத் ரஷ்யாவில் உள்ள திருச்சபைகள் (சர்ச்சுகள்) மற்ற நாடுகளிலுள்ள திருச்சபைகளைப் போல் சொத்துக்கள் வைத்துக்கொண்டு அவற்றின் வருமானத்தை அனுபவிக்க முடியாது. அவை குழந்தைகளுக்குக் கட்டாய மத போதனை செய்யமுடியாது. குழந்தைகளுக்குக் குடும்பங்களில் மாத்திரமே மதபோதனை செய்யலாம். குழந்தைகள் பெரியவர்களானதும், அவர்களுடைய மனம் பக்குவமடைந்து விடுமாதலால், இஷ்டப்பட்டால் அவர்கள் தேவாலயங்களுக்குச் செல்லலாம். இப்பொழுதும்

ஸோவியத் ரஷ்யாவிலே ஜனங்கள் தேவாலயங்களுக்குச் சென்று பிரார்த்தனை செய்வதற்கு எவ்விதமான தடையும் கிடையாது. குழக்தைகளின் மனம் பக்குவம் அடைவதற்கு முன்னர், 'எது கெட்டது, எது நல்லது?' என்று தெரிந்துகொள்ள அவர்களுக்குப் பகுத்தறிவு ஏற்படுவதற்கு முன்னர், அவர்களுக்கு மத உணர்ச்சிகளை 'இஞ்செக்ஷன்' செய்ய யாருக்கும் உரிமை கிடையாது என்பதுதான் ஸோவியத் சர்க்காரின் அபிப்பிராயமாகும். ஸோவியத் ரஷ்யாவிலுள்ள திருச்சபைகள் மதப் பிரசாரம் செய்யப் பத்திரிகைகளையும் ரேடியோ நிலையங்களையும் உபயோகிக்க முடியாது. ஆனால் மத விஷயமாக அபிப்பிராயங்கள் தெரிவிக்க ஸோவியத் பிரஜைகளுக்கு உரிமை உண்டு. பிரிட்டன் முதலிய நாடுகளில் திருச் சபைகள் பள்ளிக்கூடங்கள் நடத்துகின்றன. கட்டாய மத போதனையும் நடக்கிறது. ரேடியோ மூலம் மதப்பிரசாரம் செய்ய மிகுந்த நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மத விஷயங்களுக்குப் பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுக் கின்றன. மற்றும் திருச்சபைகள் லாபகரமான காரியங்களை நடத்த அனுமதிக்கப்படுகின்றன. கட்டடங் களின் வாடகை வருமானம், வட்டி வருமானம் முதலிய வற்றை அவை அனுபவிக்கின்றன. இவ்வளவு சௌகரி யங்கள் இருந்தும், அந்நாடுகளில் இளைஞர்களுக்கு மதத்தில் ஆர்வம் குறைந்துவருவது கண்கூடு. பிரிட்டிஷ் இளைஞர்களுக்கு மதத்தில் ஆர்வம் குறைந்துவருவதாக பாட்ஸ்லோவான் என்னும் பிரபல பிரிட்டிஷ் ஆசிரியர் ஸ்பஷ்டமாகக் கூறியிருக்கிறார். பிரிட்டன் முதலிய நாடு களில் இருப்பதைப்போல, ஸோவியத் ரஷ்யாவில் திருச் சபைகளுக்கு ஆத்மார்த்த வேலைகளைச் செய்ய லௌகிக சௌகரியங்கள் (பண வசதி முதலியன) இல்லை. மனித ஆத்மாக்களுக்கு மதம் அவசியம் என்றால், முதலாளி வர்க்கத்தின் ஆதிக்கத்திலிருந்தும், லாபம் திரட்டும் கும்பல் களிலிருந்தும் விடுபட்டிருக்கும் ஸோவியத் ரஷ்யாவிலே அந்த அவசியத்தை நிரூபிக்கவும் ஸ்தாபிக்கவும் சிறந்த சந்தர்ப்பம் இருக்கிறது. இதுவே ஸோவியத் சர்க்காரின் அபிப்பிராயம்.

III பொதுஜன விரோதிகள்

எந்த அரசியல் கட்சியை எடுத்துக்கொண்டாலும், அதன் மதிப்பையும் நம்பிக்கையையும் இழந்த தலைவர்களுக்கும் அதன் விரோதிகளுக்கு மிடையே அதிக வித்தியாச மிருக்காது. சொற்ப வித்தியாசம் இருந்தாலும் நாளடைவில் மறைந்துவிடுகிறது. இறுதியில் அந்தக் கட்சியின் மாஜித் தலைவர்கள் அதன் புதிய விரோதிகளாகிறார்கள்; அதன் பழைய விரோதிகளின் புதிய நண்பர்களாகிறார்கள். உதாரணமாக, நமது நாட்டிலும் கூடப் பழைய காங்கிரஸ் தலைவர்கள் இப்பொழுது காங்கிரஸையே கடுமையாகத் தாக்கிப் பிரசாரம் செய்து வருவதைப் பார்க்கிறோம். உண்மையான கட்சித் தலைவர்களுக்கு அதிகார வேட்கையும் பதவி-மோகமும் இருக்கக்கூடாது. அவர்கள் தங்களுடைய கட்சிக் கொள்கைகளிலே அசைக்க முடியாத நம்பிக்கையும் அபாரமான விசுவாசமும் வைத்திருக்கவேண்டும். அவர்கள் தங்களுடைய கட்சியின் வளர்ச்சிக்காகப் பிரதிபலனை எதிர்பார்க்காமல் உழைக்க வேண்டும். எத்தகைய தியாகங்களையும் செய்யத் தயாராக இருக்கவேண்டும். ஆனால் சுயநலமும் பதவி - மோகமும் அதிகார வேட்கையும் உள்ளவர்கள் எந்தக் கட்சியின் தலைவர்களா யிருந்தாலும் சரி, அந்தக் கட்சியின் பரம விரோதிகளே. சொந்தத் திறமை, தியாகம், பரோபகாரம், இவற்றின் மூலம் பொதுஜனங்களின் நம்பிக்கையையும் அன்பையும் பெற்று அதிகாரத்திற்கு வரமுடியாதவர்களுக்குப் பொறாமையும் எரிச்சலும் ஏற்படுகின்றன. அவர்கள் விரோதிகளாகிறார்கள். இந்த விரோதிகளில் இரு சாரார் உண்டு. ஒரு சாரார் பகிரங்கமான விரோதிகளாகி வெளியேயிருந்து எதிர்ப்பார்கள். இரண்டாவது சாரார் ரகஸ்ய விரோதிகளாவார்கள், அவர்கள் தங்களுடைய கட்சியுடன் ஒட்டிக்கொண்டு, உள்ளிருந்துகொண்டே விரோதமாக வேலை செய்வார்கள். முதல் இனத்தைச் சேர்ந்தவர்தான் ட்ராட்ஸ்கி. இரண்டாவது இனத்தைச் சேர்ந்தவர் புக்காரின்.

ட்ராட்ஸ்கியும் புக்காரினும் ஆரம்பத்தில் ஜனநாயக வழிகளையே பின்பற்றி வந்தனர். ஜனநாயக வழிகளிலே அவர்களுடைய நோக்கம் நிறைவேறியவரை, அவர்கள் பலாத்காரத்தில் இறங்கவில்லை. அவர்கள் சுயநலமிகள் என்பதை நாளடைவில் பொதுஜனங்கள் அறிந்துகொண்டனர். பின்னர் அவர்களுக்குப் பொதுஜனங்களின் ஆதரவு கிடைக்கவில்லை. பொதுஜன ஆதரவை இழந்த தலைவர்கள் தங்களுடைய செல்வாக்கையும் அதிகாரத்தையும் எவ்வாறு காப்பாற்றிக்கொள்ள முடியும்? ஆகவே ட்ராட்ஸ்கியும் புக்காரினும் பலாத்காரத்தில் இறங்க வேண்டியதாயிற்று.

ஸோவியத் ரஷ்யாவிடம் ட்ராட்ஸ்கியும் புக்காரினும் நடந்துகொண்ட மாதிரியே, ஸ்பெயினிடம் ஜெனரல் பிராங்கோ நடந்துகொண்டார். பொதுத் தேர்தல்களில் வெற்றி கிடைப்பதற்கு ஓரளவு சந்தர்ப்பமாவது இருந்த வரையில், ஸ்பானிஷ் பாஸிஸ்டுகள் பலாத்காரத்தில் இறங்கவில்லை. அவர்கள் தங்களுக்குப் பொதுஜனங்களிடம் சிறிதும் செல்வாக்குக் கிடையாதென்றும், பொதுத் தேர்தலில் நிச்சயமாக வெற்றி கிடைக்காதென்றும் தெரிந்ததுமே பலாத்காரச் செயல்களில் இறங்கினர். ரஷ்யாவில் ட்ராட்ஸ்கி கட்சியினரும் ஸ்பெயினில் பிராங்கோ கட்சியினரும் பொதுஜன ஆதரவின்மூலம் அதிகாரத்திற்கு வரமுடியாதென்று தெரிந்துகொண்டார்களல்லவா? ஆகவே ஆயுதம் எடுத்துக் கலகம் செய்தாலும் தங்களுக்குப் பொதுஜன ஆதரவு கிடைக்காது என்பதாக அவர்கள் உணர்ந்துகொண்டார்கள். அவர்கள் தங்களுடைய தேச விரோதிகளின்—ராணுவ பலமும் யுத்த வெறியும் உள்ள அந்நிய வல்லரசுகளின்—உதவியை நாடினார்கள்; தேசத் துரோகம் செய்தார்கள். ரஷ்யாவின் ட்ராட்ஸ்கி கோஷ்டியினருக்கும் ஸ்பெயினின் பிராங்கோ கட்சியினருக்கும் ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் இம் மூன்று வல்லரசுகளும் உதவிபுரிந்தன என்று சொல்லத் தேவையில்லை. இந்த இரு கோஷ்டியினராலுமே சொந்த பலத்தைக்கொண்டு

அதிகாரத்தைக் கைப்பற்றமுடியாது. அந்நிய வல்லரசுகளின் உதவி அவர்களுக்கு இன்றியமையாததாயிற்று.

ட்ராட்ஸ்கி ஸோவியத் ரஷ்யாவின் கொடிய விரோதியானுர். அவரும் அவருடைய சகாக்களும் தங்களுடைய புஸ்தகங்களிலும் கட்டுரைகளிலும் ஹிட்லரையும் கெப்பில்ஸையும் போலவே ஸோவியத் ரஷ்யாவைப் பலமாகக் கண்டித்திருந்தார்கள். ஆனுல் ஹிட்லர் மாஸ்கோவில் யூத அரசாங்கம் 'தர்பார்' நடத்துவதாகப் பழித்து வந்தார். யூதராகிய ட்ராட்ஸ்கியோ மாஸ்கோவில் ஸ்டாலின் 'தர்பார்' நடத்தி வந்ததாக வசைமாரி பொழிந்தார். இதுதான் ஹிட்லரின் வசைமொழிக்கும் ட்ராட்ஸ்கியின் வசைமொழிக்கும் உள்ள வித்தியாசம். "புரட்சிக்குத் துரோகம்" என்னும் தமது நூலில் தொழிலாளர்களுக்குக் கதிமோக்ஷம் ஏற்படவேண்டுமானுல், அவர்கள் மற்ருெரு புரட்சியைச் செய்யவேண்டும் என்று ஒளிப்பு மறைப்பு இன்றி ட்ராட்ஸ்கி அபிப்பிராயம் தெரிவித்திருந்தது குறிப்பிடத் தகுந்தது. இத்துடன் ட்ராட்ஸ்கியும் அவருடைய சகாக்களும் நிற்கவில்லை. ஸோவியத் ரஷ்யாவிலே மற்ருெரு புரட்சியை ஆரம்பிக்க முயற்சி செய்யப்போவதாகச் சபதமும் கூறினர். ஸோவியத் அரசாங்கத்தைச் சிதைக்குமாறு பொது ஜனங்களைத் தூண்டவும் ஆரம்பித்தார்கள். இதே நோக்கமுள்ள ஹிட்லரும் ஜப்பானியரும் அவர்களை ஆதரிக்கத்தானே செய்வார்கள்.

ட்ராட்ஸ்கி கோஷ்டியினர் ஸோவியத் ஆட்சி முறையைச் சிதைக்கவும், பொதுஜனங்களின் மனவுறுதியைக் குலைக்கவும் தங்களால் இயன்றவரை முயன்ருர்கள்; அந்நிய வல்லரசுகளுக்காக உளவு பார்த்தார்கள். மற்றும் அவர்கள் ஸோவியத் ரஷ்யாவிலே பல சதிகளையும் அழிவு வேலைகளையும் செய்தனர். ஸோவியத் தலைவர்களைக் கொலை செய்ய முயன்ருர்கள். இவ்விதமாக அவர்கள் ஸோவியத் சோஷியலிஸ்ட் யூனியனைத் தகர்க்கப் பார்த்தார்கள்.

ஸோவியத் சர்க்கார் பொறுமை இழந்து, பொது ஜன விரோதிகளும் தேசத் துரோகிகளுமாகிய ட்ராட்ஸ்கி கோஷ்டியினர்மீது நடவடிக்கை எடுத்துக்கொண்டது. அவர்கள் ஸோவியத் பொதுஜனக் கோர்ட்டுகளில் விசாரணை செய்யப்பட்டனர். இந்த விசாரணை உலகப் பிரசித்திபெற்றது. எதிரிகள் அனைவரும் கோர்ட்டிலே தங்களுடைய குற்றத்தை ஒப்புக்கொண்டனர். கோர்ட் நடவடிக்கைகளைக் கவனித்துக்கொண்டிருந்த அந்நிய நாட்டுப் பத்திரிகை நிருபர்கள்கூட எதிரிகள் நிர்ப்பந்தம் செய்யப்படவில்லையென்பதையும், உண்மையையே கூறினார்கள் என்பதையும் நன்கு அறிந்திருந்தார்கள். . சதி வழக்குகளின் விசாரணைகளைப் பற்றி நேரில் பார்த்தவர்கள் சந்தேகப்படவே யில்லை. ஆனால் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் பிரசுரமாகும் பத்திரிகைகளே பொதுஜனங்களுக்குச் சந்தேகங்கள் ஏற்படவேண்டும் என்ற நோக்கத்துடன் கட்டுரைகளையும் தலையங்கங்களையும் வெளியிட்டன.

ட்ராட்ஸ்கி-கோஷ்டியினர் அதிகாரப் பித்துப் பிடித்தவர்களென்றும், பதவி மோகம் கொண்டவர்கள் என்றும், நம்பத்தகாதவர்கள் என்றும் கூறப்படுகிறதல்லவா? அப்படியானால் அவர்களை நீண்ட காலமாகப் பொறுப்பான ஸ்தானங்களில் வைத்திருந்ததற்கு என்ன காரணம் என்று நாம் கேட்கலாம். லெனினைக் கடத்துவதற்குச் சதி நடந்துவந்தது தமக்கும் தமது சகாக்களுக்கும் தெரியும் என்று 1921-ம் வருஷத்திலேயே ராடெக் ஒப்புக்கொண்டார். அதன் பின்னரும் அவரும் அவருடைய சகாக்களும் உயர்தரப் பதவிகளை வகிப்பதற்கு ஸோவியத் சர்க்கார் எவ்வாறு சகித்துக்கொண்டிருந்தது? இன்னொரு கேள்வியும் பொருத்தமாகத் தோன்றலாம். அதாவது, ஸோவியத் சர்க்காரைப் பகிரங்கமாகக் குறைகூறுவதற்குச் சுதந்திரம் இருந்திருந்தால் ட்ராட்ஸ்கி கோஷ்டியினர் சதி நடவடிக்கைகளில் இறங்கியிருக்க மாட்டார்கள் அல்லவா? இக் கேள்விகளைப் பரிசீலனை செய்வோம்.

ஒவ்வொரு அரசியல் கட்சியும் தனது வளர்ச்சிக்காகப் பாடுபடுகிறது. ஆரம்பத்திலிருந்து அது ஏராளமான மெம்பர்களைச் சேர்க்க ஆரம்பிக்கிறது. சிலர் தொண்டு செய்யும் நோக்கத்துடன் சேருவார்கள். வேறு சிலர் சுயநலம் கருதியும் சேரக்கூடும். அவர்களில் உண்மையான தொண்டர்கள் யாரென்பதை ஆரம்பத்தில் தெரிந்து கொள்ள முடியாது. அனுபவத்தில் தானே தெரிந்து கொள்ள முடியும். ரஷ்யாவின் போல்ஷிவிக் கட்சியும் அனுபவத்தில்தான் உண்மையான தொண்டர்கள் யாரென் பதை அறிந்துகொண்டது. கட்சியின் வேலைத் திட்டத்தை யும் விதிகளையும் ஒப்புக்கொண்டவர்கள் அனைவருமே போல்ஷிவிக் கட்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். விதிகளை மீறியதற்காகவும், பிற குற்றங்களுக்காகவும் விலக்கப்பட்டவர்கள் போல்ஷிவிக் கட்சியில் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர், ஆம், அவர்கள் இனி உண்மையான போல்ஷிவிக்கர்களாக இருப்பதாய் வாக் குறுதி யளித்ததின்பேரில். ஆகவே போல்ஷிவிக் கட்சி ஜன நாயகக் கொள்கையைப் பின்பற்றித் தனது மெம்பர்களிடம் மிகவும் சகிப்புத் தன்மையுடன் நடந்து வந்திருக்கிறது.

லெனினும் ஸ்டாலினும் தங்களுடைய கட்சியில் இருந்த துரோகிகளை உடனடியாகத் தண்டிக்கவில்லை; 20 வருஷத்திற்கு அதிகமாகவே சகித்துவந்திருக்கிறார்கள். உதாரணமாக, 1917-ம் வருஷத்திற்கு முன்பு போல்ஷ்விக் மத்தியக் கமிட்டியில் மாலினோவஸ்கி என்னும் ஒரு மெம்பர் இருந்தார். அவர் ஜார் சக்கரவர்த்தியின் உளவாளி. அவர் உளவாளி யென்பதை அறியாத லெனினும் ஸ்டாலினும் அவரிடம் சகிப்புத் தன்மையுடன் நடந்து கொண்டார்கள். புரட்சிக்குப் பின்னர், விசுவாசமாக உழைத்துவந்த திறமைவாய்ந்த போல்ஷிவிக்கர்கள் வேறு குற்றங்கள் செய்திருந்தபோதிலும், அவர்கள்மீது தலை வர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை. ஆகவே நம்பத்தகாதவர்களைக்கூட, இதர ஜனநாயகக் கட்சிகளைப் பார்க்கிலும் அதிக காலத்திற்கு போல்ஷிவிக் கட்சி சகித்து வந்திருக்கிறது.

போல்ஷிவிக் கட்சியின் விரோதிகளுக்குப் பிரசாரம் செய்ய உரிமை வழங்கப்பட்டிருந்தால், அவர்கள் பலாத்காரத்தில் இறங்காமல் இருந்திருப்பார்களா என்று கேட்கலாம். பிரசாரத்தின் மூலம் பொதுஜனங்களின் நன்மதிப்பையும் நம்பிக்கையையும் பெற முடியாதவர்கள், தங்களுடைய லட்சியத்தை அடைய வேறு குறுக்கு வழிகளில்—பலாத்கார வழிகளில்கூட நிச்சயமாக இறங்கி விடுவார்கள். உதாரணமாக, நேர்மையான முறையில் ஸ்பானிஷ் பொதுமக்களின் ஆதரவைப் பெறத் தவறிய ஜெனரல் பிராங்கோ உள்நாட்டுச் சண்டையை ஆரம்பித்தார். அவருக்குப் பிரசார உரிமை இருந்தும், அவ்வழியிலே அவரால் பொதுஜன ஆதரவைப் பெற முடியவில்லையென்பது குறிப்பிடத் தகுந்தது.

ஸோவியத் சர்க்காரால் தண்டிக்கப்பட்ட உள்நாட்டுத் துரோகிகள் சர்க்காருக்கு விரோதமாகப் பிரசாரம் செய்யவில்லை. அவ்வாறு பிரசாரம் செய்வதால், தங்களுடைய செல்வாக்குக் குறைவதுடன் பொதுஜனங்களின் கோபத்திற்கும் உள்ளாகவேண்டியிருக்கும் என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். துரோகிகளாயினும் புத்திசாலிகள் அல்லவா? ஆகவே போல்ஷிவிக் கட்சியை அவர்கள் ஆதரித்துப் பேசினார்கள். கட்சிக் கொள்கைகளை வற்புறுத்தி அறிக்கைகளை விடுத்தார்கள். இவ்விதமாக 'நல்ல பிள்ளைகள்' என்ற பெயரும் வாங்கினார்கள். கட்சிக்குள் பொறுப்பான பதவிகளை வகித்துவந்தால், தக்க சமயம் வந்ததும் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ளலாம் என்பது அவர்களுடைய நோக்கம். ஆகவே ஸோவியத் ரஷ்யாவில் பேச்சுச் சுதந்திரம் அல்லது பிரசார உரிமை சம்பந்தமான பிரச்னைகள் ஏற்படவேயில்லை. ஒரு தனிப்பட்ட கட்சி ஜனநாயக ரீதியில் பொது ஜனங்களின் நம்பிக்கையைப் பெற முடியுமா என்பதுதான் பிரச்னை.

ட்ராட்ஸ்கி முதலில் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து விரட்டப்பட்டார். பின்னர் அவர் தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டார். அவருடைய ஸ்தாபனமும் கலைக்கப்

பட்டது. இவையெல்லாம் ஸ்டாலினுடைய சர்வாதிகார மனப்பான்மையையும் கொடுங்கோன்மையையும் காட்டவில்லையா என்று கேட்கலாம். எந்த ஜனநாயக ஸ்தாபனத்திலும், அதிகாரம் வகிக்கும் பெரும்பான்மைக் கட்சியினர் தேசத் துரோகிகளின் நடவடிக்கைகளைச் சகித்துக் கொண்டிருக்கமாட்டார்கள். ஸோவியத் சர்க்கார் சிறுபான்மையோருக்குக் கொடுமை செய்வதே கிடையாது; செய்ததும் இல்லை. தேச நலன்களைப் பாதிக்கும் துவேஷப் பிரசாரத்திலும் நடவடிக்கைகளிலும் இறங்கும் சிறுபான்மையோரிடம் மாத்திரம் ஸோவியத் சர்க்கார் இரக்கம் காட்டுவதில்லை. கோடிக்கணக்கான மக்களின் நலன்களை ஒரு சிறிய கோஷ்டியினர் காலால் மிதித்துத் தள்ள முயல்வதை ஸோவியத் சர்க்கார் எவ்வாறு சகித்துக் கொண்டிருக்க முடியும்? ட்ராட்ஸ்கியின் மனப்பான்மையைப் பற்றியும் நடவடிக்கைகளைப் பற்றியும் பல வருஷங்களாக விவாதிக்கப்பட்ட பின்னரே, ஸோவியத் சர்க்கார், அவரைத் தேசப்பிரஷ்டம் செய்தது. விவாத மேடையிலும் ட்ராட்ஸ்கியால் வெற்றிபெற முடியவில்லை. பொதுஜனங்களின் நன்மதிப்பை அவரால் திரும்பப் பெற முடியவேயில்லை. அவருடைய துரோகம் அம்பலத்திற்கு வந்தபின்னரே, அவர் பொதுஜன விரோதி என்று தேசம் முழுவதும் கருதிய பின்னரே, அவர்மீது ஸோவியத் சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொண்டது. ட்ராட்ஸ்கி தம்மால் பொதுஜனங்களின் நம்பிக்கையையும் நன்மதிப்பையும் பெற முடியாதென்று தெரிந்துகொண்டதும் சதி நடவடிக்கைகளில் கவனம் செலுத்தலானர். அங்கிலேமையில் அவருக்குப் பேச்சுச் சுதந்திரம் கொடுத்திருக்கலாம். லண்டனில் பிரிட்டிஷ் பாஸிஸ்டுத் தலைவர் ஆஸ்வால்டு மாஸ்லி நடத்தும் கூட்டங்களுக்குப் போலீஸார் பாதுகாப்பு அளிக்கவில்லையா? அதைப்போலவே ட்ராட்ஸ்கியின் கூட்டங்களுக்கும் ஸோவியத் போலீஸார் பாதுகாப்பு அளித்திருக்கலாம். ஆனால் அவ்வாறு அளிக்கப்படும் பாதுகாப்பு ஜனநாயகக் கொள்கைக்கும் தங்களுடைய நலன்களுக்கும் விரோதமானதாக ஸோவியத் மக்களால் கருதப்பட்டிருக்கும். ஆகவே ஸோவியத் மக்களின் விரோதிகளை

அடக்குவதற்கு அவர்களுடைய ஸ்தாபனங்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டன.

எனினும் எதிர்க் கட்சித் தலைவர்களுக்குச் சுதந்திரம் இருந்தது. ஒரு தொழிற்சாலையில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்திருப்பதாக வைத்துக்கொள்வோம். அவர்களில் சில கோழைகளும் துரோகிகளும் இருக்கமாட்டார்களா ? அந்தத் துரோகிகளை மற்றத் தொழிலாளர்களின் நலனுக்கு விரோதமாக முதலாளிகள் உபயோகப்படுத்திக் கொள்வதை நாம் பார்க்கிறோம். இதைப்போலவே ஸோவியத் பொதுஜன விரோதிகளை—உள்நாட்டுத் துரோகிகளை—சோஷியலிஸ்டுகளின் முகாமிலே சோஷியலிஸ்டுகளுக்கு விரோதமாக வேலைசெய்யும் கோழைகளை, ஸோவியத் ரஷ்யாவின் சத்துரு நாடுகள் பயன்படுத்திக்கொள்ளப் பார்த்தன. அந்தக் கோழைகள் தொழிலாளர்களிடம் ஒரு போதும் விசுவாசமாக இருந்ததில்லை. இவ்விதமாக ஜார் ஆட்சியை எதிர்த்துப் போராடிய சோஷியலிஸ்டுகளே ஸோவியத் ரஷ்யாவின் விரோதிகளாகிய பாஸிஸ்டுகளின் 'வலை'யில் விழுந்தனர் ; அவர்களுடைய நண்பர்களாயினர். அவர்கள் சுயநலத்தில் ஊறிப்போனவர்கள் ; பதவி மோகங் கொண்டவர்கள்; ஸோவியத் தலைவர்களிடம் பொறுமை கொண்டவர்கள். ஆகவே அவர்கள் ரஷ்யாவிலே அதிகாரத்தைக் கைப்பற்றவும், அதன் தலைவர்களைப் பழிவாங்கவும் பாஸிஸ்டுகளின் உதவியை நாடினர். இத்தகைய துரோகிகளிடம் ஸோவியத் சர்க்கார் இரக்கம் காட்டுவதே கிடையாது. போர்முனையிலே காட்டும் மூர்க்கத்துடன், துரோகிகள் ஒழிக்கப்பட்டனர், ஸோவியத் சர்க்காரால். ஏனெனில் சோஷியலிஸ்ட் துரோகிகள் ஸோவியத் ரஷ்யாவைத் தாக்கும் பாஸிஸ்டு படைகளின் முன்னணி வீரர்களாகவே கருதப்பட்டனர்.

'பொதுஜனத் துரோகிகள்' என்ற குற்றச்சாட்டின் பேரில் சில வருஷங்களுக்கு முன்னர் ஸோவியத் ரஷ்யாவில் நூற்றுக்கணக்கானவர்கள் கைது செய்யப்

பட்டனர். அவர்களில் பலர் மரண தண்டனை விதிக்கப் பட்டனர். ஸ்டாலின் தமது நண்பர்களையே சுட்டுத் தள்ளுகிறார் என்றும், ஜார் ஆட்சியை ஒழிப்பதற்குத் தமக்கு உதவி புரிந்தவர்களுக்கு ஸ்டாலின் செய்யும் கைம்மாறு மிகவும் நன்றாக இருக்கிறதென்றும், அயல் நாட்டுப் பத்திரிகைகள் ஸோவியத் சர்க்காரின் போக்கைக் கண்டித்து எழுதலாயின. அவை உண்மையான நிலைமையை அறிந்துகொள்ளவில்லை யென்றே சொல்ல வேண்டும். ஏனெனில் தேசத் துரோகிகளையே ஸோவியத் சர்க்கார் கைது செய்து தண்டித்தது.

400 'ரயில்வேத் தொழிலாளர்களை' ஸோவியத் சர்க்கார் கைது செய்ததாக 'டெய்லி ஹெரால்டு' என்னும் பிரிட்டிஷ் தொழிற் கட்சிப் பத்திரிகை கூறியது. ஆனல் முழு விவரங்களை அப்பத்திரிகை பிரசுரிக்கவில்லை. இச் செய்தியைப் படித்திருப்பவர்கள், ஸ்டாலின் தொழிலாளர்களுக்கும் கொடுமை செய்ய ஆரம்பித்துவிட்டார் என்று எண்ணியிருப்பார்கள். உண்மையில் மேற் கூறிய 'ரயில்வேத் தொழிலாளர்கள்' தொழிலாளர்களே அல்ல. அவர்கள் அதிகாரிகளே. சீனக் கிழக்கு ரயில் வேயை ஜப்பானியர் விலைக்கு வாங்கியதும், ஜப்பானியரின் நிபந்தனைக் கிணங்க அவர்கள் மஞ்சூரியாவிலிருந்து ரஷ்யாவுக்குத் திரும்ப அழைத்துக்கொள்ளப் பட்டவர்கள். சோஷியலிஸ்ட் புரட்சி ஏற்பட்ட சமயத்தில் அவர்கள் ரஷ்யாவிலிருந்து வெளியேறினார்கள். சீனக் கிழக்கு ரயில்வேயை ஜப்பானியர் விலைக்கு வாங்கியதும், அவர்கள் மேற்கூறிய ரஷ்ய அதிகாரிகளை 'ரஷ்யாவுக்குத் திரும்ப அழைத்துக்கொள்ளவேண்டும்' என்று வற்புறுத்தினர். ரஷ்யாவுக்குத் திரும்பிய அதிகாரிகளில் பலர் அயல் நாடுகளில் ஸோவியத் ரஷ்யாவுக்கு விரோதமாகவுள்ள ஸ்தாபனங்களுடன் ஒத்துழைத்து வந்திருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டது.

ஹிட்லரின் வேவுகாரர்களும் ஜப்பானின் உளவாளிகளும் ஸோவியத் ரஷ்யாவிலே சுறுசுறுப்பாக வேலை

செய்ய ஆரம்பித்தனர். அவர்கள் தொழிற் சங்கங்களையும் போல்ஷிவிக் கட்சியினரையும் பயன்படுத்திக் கொள்ள ஆரம்பித்தனர். ஸோவியத் சமுதாய வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் சதிகாரர்கள் நிறைந்துவிட்டனர். ஸோவியத் ரஷ்யாவின் ஒவ்வொரு ஸ்தாபனத்திலும் புகுந்து ஆதிக்கம் செலுத்த முயன்றனர். இச்சமயத்தில்தான் சுமார் 4000 பேர்வரை கைது செய்யப்பட்டனர். ரஷ்யாவின் 18 கோடி ஜனங்களில் 4,000 என்பது மிகவும் குறைந்த எண்ணிக்கையானதால், நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. மேலும் கைது செய்யப்பட்டவர்களில் பலர் அதிகாரிகள் என்பது குறிப்பிடத்தகுந்தது. பாஸிஸ்டு நாடுகளில் நடப்பதைப்போல ஸோவியத் ரஷ்யாவில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருந்தால் ஆச்சரியப்படவேண்டியதுதான். ஜார் ஆட்சிக் காலத்தில் தேக உழைப்பு இல்லாமல் கைநிறையச் சம்பளமும் லஞ்சமும் வாங்கிவந்த அதிகாரிகளில் சிலர் ஸோவியத் ரஷ்யாவின் தொழிற்சாலைகளில் கூட்டத்தோடு கூட்டமாக வேலை செய்துகொண் டிருக்கலாம். அவர்களே பதவியிலிருந்து நீக்கப்படுகிறுர்கள். அவர்களுடைய ஸ்தானங்களுக்குத் தொழிலாளர்கள் நியமனம் செய்யப்படுகிறுர்கள்.

திறமைக் குறைவுக்காகவும், துரோகத்திற்காகவும் வேலையிலிருந்து நீக்கப்படும் அதிகாரிகள் பேராசை யுள்ளவர்களாக இருந்தால், தங்களுடைய குற்றத்தை உணராமல் ஸோவியத் சர்க்கார்மீது ஆத்திரப்படுகிறுர்கள். அவர்கள் தங்களைப்போல முக்கியமான பதவிகளை வகித்து நீக்கப்பட்டவர்களுடன் சேர்ந்துகொண்டு ஸோவியத் சர்க்காரைக் கவிழ்ப்பதற்குச் சதி செய்கிறுர்கள். ஆகவே இத்தகைய சதிகாரர்கள் ஸோவியத் சர்க்காரால் கடுமையாகத் தண்டிக்கப்படுகிறுர்கள்.

சில வருஷங்களுக்கு முன்னர் ஸோவியத் சர்க்காரால் சுடப்பட்ட 'துரோகிகளில்' பலர் யூதர்களாக இருந்

தத்தைக் கண்டு உலகம் ஆச்சரியமடைந்தது. ஸோவியத் சர்க்காரும் யூத சமூகத்தை ஒழிக்கத் தலைப்பட்டு விட்டதா என்றும் பலர் கேட்க ஆரம்பித்துவிட்டனர். இதற்குக் காரணம் போல்ஷிவிக் கட்சியில் ஆரம்பத்தில் சேர்ந்த அறிவாளிகளில் பெரும்பாலோர் யூதர்களே. ஆகவே துரோகிகள் கூட்டத்திலும் அவர்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருந்ததில் ஆச்சரியமில்லை. ஒரு பக்கம் யூத துரோகிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். அதே சமயத்தில் நூற்றுக்கணக்கான யூதத் தொழிலாளர் களுக்குப் பொறுப்பான பதவிகள் வழங்கப்பட்டன. ஸோவியத் ரஷ்யாவின் சிறிய குடியரசுகளின் முக்கிய மான தலைவர்களும் கைது செய்யப்பட்டனர். சிறு பான்மையோரை இவ்வாறு ஹிம்ஸை செய்யலாமா என்று கேட்கலாம். தேசத் துரோகிகள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்களா யிருந்தாலும் ஒழிக்கப்படவேண்டும் என்பதே ஸோவியத் சர்க்காரின் நோக்கம். தண்டிக்கப் பட்ட சிறுபான்மையோர் தலைவர்களில் பலர் ஜார் ஆட்சிக் காலத்தில் மத்திய வகுப்புகளைச் சேர்ந்தவர்கள். அவர்கள் கஷ்ட ஜீவனம் செய்யவில்லை. அவர்கள் ஜார்-கொடுங் கோன்மையை ஒழிக்கும் பொருட்டு சோஷியலிஸ் டானுர்கள். ஆனுல் உண்மையான சோஷியலிஸ்ட் சர்க்கார் ஏற்பட்டதும், அவர்களால் பழைய வசதிகளை அனு பவிக்க முடியவில்லை. தொழிலாளர்களுக்கு விரோதமாக வேலை செய்ய ஆரம்பித்தனர். ஆகவே முதலாளித்துவ ஆட்சி முறையில் சோஷியலிஸ்டுகளாக இருந்தவர்கள், சோஷியலிஸ்டு சர்க்கார் ஏற்பட்ட பிறகு சோஷியலிஸ்டு கொள்கைக்கு விரோதமாகிருர்கள் என்பதற்கு மேற் கூறிய ஸோவியத் சிறுபான்மையோரைப் பார்க்கிலும் வேறு உதாரணம் வேண்டியதில்லை.

இந்த அத்தியாயத்திலே ஸோவியத் சதி வழக்கு களின் அடிப்படையான அம்சங்களை விளக்கிவிட்டேன். பல வருஷங்களாய் போல்ஷிவிக்கர்களாக இருந்தவர்கள் ஸோவியத் சர்க்காருக்கு விரோதமாகச் சதி செய்ய என்ன காரணம் என்பதையும் கூறிவிட்டேன். ஸோவியத்

சர்க்கார் தகுந்த சமயத்தில் சதிகாரர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ளாமல் இருந்திருந்தால், ஸ்பெயினுக்கு ஏற்பட்ட கதி ஸோவியத் ரஷ்யாவுக்கும் ஏற்பட்டிருக்கும். அதாவது 'துரோகிகள்' பாஸிஸ்டு நாடுகளின் உதவியுடன் எதிர்ப் புரட்சி செய்து ஸோவியத் சர்க்காரைக் கவிழ்த்தி யிருப்பார்கள்.

IV சமாதான சகாப்தம்

சென்ற மகாயுத்தம் முடிந்ததும் வெர்ஸேல்ஸ் உடன்படிக்கை ஏற்பட்டதல்லவா? இதன் பயனுக ஐரோப்பாவின் இரு நாடுகள் 'தீண்டத் தகாதவை' யாகக் கருதப்பட்டன. அவைதான் ரஷ்யாவும் ஜெர்மனியும். இந்த இரு நாடுகளும் ஐக்கியப்பட்டுவிடுமோ என்ற எண்ணம் அக்காலத்தில் பலருக்கு ஏற்பட்டதுண்டு. இங்கிலாந்திலுள்ள, ரஷ்யாவின் உண்மையான நண்பர்களிற் பலர், இதைப்பற்றி அச்சமும் கொண்டனர். இந்த ஹேஷ்யம் 1922-ம் வருஷத்தில் ராப்பலோ உடன்படிக்கை மூலமாக உண்மையாயிற்று. மார்ச்சுப் புரட்சி ரஷ்யாவில் ஏற்பட்ட பின்னர், ரஷ்ய ராணுவத்தைச் சிதற அடித்து போல்ஷிவிக் ஆட்சியை நிலைநிறுத்த ரஷ்யாவுக்குச் செல்ல லெனினுக்கு உதவிபுரிந்தவர்கள் ஜெர்மானியர்களே. இந்த உதவியை ஜெர்மானியர்கள் செய்வதற்கு மேற்கூறிய உடன்படிக்கை உதவியாக இருந்தது.

வெர்ஸேல்ஸ் உடன்படிக்கையே ஜெர்மனியில் ஹிட்லரின் ஆதிக்கம் ஏற்படுவதற்கும் காரணமாக இருந்தது. ஜெர்மானியர் நியாயமாக நடத்தப்பட்டிருந்தால்—அவர்களால் செலுத்தமுடியாத பிரம்மாண்டமான யுத்தக் கடனை அவர்கள்மீது சுமத்தாமல் இருந்திருந்தால், ஹிட்லரின் ஆட்சி முறையே ஏற்பட்டிருக்காது என்று சொல்லலாம். நேச நாடுகள் இவ்விஷயத்தில் ஒரு பெரிய தவற்றைச் செய்துவிட்டதாகப் பிரபல பிரிட்டிஷ்

ஆசிரியரான ஸ்ரீ பெனர்ட் பாரஸ் மிகவும் அழுத்தமாகக் கூறியிருப்பது இங்கே குறிப்பிடத் தகுந்தது. யுத்தத்தின் பயனாக ஜெர்மானியர் நிலைகுலைந்து ஒருவரோடொருவர் சச்சரவு செய்வதற்குப் பதிலாக ஒருபோதும் இல்லாதபடி ஐக்கியப்பட்டனர்.

"நமது வெற்றியை இறைவனின் விசேஷ அனுக்கிரகமாகக் கருதினோம். நமது காலடியில் விழுந்து கிடந்த சத்துருவிடம் நாம் இரக்கம் காட்டவில்லை. எல்லாக் குற்றங்களுக்கும் தானே ஜவாப்தாரி என்று அவன் ஒப்புக்கொள்ளும்வரை, அவனை எழுந்திருக்க நாம் விடவில்லை. ஜெர்மன் மக்களோ மனம் இடிந்து தலை கவிழ்ந்து நின்றனர். அவர்களை மீண்டும் தைரியமாகத் தலை நிமிர்ந்து நிற்கும்படி ஊக்கப்படுத்தும் முதல் மனிதர் அவர்களுடைய பூரணமான அன்பையும் நம்பிக்கையையும் பெற்றுவிடுவது இயல்புதானே. துரதிர்ஷ்டவசமாக அந்தத் துணிகரமான காரியத்தை முதன் முதலில் செய்தவர் ஹிட்லரே. ஜெர்மன் மக்கள் தங்களுடைய சரித்திரப் பெருமையையும் திறமையையும் மறந்துவிடக் கூடாது என்று முழக்கம் செய்தார் ஹிட்லர். ஜெர்மன் மக்கள் தைரியம் பெற்று ஹிட்லரைத் தங்களுடைய தலைவராக்கினர். வந்தது ஆபத்து!" என்று அழகாகச் சித்தரிக்கிறார் எட்வர்டு பாரஸ்.

சென்ற மகாயுத்தம் முடிந்ததிலிருந்து இந்த யுத்தம் ஆரம்பித்தவரை முக்கியமாக ஐரோப்பாவின் நிகழ்ச்சிகளையும், பொதுவாக உலக நிகழ்ச்சிகளையும் சுருக்கமாகவும் கோவையாகவும் இந்த அத்தியாயத்தில் கூற விரும்புகிறேன். ஏனெனில் இந்த நிகழ்ச்சிகளிலிருந்து ரஷ்யாவைப் பிரிக்கமுடியாது. வெர்ஸேல்ஸ் ஒப்பந்தத்தில் ஸோவியத் ரஷ்யா சேர்த்துக்கொள்ளப்படவில்லை. ஆரம்பத்திலிருந்தே ஸோவியத் சர்க்கார் யுத்தத்தைத் தவிர்க்க விரும்பியிருக்கிறது. வெர்ஸேல்ஸ் உடன்படிக்கையின் கடுமையான நிபந்தனைகளை ஸோவியத் சர்க்கார் ஒப்புக்கொள்ளவில்லை. ஆயுதப் பரிஹரணத்தைத் தீவிரமாக வற்புறுத்தி வந்தது. இத்தாலி அபி

ஸீனியாமீது படையெடுத்த சமயத்திலும் இத்தாலிமீது கடுமையான நடவடிக்கைகளைச் சர்வதேச சங்கம் எடுத்துக் கொள்ளவேண்டும் என்றும், அபிஸீனியர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்றும் ஸோவியத் ரஷ்யா வற்புறுத்தியது. ஆனால் அரை மனதுடன் இத்தாலிமீது எடுத்துக் கொள்ளப்பட்ட பொருளாதார நிர்ப்பந்த நடவடிக்கைகள் கூடச் சரிவர அமல் நடத்தப்படவில்லை. ஸ்பெயினில் உள்நாட்டு யுத்தம் ஏற்பட்டபோதும் ஸோவியத் ரஷ்யாவின் யோசனையை வல்லரசுகள் காதில் போட்டுக்கொள்ளவில்லை. ஹிட்லரின் ஆக்ரமிப்பை ஆரம்பத்திலேயே நசுக்குவதற்கு ஸோவியத் சர்க்கார் கூட்டுப் பாதுகாப்பு யோசனையை வற்புறுத்தியது. இந்த யோசனையை இதர வல்லரசுகள் ஒப்புக்கொண்டிருந்தால் ஹிட்லர் குட்டி நாடுகள்மீது படையெடுக்கும் வாராந்த விடுமுறைத் திருவிளையாடல்களிலே துணிகரமாக இறங்கி யிருக்க மாட்டார். இந்த யுத்தமே தோன்றியிருக்காது.

1917-ம் வருஷத்தில் ஸ்டாலின் உடனடியான சமாதானத்தை விரும்பினார். இவ்விஷயத்தையே அவர் ஜனங்களுக்கும் பிரசாரம் செய்தார். "பூமி கேட்கக் கூடாது, நஷ்டஈடும் கோரக்கூடாது" என்ற நிபந்தனைக்கு மத்திய ஐரோப்பிய வல்லரசுகள் ஒப்புக்கொண்டால், ஸ்டாலின் சமாதானம் செய்துகொள்ளத் தயாராக இருந்தார். ஜெர்மன் மிதவாதிகள் இந்த நிபந்தனையை ஒப்புக்கொள்ளத் தயாராக இருந்தனர்; ஆனால் ஜெர்மன் தீவிரவாதிகள் ஏகாதிபத்திய ஆசை பிடித்தவர்கள். ரஷ்யாவின் செயலற்ற நிலைமையை அறிந்து, எஸ்தோனியா லாட்வியா, லிதுவேனியா, ரஷ்ய போலந்து, பின்லந்து முதலிய ரஷ்ய மாகாணங்களை ஜெர்மனிக்கு விட்டுக் கொடுக்குமாறு செய்துவிட்டனர். இவ்விஷயமாக 1918-ம் வருஷம் மார்ச்சு மாதம் 3-ந் தேதியன்று பிரெஸ்ட்-லிட்டோவெஸ்கில் ஒரு உடன்படிக்கையும், ஆகஸ்ட் மாதம் 27-ந் தேதியன்று பெர்லினில் ஒரு உடன்படிக்கையும் ஏற்பட்டன. உக்ரேனும் ஜார்ஜியாவும் சுதந்திர ராஜ்யங்களாக அங்கீகரிக்கப்பட்டன. கார்ஸ்பாட்டும்,

ஆர்டாஹான் முதலிய ரஷ்யப் பிரதேசங்களின் சீரமைப்பு வேலையைத் துருக்கி ஏற்றுக்கொண்டது.

வெர்ஸேல்ஸ் ஒப்பந்தம், பிரெஸ்ட்—லிட்டோவெஸ்க் உடன்படிக்கையை ரத்துச் செய்துவிட்டது. ஆனல் ஸோவியத் சர்க்கார் பாரிஸுக்கு அழைக்கப்படவில்லை. ஜெர்மன் ராணுவத் தலைவர்களைப்போலவே, நேசநாடுகளும் கம்யூனிஸத்தை வெறுத்தன. முதலில் ரஷ்யாவை ஜெர்மனியிடமிருந்தும், பிறகு கம்யூனிஸத்திடமிருந்தும் பாதுகாக்கும்பொருட்டு நேசநாடுகள் ஒயிட் ரஷ்யத் தலைவர்களுக்கு ராணுவ உதவி புரிந்தன. ரஷ்யாவின் எல்லைப்புற மாகாணங்களாகிய லிதுவேனியா, லாட்வியா, எஸ்தோனியா முதலியன சுதந்திர ராஜ்யங்களாகப் பிரிந்து போகவும் நேசநாடுகள் உதவிபுரிந்தன. போலந்து தனது சுயேச்சையை மீட்டுக்கொண்டதுடன், ரஷ்யப் பிரதேசத்தையும் பெற்றுக்கொள்ள முடிந்தது. பின்லந்து முதலில் ஜெர்மன் உதவியுடனும், பின்னர் நேசநாடுகளின் உதவியுடனும் சுயேச்சை பெற்றது. இவ்வாறு கம்யூனிஸத்தை ஐரோப்பாவிலிருந்து துண்டிப்பதற்காக நேசநாடுகள் பினமி-சுயேச்சை ராஜ்யங்களைச் சிருஷ்டித்தன. நேசநாடுகள் யுத்தத்திலே பூரணச் சலிப்பு அடைந்திருந்ததாலும், ஒயிட் ரஷ்ய சேனைகள் மிகவும் மோசமான நிலைமையில் இருந்ததாலுமே ஸோவியத் ரஷ்யா பிழைத்தது. இல்லாவிட்டால், அது சின்னபின்னமாகச் சிதறிப்போயிருக்கும். 1921-ம் வருஷ இறுதியில் ரஷ்யாவில் பூரண அமைதி மீண்டும் நிலவியது.

ஸோவியத் சர்க்கார் தனது உயிருக்காகவே போராடி வந்ததென்பதை அனைவரும் அறிவர். ஆனல் தற்பாதுகாப்பிலும் கூட அது புரட்சிக் கொள்கையையே பின்பற்றி வந்தது. உலகம் முழுவதிலுமே உடனடியாக ஸோவியத் பொதுஉடைமைப் புரட்சி ஏற்படவேண்டும் என்றும், இத்தகைய புரட்சி ஏற்படாவிட்டால் ரஷ்யாவில் கூடப் பொதுஉடைமை ஆட்சியைப் பாதுகாக்க முடியாது என்றும் லெனின் அபிப்பிராயப்பட்டார். பிரெஸ்ட் லிட்டோவெஸ்கில் ஜெர்மனியின் கடுமையான நிபந்தனை

களை ஒப்புக்கொள்ளாமல் இருக்குமாறும், சண்டையைத் தொடர்ந்து நடத்துமாறும், லெனினுக்கு அவருடைய சகாக்களில் பலர் யோசனை கூறினர். ஆனால் லெனின் அவர்களுடைய யோசனையை ஏற்றுக்கொள்ளாமல் சமாதானம் செய்துகொண்டார். ஜெர்மானியர் ரஷ்யாவுக்குள் முன்னேறினால், பொதுஉடைமைப் புரட்சி ஒரு வாரத்திற்குக்கூட நிலைக்காதென்பது லெனினுக்கு நன்கு தெரிந்திருந்தது.

ஜெர்மனி வீழ்ச்சியடைந்த பின்னரும், ரஷ்யாவில் உள்நாட்டுச்சண்டை நடந்துகொண்டிருந்த சமயத்திலும், ரஷ்யாவுக்கும் வெளிநாடுகளுக்கு மிடையே ராஜதந்திர உறவு கிடையாது. பெரும்பாலான அந்நிய நாடுகள் ரஷ்யாமீது உத்தியோகப் பற்றில்லாத முறையில் போர் தொடுத்திருந்தன. ஆகவே மற்ற நாடுகளில் பொதுஉடைமைப் புரட்சியைத் தோற்றுவிக்க 1919-ம் வருஷத்திலிருந்தே 3-வது இண்டர்நேஷனல் என்று சொல்லப்பட்ட சர்வ தேசப் பொதுஉடைமை ஸ்தாபனம் வேலைசெய்ய ஆரம்பித்தது. பவேரியா, ஹங்கேரி முதலிய இடங்களில் தாற்காலிகப் பொதுஉடைமைச் சர்வாதிகார ஆட்சி ஏற்பட்டதால், லெனினுக்கு நம்பிக்கை அதிகரித்தது. பொது உடைமைப் புரட்சி மற்ற நாடுகளில் பரவாமல், ஸோவியத் பொதுஉடைமைப் புரட்சி நிலைக்கும் என்று ஆரம்பத்தில் போல்ஷிவிக் தலைவர்களில் எவருமே நம்பவில்லை. இது காரணமாகத்தான் உலகப் புரட்சியைத் தோற்றுவிக்க, சர்வ தேசப் புரட்சி ஸ்தாபனம் முக்கியமான கருவியாகக் கருதப்பட்டது.

நாலுவருஷப் போராட்டம் ரஷ்யாவுக்குக் கடுமையான சோதனையே. அதிர்ஷ்டவசமாக ரஷ்யா சின்னபின்னமாக வில்லை யெனினும், அதை வறுமை பலமாகப் பிடித்து ஆட்டியது. ரஷ்யா தனது பொருளாதாரத்தை அபி விருத்தி செய்துகொள்வதற்கு மேற்கத்தி நாடுகளுடன் முன்போல் வியாபாரத் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. எப்பொழுதுமே ரஷ்யா மேற்கத்தி நாடுகளை நம்பியது கிடையாது. ஆனால் அந்நாடு

களின் உதவியில்லாமலும் ரஷ்யாவால் வாழமுடியாது. அந்நிய நாடுகளும் ரஷ்யாவுடன் நேசமாக நடந்துகொள்ள வில்லை. கிழக்கே ஜப்பான் ஸைபீரியாமீது 'கண்' வைத்துக்கொண்டிருந்தது. மேற்கே சமாதான உடன் படிக்கைகள் மூலமாக ரஷ்யாவை ஐரோப்பாவிலிருந்து துண்டிப்பதற்காகப் பல புதிய ராஜ்யங்கள் சிருஷ்டிக்கப் பட்டன. பால்டிக் கடற்கரையும் ரஷ்யாவிடம் இல்லாமற் போயிற்று. ஆகவே ரஷ்யா தற்பாதுகாப்பையே தனது அந்நிய நாட்டுக் கொள்கையின் அடிப்படையான அம்ச மாகக் கருத ஆரம்பித்தது.

சமாதானம் ஏற்பட்ட சில வருஷங்களில் உலகப் புரட்சி சாத்தியப்படாது என்பது நன்கு தெரிந்துவிட்டது. 1923-ம் வருஷத்தில் ஜெர்மனி நிலைகுலைந்த பின்னர் ஐரோப்பாவில் மீண்டும் முதலாளித்துவம் வேரூன்றி விட்டதென்பதை மிகவும் பிடிவாதமான பொதுஉடைமை வாதிகள்கூடக் கண்டுகொண்டனர். சீனாவில் பொது உடைமை இயக்கம் 1926-ம் வருஷம்வரை தீவிரமாக இருந்தது. அப்பொழுதுகூடச் சீனாவில் மற்றொரு ஸோவி யத் யூனியனை ஸ்தாபிக்கலாம் என்று ஸோவியத் ரஷ்யா வின் தலைவர்கள் நம்பி யிருந்தார்கள். ஆனால் 1927-ம் வருஷத்தில் சியாங்-கே-ஷேக் கம்யூனிஸ்ட் ஆதரவை நிராகரித்த பின்னர், ரஷ்யத் தலைவர்களின் நம்பிக்கை வீணாகப் போய்விட்டது. பொதுஉடைமைப் புரட்சியை ஏற்றுக்கொள்ள விரும்பாத உலகத்தை அனுசரித்து ரஷ்யத் தலைவர்கள் நடந்துகொள்ள வேண்டியதாயிற்று.

ஆரம்பத்திலிருந்தே ஸ்டாலின் ரஷ்யாவின் உள்நாட்டு விஷயங்களிலேயே சிரத்தை செலுத்தலானார். மற்ற தேசங்களில் அதிகாரத்தைக் கைப்பற்றப் பொதுஉடை மைக் காரர்களுக்கு ஊக்கமும் உதவியும் அளிக்க அவர் விரும்பவில்லை. மற்ற போல்ஷிவிக் தலைவர்கள் உலகப் புரட்சியைப்பற்றிப் பிரமாதமாகப் பேசியபோது, ஸ்டா லின் மௌனமாக இருந்தார். ஆனால் ஸ்டாலின் பேசுவ தற்குச் சந்தர்ப்பம் வந்தபோது, "ஸோஷியலிஸம் ரஷ்யா வுக்கு மாத்திரமே" என்று அழுத்தமாகக் கூறினார். ரஷ்யா

வில் ஸோஷியலிஸத்தை மேன்மேலும் வளர்த்துப் பலப் படுத்துவதற்கு அவர் கம்யூனிஸ்ட் கட்சியின் சக்தி முழுவதையும் உபயோகப்படுத்தினர். எனினும் ஸோஷியலிஸ்ட் புரட்சியின் இறுதியான நோக்கத்தை இவர் கைவிட வில்லை. ஸோவியத் கொள்கையிலே சர்வதேசப் புரட்சி மனப்பான்மைக்கு ஸ்டாலின் கொஞ்சங்கூட இடம் கொடுக்கவில்லை. ஸ்டாலின் அதிகாரத்திற்கு வந்ததும், சர்வதேசப் புரட்சி மனப்பான்மையுள்ள தீவிரவாதிகளாகிய ட்ராட்ஸ்கி, ஜினேவிவ், காமெனவ் இம்மூவரையும் ஒழித்துவிட்டார். இதன் பயனுக, சர்வதேசப் பொது உடைமை ஸ்தாபனம் முக்கியத்துவத்தை இழந்துவிட்டது. அதன் கடுமையான கொள்கையும், மற்ற இடது சாரிக் கட்சியினருடன் ஒத்துழையாமையும் அதை உபயோகமற்றதாகச் செய்துவிட்டன. 1924-ம் வருஷத்திற்கும் 1935-ம் வருஷத்திற்குமிடையே காமின்டர்ன் சர்வதேசக் காங்கிரஸ் மாஸ்கோவில் ஒரேஒரு முறைதான் ஐந்து வருஷத் திட்டத்திற்கு 'ஆசி' கூறும் பொருட்டு 1928-ம் வருஷத்தில் கூடியது. சுருங்கக் கூறுமிடத்து, காமின்டர்ன் தனது மரணச் சீட்டில் தானே கையொப்பமிட்டது. ஏனெனில் ரஷ்யாவில் மாத்திரம் 'ஸோஷியலிஸம்' என்னும் கொள்கையை ஐந்து வருஷத் திட்டம் வற்புறுத்தியது. இதன் பயனுக மற்றத் தேசங்களில் உள்ள ஸ்தலக் கம்யூனிஸ்டுகள் மதிப்பிழந்தனர்.

1924-ம் வருஷத்திலிருந்து 1929-ம் வருஷம்வரை ஐரோப்பா சர்வதேச சங்கத்தில் மிகவும் சிரத்தையும் ஆர்வமும் காட்டி வந்தது. அமெரிக்கா ஸ்ரீ கெல்லாக் மூலமாக யுத்தத்தை நிராகரித்தது. ஜப்பான் சர்வதேச சங்கத்தின் விசுவாசமான மெம்பராக இருந்து, மனப் பூர்வமாக ஒத்துழைத்து வந்தது. ரஷ்யாவை ஒருவரும் பயமுறுத்தவில்லை. அப்பொழுது ஸோவியத் சர்க்கார் பிரம்மாண்டமான தொழில் திட்டத்தை நடத்திவைத்துக் கொண்டிருந்தது. ஆகவே முற்போக்குள்ள மேற்கத்தி நாடுகளின் ஒத்துழைப்பும் ஒத்தாசையும் ஸோவியத் சர்க்காருக்கு மிகவும் தேவையாக இருந்தன. மற்றத் தேசங்

களின் அரசாங்க அமைப்பு எப்படியிருந்தாலும் அவற்றுடன் ஸோவியத் சர்க்கார் சிநேகிதம் வைத்துக்கொண்டது. 1924-ம் வருஷத்தில் இத்தாலியுடன் ஸோவியத் சர்க்கார் ராஜதந்திர வர்த்தகத் தொடர்புகள் வைத்துக்கொண்டன. அடுத்த வருஷத்தில் துருக்கியுடன் ஸோவியத் சர்க்கார் நேச உடன்படிக்கை செய்துகொண்டது. ஜெர்மனிக்கும் ரஷ்யாவுக்குமிடையே ஏற்கெனவே ஏற்பட்டிருந்த நேச உடன்படிக்கை பலப்படுத்தப்பட்டது. ஜெர்மனியில் அப்பொழுது வெய்மர் குடியரசு-சர்க்கார் ஆட்சி செய்துவந்தது. அதாவது மிதவாதிகள் அதிகாரத்தில் இருந்தனர். தீவிரவாதிகளுக்குத் தாற்காலிகமாகச் செல்வாக்கு இல்லாமல் போயிற்று. ஜெர்மனியின் மிதவாத சர்க்கார் ரஷ்யாவைத் தனது 'சமதை'யாகக் கருதி, அதனுடன் ஒத்துழைத்து வந்தது. இத்தகைய பரஸ்பர ஒத்துழைப்பின் மூலம் இரு நாடுகளுக்கும் அரசியல், பொருளாதாரத் துறைகளில் அனுகூலங்கள் ஏற்பட்டன. ஜெர்மன் ராணுவத் தலைவர்களும் ரஷ்யாவைத் தங்களுடைய, தடை செய்யப்பட்ட, ராணுவத்தின் பயிற்சி ஸ்தலமாகக் கருதியது. ரஷ்ய மண்ணில் ஜெர்மன் ஆயுதத் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன. வர்ஸேல்ஸ் உடன்படிக்கை தடைசெய்த பெரிய ஆயுதங்களை உபயோகிக்கவும் ஜெர்மன் சர்க்கார் ரஷ்யாவை உபயோகப்படுத்தியது. ஐந்து வருஷத் திட்டம் அமலுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர், ஸோவியத் ரஷ்யாவுக்கு வெளி உதவி அதிகமாய்த் தேவைப்பட்டது. 1932-ம் வருஷத்தில் ஜெர்மனிக்கும் ரஷ்யாவுக்குமிடையே வியாபாரம் முறுக்காக நடைபெற்றது.

தூரக்கிழக்கில் ஜப்பான் 'நல்ல பிள்ளை'யாக நடந்து வந்தது. சீனு உள்நாட்டு யுத்தம் காரணமாகச் சீரழிந்துவிட்டது. மேல் திசையிலிருந்தாவது, கீழ்த்திசையிலிருந்தாவது ரஷ்யாவுக்குப் படையெடுப்பு அபாயம் ஏற்படுவதற்கு அறிகுறியே இல்லை. ஆகவே ஸோவியத் சர்க்கார் உள்நாட்டுச் சீரமைப்பு வேலைகளிலேயே அதிகக் கவனம் செலுத்த ஆரம்பித்தது. வியாபாரம், அந்நிய நாடுகளிடமிருந்து கடன் வாங்குவது முதலியவையே ஸோவியத்

சர்க்கார் - அந்நிய நாட்டுக் கொள்கையில் முக்கியமான அம்சங்களாக இருந்தன. ஸோவியத் ரஷ்யாவுக்கும் இதர நாடுகளுக்கு மிடையே ராஜதந்திர நடவடிக்கை களும் குறைவாகவே யிருந்தன.

யுத்தம் செய்யவேண்டும் என்ற உத்தேசம் அப் பொழுது ஒரு தேசத்திற்கும் இருந்ததாகத் தெரியவில்லை. ஆகவே யுத்தத்தைக் கண்டனம் செய்து பல அறிக்கைகளை விடுப்பதால் பந்தோபஸ்தும் சமாதானமும் பன்மடங்கு உறுதிப்படும் என்று ரஷ்யா கருதியது. 1929-ம் வரு ஷத்தில் ஏற்பட்ட உடன்படிக்கையின் மூலம் லாட்வியா, எஸ்தோனியா, லிதுவேனியா, போலந்து, ருமேனியா, துருக்கி, பெர்ஷியா முதலிய எல்லா நாடுகள் யுத்தத்தை நிராகரித்தன. அந்நியநாட்டுக் கொள்கையில் அனுக்ர மிப்பைப் பிரதான அம்சமாகக் கருதலாயிற்று ரஷ்யா. 1930-ம் வருஷத்திலும் 1931-ம் வருஷத்திலும் ஸோவியத் சர்க்கார் பல நாடுகளுடன் பேச்சு வார்த்தைகள் நடத் தியது. இதன் பயனாக அடுத்த வருஷத்தில் அந்நாடுக ளுடன் ஸோவியத் சர்க்கார் அனுக்ரமிப்பு உடன்படிக்கை களைச் செய்துகொண்டன. பால்டிக் நாடுகள், பின்லந்து, போலந்து முதலிய நாடுகள் அனுக்ரமிப்பு உடன்படிக்கை களில் கையொப்பமிட்டன. இரண்டு வருஷங்களாகப் பேச்சு வார்த்தைகள் நடத்திய காரணமாக, 1933-ம் வரு ஷத்தில் ஸோவியத் சர்க்காருக்கும் இத்தாலிக்கு மிடையே ஒரு நேச உடன்படிக்கை ஏற்பட்டது. சமாதானத்திற்கு ஆயுத பரிஹரணமே சிறந்த உத்தரவாதம் என்று ஸோவியத் ரஷ்யா சர்வதேச சங்கத்தில் முழக்கியது.

ஸோவியத் ரஷ்யா பிற நாடுகளுடன் வியாபாரத் தொடர்பு வைத்துக் கொள்வதிலும், நேசப்பான்மையைப் பலப்படுத்திக் கொள்வதிலும் விசேஷ கவனம் செலுத்தி வந்தது. ஆகவே, உலகம் முழுவதிலும் பொதுஉடைமைப் புரட்சியைத் தோற்றுவிக்க வேண்டும் என்பதில் ஆர்வம் குன்றி, தேசிய நலன்களிலேயே சிரத்தை ஏற்பட்டது. 1929-ம் வருஷத்தில், உலகம் முழுவதிலும் கடுமையான பொருளாதாரக் கஷ்டம் ஏற்பட்டது. மார்க்ஸ் கூறிய

படி பகுத்தறிவுக்குச் சிறிதும் ஒவ்வாத அழிவு வேலை களையே முதலாளித்துவ வர்க்கம் செய்துவந்தது. வேலை யில்லாதோரின் எண்ணிக்கை பெருகியது. குடியான வர்கள் சாப்பாட்டுக்கு வழியின்றித் தவித்தனர். புரட்சி இயக்கத்தைப் பரப்புவதற்குக் கம்யூனிஸ்டுகளுக்கு அப் பொழுது ஒரு அரிய சந்தர்ப்பம் ஏற்பட்டதென்றே சொல்லலாம். ஆனல், சர்வதேசப் பொதுஉடைமை ஸ்தாபனமாகிய 'காமின்டர்ன்' செயலற்றுக் கிடந்தது. உருப்படியாக உலகில் அபேதவாதத்தைப் பரப்புவதற்கு அது ஒன்றையும் செய்யவில்லை. வேறு ஏதேனும் இடது சாரிக் கட்சியினர் உலகில் அபேதவாதத்தைப் பரப்ப முயன்ருல், அதையும் 'காமின்டர்ன்' அங்கீகரிப்பதில்லை. மேற்கத்தி ஐரோப்பாவில், பரவத்தொடங்கிய சீர் திருத்த ஸோஷியலிஸ்டு இயக்கங்களைக் காமின்டர்ன் அறவே வெறுத்தது. இதன் பயனுக இந்த ஸ்தாபனம் முற்றிலும் உபயோகமற்றதாகக் கருதப்பட்டதுடன், விரும்பத் தகாத ஸ்தாபனமாகவும் மதிக்கப்பட்டது. வெளிநாடுகளில் உள்ள கம்யூனிஸ்டு கட்சியினருக்குச் சரியானபடி ஸோவியத் சர்க்கார் ஆதரவும் ஊக்கமும் அளித்து வந்ததா என்ருல், அதுவும் இல்லை. முதலாவது ஐந்து வருஷத் திட்டத்தின் மூலமாகப் பிரம்மாண்டமான பொருளாதாரக் கஷ்டங்கள் ரஷ்யாவில் ஏற்பட்டன. இக்கஷ்டங்களைச் சமாளிப்பதற்கு வெளிநாடுகளின் உதவி மிகவும் தேவைப்பட்டது. வர்த்தகத் துறையில் வெளி நாடுகளின் ஆதரவு ரஷ்யாவுக்கு இன்றியமையாத தாக இருந்தது. ஆகவே, இந்த உதவிகளை எவ்விதத்திலும் பெறுவதையே ஸோவியத் சர்க்கார் தனது முக்கியமான நோக்கமாகக் கருதியது.

1931-ம் வருஷம் செப்டெம்பர் மாதம் ஜப்பான் மஞ் சூரியாமீது படையெடுத்தவுடன், வெறும் அனுக்ரமிப்பு ஒப்பந்தங்கள் மூலமாகச் சமாதானத்தைப் பாதுகாக்க முடியும் என்ற எண்ணம் தவறு என்று ஸோவியத் ரஷ்யா வுக்கு வெட்ட வெளிச்சமாக விளங்கியது. ஏறக்குறையத் தான் தனித்து நிற்பதையும் ஸோவியத் ரஷ்யா உணர்ந்து

கொண்டது. மஞ்சூரியாமீது படையெடுத்த ஒரு வருஷத்திற்குள், ஜப்பானியர் ரஷ்யாவின் விலாப்பக்கத்தில் ஒரு ராணுவக் காலனியை ஸ்தாபித்து 'உட்புற மங்கோலியா' வழியாக முன்னேறிச் சென்று, ரஷ்யாவின் பொம்மை ராஜ்யமாகிய 'வெளிப்புற மங்கோலியா'வின் எல்லைப் புறங்களை நோக்கி முன்னேற ஆரம்பித்தனர். ரஷ்யாவுக்கு மிகவும் கஷ்டமான கட்டத்திலே இந்தப் புதிய தொல்லை நேர்ந்தது. தென் ரஷ்யாவில் கூட்டுப்பண்ணை விஷயமாகத் தகராறு ஏற்பட்டு உள்நாட்டுச் சண்டையாக முற்றிவிட்டது. ஐந்து வருஷத் திட்டம் மிகவும் கடுமையான சோதனைக்கு உட்பட்டிருந்தது. ரஷ்யாவின் தூரக் கிழக்கு ராணுவம் இன்னும் ஏற்படாத சமயம் அது. இங்கிலைமையில் கிழக்கு முனையில், ரஷ்யாவால் பீரங்கி முனையிலே ஒன்றும் செய்ய முடியவில்லை. மீண்டும் சீனுவுடன் ராஜதந்திரத் தொடர்புகளை ஸ்தாபித்துக் கொள்வதைத் தவிர ரஷ்யாவுக்கு வேறு வழியில்லை.

V ஹிட்லர் விஜயம்

மேற்கத்தி நாடுகளுடனும் ரஷ்யாவின் ராஜதந்திரத் தொடர்புகள் பொருளாதார நிலைமை காரணமாக மிகவும் பாதிக்கப்பட்டன. ரஷ்யாவுடன் மிகவும் நேசமாயிருந்த ஜெர்மனியின் வெய்மர் ஜனநாயக அரசாங்கம் கவிழ்ந்தது. ராணுவ ஸர்வதிகார அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. அந்த அரசாங்கத்துடனும் ஸோவியத் சர்க்கார் மிகவும் நேசமாகவே யிருந்தது. 1933-ம் வருஷம் ஜனவரி மாதத்தில் ஹிட்லர் ஜெர்மனியின் சான்ஸெலர் பதவியை ஏற்ருர். அது முதல் ரஷ்யா நாஜிகளின் ஆட்சி முறைக்குத் தகுந்தவாறு தனது நடைமுறைகளை மாற்றிக்கொள்ள வேண்டியதாயிற்று. ஹிட்லர் அதிகாரத்திற்கு வந்ததிலிருந்து, ஜெர்மன் தீவிரவாதிகள் அதிகாரம் பெற்றுவிட்டார்கள் என்றே சொல்ல வேண்டும்.

ஹிட்லர் ஆரம்பத்திலிருந்தே ஸோவியத் ரஷ்யாவை அறவே வெறுத்து வந்திருக்கிருர். அவர் தமது 'மெயின் காம்ப்' நூலில் மாத்திரமின்றி எல்லாப் பிரசங்கங்களி லுமே ரஷ்யாவைக் கடுமையாகத் தாக்கிவந்திருக்கிருர். ஒரு சமயத்தில் ஹிட்லர் எழுதினுர்: "சென்ற மகாயுத்தத் திற்கு முன்பு நாங்கள் குடியேற்ற நாடுகள் வேண்டும் என்று கேட்டோம்; எங்களுடைய சாமான்களை விற்பனை செய்ய ஏராளமான மார்க்கெட்டுகள் வேண்டுமென்று வற் புறுத்தினேம். ஆனல் இப்பொழுதோ அந்த ஆசைகள் எங்களுக்கு இல்லை. அவற்றை ஒரே அடியாக விட்டு விட்டோம். வருங்காலத்தில் எங்களுக்கு வேண்டிய தெல்லாம் ஐரோப்பாவில் நாங்கள் வசிப்பதற்கு இடமே. ஐரோப்பாவில் புதிய இடம் வேண்டும் என்று நாங்கள் சொல்லும்போது, ரஷ்யாவையும் அதை ஒட்டிக்கொண்டு சுற்றிலும் கிடக்கும் அதன் அடிமை நாடுகளையும் தவிர வேறு எந்த நாடுகளைப் பற்றி நாங்கள் சிந்தனை செய்ய முடியும்?"

இந்த வாசகத்திலிருந்து ஸோவியத் ரஷ்யாவைத் தாக்குவதற்குச் சரியான பலத்தை ஹிட்லர் திரட்டிக் கொண்டிருந்தார் என்பது நன்கு தெரிந்தது. ரஷ்யாவின் செழிப்பான பிரதேசங்களைக் கைப்பற்றவேண்டும் என்ற எண்ணம் நீண்ட காலமாக ஜெர்மானியருக்கு உண்டு. இது சரித்திர பூர்வமான உண்மை. இந்த அபிப்பிராயத்தைத் தான் ஹிட்லரும் வெளியிட்டார். தங்களுடைய உண்மை யான நோக்கத்தை மறைப்பதற்காக யூதர்கள் ரஷ்யாவில் ஆட்சி செய்கிருர்கள் என்றும், போல்ஷிவிஸத்தால் ஐரோப்பாவுக்கும் உலகத்துக்குமே ஆபத்து ஏற்படும் என்றும், ஹிட்லரும் அவருடைய சகாக்களும் தீவிரமாகப் பிரசாரம் செய்துவந்தனர். இந்தப் பிரசாரத்தின் ரகஸ்யம் மண்ணுசையைத் தவிர வேறொன்றுமில்லை என்பது தீர்க்க திருஷ்டியுள்ள உலக ராஜதந்திரிகளுக்கு நன்கு தெரிந் திருந்தது.

'மெயின் காம்ப்' ஆசிரியரான ஹிட்லர் ஜெர்மன் ஸர்வாதிகாரியானவுடன் ஸ்டாலின் விழித்துக்கொண்டார்.

எந்தச் சமயத்திலும் படையெடுப்பு - ஆபத்து ஏற்படும் என்று எதிர்பார்த்து அந்த நிலைமையைச் சமாளிப்பதற்கு ஸ்டாலின் தகுந்த ஏற்பாடுகளைச் செய்யலானார். ஹிட்லரின் வார்த்தைகளில் இவருக்குச் சிறிதும் நம்பிக்கை கிடையாது. ஹிட்லருடைய ஆக்ரமிப்பு - அகராதியில் உக்ரேனுக்கு முதல் ஸ்தானம் கொடுக்கப்பட்டிருக்கும் என்று ஸ்டாலின் நிச்சயமாக நம்பினார். கிழக்குக் கோடியிலே ஜப்பான் பயமுறுத்திக் கொண்டிருக்கையில், தனியாக ரஷ்யா சண்டை போட்டு எந்த யுத்தத்திலும் ஜயிக்க முடியாது என்ற முடிவுக்கு ஸ்டாலின் வந்தார். இவர் ஒரு காரியவாதி யாகையால், ரஷ்யாவின் பலத்தைப்பற்றி அதிகமாக எண்ணி ஏமாறவில்லை. இவருக்கு நேசநாடுகளின் நட்பு தேவைப்பட்டது. ரஷ்யா யுத்தத்தில் இறங்குவதானால், அதன் கட்சியில் பல தேசங்கள் சேர்ந்து சண்டை செய்ய வேண்டியது அவசியம் என்று ஸ்டாலின் கருதினார்.

பிறநாடுகளின் உதவியைப் பெறுவதற்கு ஐரோப்பாவின் கூட்டுப் பாதுகாப்பு ஏற்பாட்டில் ரஷ்யாவும் சேர வேண்டும். அப்பொழுதுள்ள தேச எல்லைகளைப் பாதுகாப்பதற்குச் சர்வதேசச் சட்டமும் பரஸ்பர சகாய உடன்படிக்கைகளுமே சிறந்த உத்தரவாதமாகும் என்று நீண்டகாலமாக பிரான்சு கருதிவந்தது. இதுவரை ரஷ்யா அப்பொழுதுள்ள தேச எல்லைகளை ஆதரிக்கவில்லை. ஏனெனில் வெர்ஸேல்ஸ் உடன்படிக்கை மூலம் தனது ஐரோப்பிய எல்லை நாடுகளை ரஷ்யா பறிகொடுத்திருந்தது. ரஷ்யாவின் எல்லைப்புற நாடுகள் சுதந்திர நாடுகளாக்கப்பட்டதைக் குறித்து ஆரம்பத்தில் ரஷ்யாவுக்கு ஆத்திரம் ஏற்பட்டிருந்தது. ஆனால், ஹிட்லர் அதிகாரத்திற்கு வந்ததும், பல முட்டுக்கட்டைகளாகத் தோன்றிய அந்நாடுகள் ஜெர்மனியின் ஆக்ரமிப்பை எதிர்ப்பதற்குப் பல முன்னணி அரண்களாக விளங்கின. ஆகவே அந்த அரண்களைப் பாதுகாப்பதில் ரஷ்யாவுக்குச் சிரத்தை ஏற்பட்டது. அவற்றை ஸ்திரப்படுத்தும் நோக்கத்துடன் ஏற்படக் கூடிய எந்தவிதமான கூட்டுப் பாதுகாப்பு ஏற்பாட்டிலும்

ரஷ்யா பங்குகொள்ளத் தயாராக இருந்தது. 1934-ம் வருஷத்தில் ஸோவியத் ரஷ்யா சர்வதேச சங்கத்தின் நிரந்தர மெம்பராயிற்று.

மேற்கத்தி நாடுகளுடன் பூரணமாக ஒத்துழைக்க ஸோவியத் ரஷ்யா விரும்பியது. ஆனால் இன்னும் சில இடையூறுகள் இருந்தன. பிரிட்டிஷ், பிரெஞ்சு கன்ஸெர்வெடிவ்கள் ரஷ்யாவை நம்பவில்லை. ரஷ்யாவின் பொது உடைமைக் கொள்கையைப் பற்றி அவர்களுக்குச் சந்தேகங்கள் நீங்காமல் இருந்தன. ஆனால் ஹிட்லர் அரசாங்கத்தின் போக்கு பிரெஞ்சு சர்க்காருக்கு மனமாற்றத்தை உண்டுபண்ணியது. ஸோவியத் ரஷ்யாவின் நேசம் அவசியம் என்றும், கூட்டுப் பாதுகாப்பு ஏற்பாட்டில் ரஷ்யாவும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்றும் பிரெஞ்சு சர்க்கார் தீர்மானித்தது. ஆனால் பிரிட்டிஷ் கன்ஸெர்வெடிவ் சர்க்கார் அப்பொழுதுகூட அசையவில்லை 1935-ல் ஸோவியத் சர்க்காரின் புதிய கொள்கைக்கு மகத்தான வெற்றி கிடைத்தது. அந்த வருஷத்தில்தான் பிரான்ஸ், செக்கோஸ்லொவேகியா இவ்விரு நாடுகளும் ஸோவியத் ரஷ்யாவுடன் பரஸ்பர சகாய உடன்படிக்கை செய்துகொண்டன. ஆனால் இரு பிரிட்டிஷ் மந்திரிகள் மாஸ்கோவுக்கு விஜயம் செய்து ஸ்டாலினைக் கண்டு பேசியதைத் தவிர வேறு ஒன்றும் நடக்கவில்லை.

அதிகாரத்திற்கு வந்துவிட்ட ஹிட்லர் ஆஸ்ட்ரியாவைப் பயமுறுத்தலானர். ஹிட்லரைக் கூட்டாக எதிர்க்கும் நோக்கத்துடன் 1935-ல் பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி இம் மூன்று வல்லரசுகளும் ஸ்ட்ரஸாவில் மகாநாடு கூட்டின. ஸோவியத் ரஷ்யா சர்வதேச சங்கத்தில் மெம்பராகச் சேர்ந்து ஒரு வருஷமாகியும் இம்மகாநாட்டில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. ஸோவியத் பிரதிநிதி லிட்விநுப் சர்வதேச சங்கத்தின் கூட்டத்தில் அப்பொழுதுள்ள தேச எல்லைகளைப் பாதுகாக்கக் கூட்டுப் பாதுகாப்பு முறையை வற்புறுத்தினர். இதிலிருந்து ஸோவியத் ரஷ்யா யுத்தத்தைத் தவிர்க்க விரும்பியது என்பது கண்கூடு. ரஷ்யா வர்ஸேல்ஸ் உடன்படிக்கையை ஒப்புக்

கொள்ளவில்லை யென்பதும், ஜெர்மனியையும் வேறு எந்த நாட்டையும் பார்க்கிலும் ரஷ்யாதான் அதிகப் பிரதேசத்தை இழந்திருந்ததென்பதும் குறிப்பிடத் தக்கன.

ஜப்பானியர் மஞ்சூரியாவைத் தாக்கியதைப்போலவே முஸோலினியும் அபிஸீனியாவைத் தாக்கினர். இத்தாலியை ஸோவியத் ரஷ்யா ஒரு சர்வதேசக் 'குள்ளநரி' யாகவே மதித்து வந்திருக்கிறது. ஆகவே ஸோவியத் ரஷ்யா இத்தாலியின் ஆக்ரமிப்பைச் சர்வதேச சங்கத்தில் வன்மையாகக் கண்டித்தது. ஆனால் பிரான்ஸ் இத்தாலியைப் பகைத்துக்கொள்ள விரும்பவில்லை. ஆகவே சர்வதேச சங்கம் கடுமையான எதிர் நடவடிக்கை எடுக்க முடியாமல் செய்தது பிரான்ஸ்தான். இத்தாலிக்கு விரோதமாகப் பெயரளவில் பொருளாதார நிர்ப்பந்தங்கள் கொண்டுவரப்பட்டன. ஆனால் அவை கடுமையாக அமல் நடத்தப்படவில்லை. அபிஸீனியருக்கு எவ்விதமான உதவியும் அளிக்கப்பட வில்லை. முஸோலினியால் அபிஸீனியா முழுவதையும் சுலபமாக ஆக்ரமித்துக் கொள்ள முடிந்தது.

ரஷ்யா மேற்கத்தி நாடுகளுடன் உறவுகொண்டாட ஆரம்பித்ததும் இத்தாலியும் ஜெர்மனியும் ரஷ்யாவுக்கு விரோதமாகப் பொதுஉடைமை எதிர்ப்புப் பிரசாரத்தைப் பலமாக நடத்தின. 'போல்ஷிவிக் தொத்து வியாதி' ஐரோப்பாவைப் பிடித்துக்கொள்லாமல் பாதுகாக்கும் புனித கைங்கரியத்தைச் செய்யவேண்டிய பொறுப்பைத் தாங்கள் ஏற்றுக்கொண்டிருப்பதாக ஜெர்மனியும் இத்தாலியும் பறைசாற்றின. அராஜகத்தையும் குழப்பத்தையும் ஐரோப்பாவிலே பரப்ப ஸோவியத் ரஷ்யா முயல்வதாகவும், சட்டத்தையும் அமைதியையும் பாதுகாக்கத் தாங்கள் பாடுபடுவதாகவும் அவை முழக்கின. ஐரோப்பாவின் நாகரிகத்தைப் பாதுகாப்பதில் ஜெர்மனிக்கும் இத்தாலிக்கும் ஏற்பட்டுள்ள ஆர்வத்திற்கும், கூட்டுப் பாதுகாப்பில் ஸோவியத் ரஷ்யாவுக்குத் திடீரென்று ஏற்பட்ட 'காதலுக்கும்' வித்தியாசம் கிடை

யாது. ஏனென்ருல் இரண்டிலுமே அந்தரங்க சுத்தி கிடையாது. எல்லாம் சுயநலந்தான்.

1936-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் முதலாவது சோதனை ஏற்பட்டது. ஹிட்லர் ரைன்லந்தைக் கைப்பற்றி அங்கு ராணுவ அரண்களை அமைக்கலானர். பிரான்ஸ் இத்தாலி விஷயத்தில் எவ்வாறு தாட்சிண்யப்பட்டதோ, அவ்வாறே பிரிட்டனும் ஜெர்மனியிடம் தாட்சிண்யப்பட்டது. பிரான்ஸுக்கு ஆத்திரம் மூண்டது. ஆத்திரப்பட்டு என்ன பிரயோஜனம்? உள்நாட்டிலே ஐக்கியமில்லை. ஹிட்லர்மீது நடவடிக்கை எடுக்க பிரிட்டனுக்கு இஷ்டம் இல்லை. ஆகவே பிரான்ஸ் செயலற்றுப் போயிற்று.

1936-ம் வருஷம் நவம்பர் மாதம் 25-ந் தேதியன்று ஜெர்மனிக்கும் ஜப்பானுக்கு மிடையே பொதுஉடைமை எதிர்ப்பு உடன்படிக்கை ஏற்பட்டது. இந்த உடன்படிக்கையில் ஒரு வருஷத்திற்குப் பின்னர் இத்தாலியும் கையொப்பமிட்டது. இந்த மூன்று அச்சு நாடுகளுக்கு மிடையே வரவரத் தொடர்புகள் பலப்பட்டன. வல்லரசுகள் இரு கட்சிகளாகப் பிரிந்துவிட்டன. அவை ஒன்றை யொன்று வளைந்துகொள்ளவும் தயாராகிவிட்டன. ஒரு பக்கத்தில் பிரிட்டனும் பிரான்சும், மற்ருெரு பக்கத்தில் ரஷ்யாவும் ஜெர்மனியை வளைந்துகொண்டன. ஜெர்மனியும் ஜப்பானும் ரஷ்யாவை வளைந்துகொண்டன. ரஷ்யாவும் அமெரிக்காவும் ஜப்பானை வளைந்துகொண்டன. வல்லரசுகளின் அந்நியநாட்டுக் கொள்கை அவற்றை மற்ருெரு உலக யுத்தத்திற்குத் துரிதமாக இழுத்துச் சென்றுகொண்டிருந்தது. அச்சு நாடுகளின் பொது உடைமை எதிர்ப்பு உடன்படிக்கைக்கும் பொதுஉடைமை இயக்கத்திற்கும் சம்பந்தமே கிடையாது. ஏனெனில் அவை தங்களுடைய எல்லைகளுக்குள் பொதுஉடைமை இயக்கத்தை நீண்ட காலத்திற்கு முன்னரே அடக்கிவிட்டன. ஆகவே அவை தங்களுடைய ஆக்ரமிப்புக் கொள்கையைத் தான் 'பொதுஉடைமை எதிர்ப்பு' என்று அழைக்கலாயின என்று கூறுவது மிகையாகாது.

1936-ம் வருஷம் ஜூலை மாதம் 17-ந் தேதியன்று மற்றொரு பெரிய சோதனை ஏற்பட்டது. ஜெனரல் பிராங்கோ தமது படைகளைத் திரட்டிக்கொண்டு ஸ்பானிஷ் ஸர்க்கார்மீது போர் தொடுத்துவிட்டார். $2\frac{1}{2}$ வருஷம் உள்நாட்டு யுத்தம் மிகவும் கோரமாக நடைபெற்றது. மேற்கத்தி நாடுகளின் வட்டாரத்திலே தனக்கு அந்தஸ்து ஏற்பட்டுக்கொண்டிருந்த சமயத்தில், ஸ்பானிஷ் உள்நாட்டு யுத்தம் ஆரம்பமானதைக் கண்டு ஸோவியத் ரஷ்யா சிறிது சஞ்சலமடைந்தது. ஸோவியத் ரஷ்யா முதலில் ஸ்பானிஷ் உள்நாட்டு யுத்தத்தில் தலையிடவில்லை. இத்தாலியும் ஜெர்மனியும் பகிரங்கமாக ஜெனரல் பிராங்கோவுக்கு உதவி செய்யலாயின. பின்னர் ஸோவியத் ரஷ்யாவும் தலையிட்டு ஸ்பானிஷ் சர்க்காருக்கு உதவி செய்யலாயிற்று. படைகளும் யுத்த தளவாடங்களும் ரஷ்யாவிலிருந்து ஸ்பானிஷ் சர்க்காருக்கு அனுப்பப்பட்டன. உண்மையில் ஸ்பானிஷ் மண்ணில் கம்யூனிஸத்திற்கும் பாஸிஸத்திற்கு மிடையேதான் பலப் பரீக்ஷை நடைபெற்றது. ஸ்பானிஷ் உள்நாட்டு யுத்தத்தில் ரஷ்யா தலையிட்டதற்கு இரு காரணங்கள் இருக்கலாம். பிராங்கோவும் அவருடைய பாஸிஸ்டு நண்பர்களும் வெற்றி பெற்றால் ஸ்பெயின் பிரான்சின் விரோத நாடாகிவிடும். பிரான்ஸோ ரஷ்யாவின் நேச நாடு. ஸ்பானிஷ் அரசாங்கத்தை கம்யூனிஸ்டுகள் கைப்பற்றினால், மேற்குப் பிரதேசத்தில் ரஷ்யாவுக்குச் செல்வாக்கு ஏற்படும். இந்தச் செல்வாக்கைப் பயன்படுத்திக்கொண்டு, ஸோவியத் ரஷ்யாவால் மேற்கத்தி வல்லரசுகளின் நட்பை வற்புறுத்திக் கோரலாம். இதுதான் இரண்டாவது காரணம்.

1914-ம் வருஷ யுத்தத்தின் கஷ்டங்களை அனுபவித்த ரஷ்யா எவ்வாறுவது மற்றொரு உலக யுத்தத்தைத் தவிர்க்க விரும்பியது. சமாதானத்திற்கு உலை வைக்க முயல்பவர்களை பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா இம் மூன்று வல்லரசுகளும் சேர்ந்து அடக்க முற்பட்டால், மற்றொரு உலகயுத்தம் ஏற்படமாட்டாது என்பதுதான் ஸோவியத் சர்க்காரின் எண்ணம். ஆனால் மேற்கத்தி

நாடுகள் ஒத்துழைக்கத் தயாராக இல்லை. அந்நிய நாடுகள் ஸ்பானிஷ் உள்நாட்டு யுத்தத்தில் தலையிடாமல் பார்த்துக் கொள்ளும் பொருட்டு லண்டனில் ஒரு நடுநிலைமைக் கமிட்டி நியமிக்கப்பட்டது. ஸோவியத் ரஷ்யா தனது பல படைகளை ஸ்பெயினிலிருந்து திரும்ப அழைத்துக் கொண்டு, நடுநிலைமைக் கமிட்டியைப் பின்பற்றியது. ஆனால் இத்தாலியும் ஜெர்மனியும் நடுநிலைமை வகிப்பதற்குப் பதிலாக, மேன்மேலும் துருப்புகளையும் யுத்த தளவாடங்களையும் பிராங்கோவுக்கு அனுப்பிக்கொண்டிருந்தன. இந்த அதிக்கிரமங்களை ஸோவியத் ரஷ்யா எடுத்துக் காட்டியபோது, 'துஷ்டப் பயல்' என்ற கெட்ட பெயரையே வாங்கியது. மேற்கத்தி நாடுகள் ஹிட்லருக்கும் முஸோலினிக்கும் அதிருப்தி உண்டுபண்ண விரும்பவில்லை. மற்ருெரு சுவாரஸ்யமான விஷயம் என்னவென்ருல், ஸ்பானிஷ் சர்க்கார் ரஷ்யாவின் உதவியுடன் ஸ்பெயினில் கம்யூனிஸத்தை ஸ்தாபிக்கவே முயற்சி செய்வதாகவும், அந்த முயற்சியை ஹிட்லரும் முஸோலினியும் எதிர்ப்பதாகவும் பிரிட்டனிலும் பிரான்சிலும் பலர் கருதலாயினர். இறுதியில் ஜெனரல் பிராங்கோ வெற்றி பெறவே, நடுநிலைமைக் கமிட்டி வெட்கக்கேடான முறையில் கலைந்து போக வேண்டியதாயிற்று. பிராங்கோவின் வெற்றி பாஸிஸ்டு வல்லரசுகளாகிய ஜெர்மனி, இத்தாலியின் வெற்றியே.

VI முனிக் நாடகம்

1938-ம் வருஷம் மார்ச்சு மாதம் 10-ந் தேதியன்று ஹிட்லர் ஆஸ்ட்ரியாமீது படையெடுத்து அதை ஆக்ரமித்துக் கொண்டார். இது அவருடைய முதலாவது 'பகற்கொள்ளை'யாகும். ஆஸ்ட்ரியா ஆக்ரமிக்கப்பட்டதால், பிரான்ஸாலும் ரஷ்யாவாலும் நேரடியான உதவியை அளிக்க முடியாதபடி ஸெக்கோஸ்லொவேகியா துண்டிக்கப்பட்டுவிட்டது. நாஜி ஜெர்மனி அநேகமாக ஸெக்கோஸ்லொவேகியாவை இரு பக்கங்களைத் தவிர மற்றப் பக்கங்களில் எல்லாம் வளைந்துகொண்டது. அந்த

இரு பக்கங்களிலுள்ள ஹங்கேரி, ஸெக்கோஸ்லோவேகியாவுக்கு விரோதமானது. இன்னொரு பக்கத்தில் உள்ள போலந்தை நம்பமுடியாது. ஆகவே ஸெக்கோஸ்லொவேகியாவின் குரல்வளையை ஜெர்மனி எந்த வேளையிலும் நெரித்துவிடக் கூடும் என்ற அபாயகரமான நிலைமை ஏற்பட்டது.

நாஜிகள் 'சூடெட்டன்' ஜெர்மானியரை ஸெக் சர்க்காருக்கு விரோதமாகத் தூண்டிவிட்டனர், தங்களுடைய இடைவிடாத பிரசாரத்தின் மூலமாக. 1938-ம் வருஷம் மே மாதம் 20-ந் தேதியன்று ஹிட்லர் ஸெக் எல்லைப் புறத்தை நோக்கி ஏராளமான படைகளை அனுப்பினர். ஆனல் ஸெக் சர்க்காரும் ஆக்ரமிப்பை எதிர்க்கத் தயாராக இருந்தது. தாற்காலிகமாக ஹிட்லர் தமது படையெடுப்பை ஒத்திவைத்தார். சூடெட்டன் ஜெர்மானியர் பிரச்னையைப் பரிசிலனைசெய்து சமரஸம் செய்துவைக்க லார்டு ரன்ஸிமென் ஸெக்கோவுக்கு அனுப்பப்பட்டார். அவருடைய வேண்டுகோளுக்கிணங்க ஸெக்கோ சர்க்கார் கூறிய ஒவ்வொரு ஆலோசனையையும், சூடெட்டன் ஜெர்மானியரின் தலைவர் ஹெனலின் நிராகரித்தார். ஆரம்பத்தில் அவருடைய கோரிக்கைகள் நியாயமாக இருந்தன. ஆனல் அவர் ஹிட்லரைப் பேட்டி கண்டு திரும்பிய பின்னர் அவருடைய கோரிக்கைகள் கடுமையாகிவிட்டன.

ஹிட்லர் மிகவும் பிடிவாதமாக இருந்தார். அவருடைய படையெடுப்பை எதிர்க்க ஸெக்கோஸ்லொவேகியா தயாராக இருந்தது. பிரான்ஸ் தனது வாக்குறுதியைக் காப்பாற்ற ஒரு பெரிய யுத்தத்துக்குத் தயாரா என்ற கேள்வி எழுந்தது. பிரான்ஸ் யுத்தத்திற்குச் சென்ருல் பிரிட்டன் உதவி செய்யுமா என்பதும் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயமாகும்.

பிரிட்டிஷ் பிரதமராக இருந்த காலஞ்சென்ற நெவில் சேம்பர்லேன் மற்ருெரு ஐரோப்பிய யுத்தம் ஏற்படாமல் தவிர்க்க மிகவும் ஆவலாயிருந்தார். அவர் தமது சிரமத்தையும் அந்தஸ்தையும் மறந்து, மும்முறை ஹிட்லரிடம் சமாதானக் 'காவடி' எடுத்துச் சென்ருர்.

பெர்ஜ்ஜஸ்காடனில் முதலாவது சம்பாஷணை நடைபெற்றது. ஸெக் பிரதிநிதிகள் இச்சம்பாஷணையில் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்படவில்லை. பிரிட்டிஷ் பிரதமர் பெர்ஜ்ஜஸ்காடனிலிருந்து ஸெக் தலைநகருக்குச் செல்லவும் இல்லை. 1938-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 21-ந் தேதி யன்று அதிகாலை 2 மணிக்கு பிரிட்டிஷ் ஸ்தானிகரும் பிரெஞ்சு ஸ்தானிகரும் ஸெக் பிரஸிடெண்டு டாக்டர் பெனேஷை எழுப்பி, "உங்கள் பார்லிமெண்டின் சம்மதம் பெருமலே எல்லைப்புற மலைப்பிரதேசத்தையும் அங்குள்ள மாகினுட் அரணையும் ஜெர்மனிக்கு விட்டுக்கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் ஸெக்கோ தாக்கப்படும்போது பிரான்ஸின் உதவியை நீங்கள் எதிர்பார்க்க முடியாது" என்று கூறினுர்கள். ஸெக்கோவுக்கு உதவி செய்வதாக வாக்குறுதி யளித்திருந்த பிரான்ஸே பின்வாங்கி விட்டதென்ருல், வாக்குறுதி யளிக்காத பிரிட்டனுல் எங்ஙனம் உதவி செய்ய முடியும்? பிரான்ஸ் தனது வாக்குறுதிக் கிணங்க ஸெக்கோவுக்கு உதவியளித்தால் தானும் உதவி செய்வதாக ஸோவியத் ரஷ்யா அறிவித்தது.

இரண்டாவது தடவையாக பிரிட்டிஷ் பிரதமர் கோடஸ்பர்க்கிற்குச் சென்று ஹிட்லருடன் சம்பாஷித்தார். ஹிட்லரின் கோரிக்கைகள் எல்லையின்றி வளர்ந்துவிட்டதால், அப்பொழுதும் உடன்பாடு ஏற்படவில்லை. செப்டம்பர் மாதம் 29-ந் தேதியன்று மூனிக்கில் நடந்த மகாநாட்டில் ஹிட்லரின் நிபந்தனைகள் ஒப்புக்கொள்ளப்பட்டன. ஸெக்கோஸ்லொவேகியாவைத் துண்டாடத் தீர்மானிக்கப்பட்டது. பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி இந்நான்கு வல்லரசுகளும் இந்த மகாநாட்டில் கலந்து கொண்டன. பிரான்சின் நேச நாடும், ஸெக்கோவின் பாதுகாப்புக்கு உத்தரவாதமளித்த நாடுமாகிய ஸோவியத் ரஷ்யா இந்த மகாநாட்டுக்கு அழைக்கப்படவில்லை. ஜெர்மனி எவ்வளவு பாகம் எடுத்துக்கொள்ளும் என்றுகூடத் தெரியாமல், பாக்கியிருக்கக் கூடிய ஸெக்கோவின் சுதந்திரத்திற்கு பிரிட்டனும் பிரான்சும் உத்தரவாத மளித்தன. சர்வ தேச பாங்கில் ஸெக்

சர்க்கார் மிகவும் சிக்கனம் பிடித்துப் போட்டிருந்த பணத்தைக்கூட ஜெர்மனி எடுத்துக்கொள்வதற்கு பிரிட்டனும் பிரான்சும் சம்மதித்துவிட்டன. ஆகவே ஸோவியத் ரஷ்யாவை மூனிக் மகாநாட்டில்சேர்த்துக்கொள்ளாமல், பிரிட்டனும் பிரான்சும் ஸெக்கோ 'ஆட்டை' ஜெர்மன் 'ஓநாய்க்குப்' பலி கொடுத்துவிட்டன. இவ்விதமாக, ஆக்ரமிப்பை எதிர்ப்பதற்கும், கூட்டுப் பாதுகாப்புக்கும் மேற்கத்தி நாடுகளின் ஒத்துழைப்பும் ஒத்தாசையும் கிடைக்கும் என்ற ஸோவியத் ரஷ்யாவின் நம்பிக்கை வீணுகப் போய்விட்டது.

மூனிக் உடன்படிக்கை மூலம் ஹிட்லர் தமது எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டதுடன் ஸோவியத் ரஷ்யாவையும் அவமதித்தார். அதாவது, ஐரோப்பிய விவகாரங்களில் கலந்துகொள்ள யோக்கியதாம்சம் கிடையாதென்று ஸோவியத் ரஷ்யா ஒதுக்கப்பட்டதல்லவா? ஜெர்மனியும் இத்தாலியும் மூனிக் மகாநாட்டில் ஸோவியத் ரஷ்யாவைச் சேர்த்துக்கொள்ள விரும்பாததால், ஸோவியத் ரஷ்யாவுக்கு அழைப்பு அனுப்பப்படவில்லையென்றுகூடக் கூறப்படுகிறது.

ஸெக்கோஸ்லொவேகியாவைப் பலிகொடுக்க பிரிட்டன் முனேந்ததைப் பற்றி ஸோவியத் சர்க்கார் பத்திரிகை "இஸ்வெஸ்தியா" எழுதியது:—"உங்களுக்குச் சொந்தமாக இல்லாதவற்றை ஆக்ரமிப்புக்காரர்களுக்குத் தானம் செய்து அவர்களைத் திருப்தி செய்யலாம் என்று நம்புகிறீர்கள். ஆனால் ஆக்ரமிப்புக்காரர்களுக்குத் தாட்சிண்யம் காட்டக்கூடாது. 'தடிக்கம்பை' எடுத்தால் தான் அவர்கள் வழிக்கு வருவார்கள். இது எங்களுடைய நம்பிக்கை. மூனிக் ஒப்பந்தத்தின் மூலம் சேம்பர்லேனும், பிரிட்டிஷ், பிரெஞ்சு முதலாளி வர்க்கங்களும் ஒரு மிகக் கொடிய காரியத்தைச் செய்துவிட்டனர்."

1938-ம் வருஷம் இலையுதிர் காலத்தில் ரஷ்யாவின் நிலைமை அபாயகரமாகிவிட்டது. ஸெக்கொஸ்லொவேகியாவையும் ஹங்கேரியையும் அடிமைப்படுத்தி மத்திய ஐரோப்பாவில் ஆதிக்கம் செலுத்தவேண்டும் என்றும்,

பின்னர் ஜெர்மன் ஆட்சிக்கு உட்பட்ட பெரிய உக்ரேன் ராஜ்யத்தை ஸ்தாபிக்கவேண்டும் என்றும், ஹிட்லர் விரும்பியதாக பெர்லினில் இருந்த பிரெஞ்சு ஸ்தானிகர் கூறினர். ரஷ்யாவுக்கு உதவிசெய்ய நேசநாடு ஒன்றும் இல்லை. பிரான்ஸ் கிழக்கு ஐரோப்பாவில் தனது செல்வாக்கை விட்டுக்கொடுக்கத் தயாராக இருந்தது. ஹிட்லர் தமது ஜெர்மன் பிரஜைகளையே மீட்பதாகவும், இனி 'நமது காலத்தில் சமாதானம் நிலைபெற்றுவிட்டது' என்பதாகவும், பிரிட்டிஷ் சர்க்கார் இன்பக் கனவு கண்டுகொண்டிருந்தது. ரஷ்யாவுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. போலந்துடன் ஸோவியத் ரஷ்யா மீண்டும் சமரஸப் பேச்சுகள் நடத்துவதாக டிஸம்பர் மாதத்தில் வதந்திகள் உலாவின. ஜெர்மன் சர்க்காருடனும் சமரஸப் பேச்சுகளை ஆரம்பிக்க ஸோவியத் ரஷ்யா முயன்றதாக 1939 ஜனவரியில் தெரியவந்தது. இதில் ஆச்சரியமொன்றுமில்லை.

ஸோவியத் சர்க்காருக்கும் ஜெர்மன் சர்க்காருக்கும் கடுமையான வார்த்தைப் போர் நடந்துகொண்டிருந்தும், இரு நாடுகளுக்கு மிடையே ராஜதந்திரத் தொடர்புகள் விட்டுப் போகவில்லை. பரஸ்பரம் கடன்கள் கொடுக்கப்பட்டன. பண்டமாற்றும் நடைபெற்றது. பல செல்வாக்குள்ள நாஜிகள் ஹிட்லரைப்போல ஸோவியத் ரஷ்யாவை அவ்வளவு தீவிரமாக வெறுக்கவில்லையென்று தெரியவந்தது. அவர்கள் மூலமாக இரு சர்க்கார்களுக்கு மிடையே தொடர்புகள் வைத்துக்கொள்ளப்பட்டன. பிரான்ஸுக்கும் ரஷ்யாவுக்கு மிடையே உடன்படிக்கை ஏற்பட்டபின்னரே ஜெர்மனியிலும் இத்தாலியிலும் பொது உடைமை எதிர்ப்பு மிகவும் தீவிரமாயிற்றென்பது ஸோவியத் சர்க்காருக்கு நன்கு தெரியும். மேற்கத்தி நாடுகளின் ஒத்துழைப்பு கிடைக்கவில்லையாதலால், ஜெர்மனியின் விரோதம் குறையும் என்று ரஷ்யா எதிர்பார்க்க இடம் இருந்தது.

1939-ம் வருஷம் மார்ச்சு மாதம் 14-ந் தேதியன்று ஹிட்லர் அடுத்த கொள்ளையை நடத்தினர். அதாவது

ஸெக்கோஸ்லொவேகியாவின் பாக்கிப் பாகத்தையும் அவர் ஆக்ரமித்துக்கொண்டார். அவர் பின்பற்றிய முறைகள் மிகவும் கொடியவை. ஜெர்மனி ஸெக்கோமீது கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ளா தென்று பெர்லினில் உள்ள பிரிட்டிஷ், பிரெஞ்சு ஸ்தானிகர் களுக்கு உறுதி கூறப்பட்டது. ஆனல் அதே தினத்தில் ஸெக்கோவின் புதிய பிரஸிடெண்டு டாக்டர் ஹாச் சாவும், அவருடைய அந்நிய நாட்டு மந்திரியும் பெர்லி னுக்குத் தருவிக்கப்பட்டனர். பாக்கியுள்ள ஸெக்கோவின் சுதந்திரத்தை எழுதிக் கொடுக்காவிட்டால் மறுநாள் காலே 9 மணிக்கு ஸெக் தலைநகர் பிரேக்மீது குண்டுகளை வருஷித்து அதை அழித்துவிடப் போவதாகப் பயமுறுத் தினர்கள். காலே 6 மணிக்கு வெடி விமானங்கள் புறப் படுவதாக இருந்தன. துருப்புக்கள் ஏற்கெனவே கிளம்பி விட்டன. டாக்டர் ஹாச்சா பலதடவை மூர்ச்சையானர்; டாக்டர்கள் அவருக்குச் சிகிச்சை செய்தனர். இறுதியில் மிகவும் களைத்துப்போயிருந்த சமயத்தில் அவர் ஸெக்கோ வின் சுதந்திரத்தை எழுதிக் கொடுத்துவிட்டார். இக் காரணமாக ஸெக்கொஸ்லொவேகியாவால் ஜெர்மனி யரைக் கட்டுப்பாடாக எதிர்க்க முடியவில்லை. ஹிட்லர் ஒரு குண்டுகூடச் சுடாமல் தமது நோக்கத்தை நிறை வேற்றிக்கொண்டார். அடுத்தபடியாக அதே தந்திரத் தைக் கையாண்டு ஹிட்லர் லிதுவேனியாவிடமிருந்து மெமல் துறைமுகத்தைப் பிடுங்கிக்கொண்டார்.

VII ரஷ்யா—ஜெர்மன் உடன்படிக்கை

பின்னர் ஹிட்லர் போலந்தின்மீது கவனம் செலுத்த லானர். மேற்கத்தி நாடுகள் விழித்துக்கொண்டன. உண்மையில் ஹிட்லர் ஜெர்மன் பிரஜைகளை மீட்க விரும்ப வில்லை என்றும், ஐரோப்பா முழுவதிலுமே ஆதிக்கம் செலுத்த விரும்புகிருர் என்றும் அப்பொழுதுதான் பிரிட்டனுக்கு ஞானேதயம் ஏற்பட்டது. போலந்திலும் ருமேனியாவிலும் ஜெர்மனி படையெடுத்தால் ஒத்தாசை

செய்வதாக பிரிட்டனும் பிரான்ஸும் வாக்குறுதி யளித்தன. ஸெக்கோமீது ஹிட்லர் படையெடுத்த வுடனே, புகாரெஸ்டில் சமாதானத்தைப் பாதுகாக்க விரும்பும் நாடுகளின் மகாநாட்டைக் கூட்டவேண்டு மென்று ரஷ்யா ஆலோசனை கூறியது. ஆனால் அந்த ஆலோசனை அப்பொழுது நிராகரிக்கப்பட்டது. எனினும், அதே வருஷம் ஏப்ரல் மாதத்தில் பிரிட்டிஷ் சர்க்கார் ரஷ்யாவுடன் நேச உடன்படிக்கை செய்துகொள்ளும் பொருட்டுச் சமரஸப் பேச்சுகளை ஆரம்பித்தது. நாஜிகள் உக்ரேன்மீது படையெடுப்பதற்குத் திட்டம் போட்டிருந்த சமயம் அது. மூனிச் உடன்படிக்கை ஏற்பட்ட பின், உக்ரேன் படையெடுப்புத் திட்டத்திற்கு மேற்கத்தி நாடு களின் ஆசிர்வாதமும் கிடைத்துவிட்டதாகவே ஹிட்லர் கருதினார். ஆனால் பிரிட்டனும் பிரான்ஸும் போலந் துக்கு உத்தரவாதம் அளித்தவுடன், தமது லட்சியத்தை யடையப் போலந்து முட்டுக்கட்டையாகிவிட்டது என் பதை ஹிட்லர் உணர்ந்துகொண்டார். ஆனால் அவர் அப் பொழுதும் கலங்கவில்லை. ஸ்டாலினைப் போலவே அவர் தமது திட்டத்தை மாற்றிக்கொண்டார். தமது வழியை அடைத்துக்கொண்ட மேற்கத்தி நாடுகளுடன் ‘ஒரு கை’ பார்க்க ஹிட்லர் தீர்மானித்துவிட்டார். பல மாதங் களாகச் சமரஸப் பேச்சுகளை நடத்த ஆர்வம் கொண் டிருந்த ரஷ்யாவைப் பயன்படுத்திக்கொள்ள விரும்பினார் ஹிட்லர். உக்ரேனைப் பங்கு போட்டுக்கொள்ளத் தங்க ளுடன் சேரும்படி பிப்ரவரி மாதத்தில் போலந்தை வற் புறுத்திக் கொண்டிருந்த ஜெர்மன் சர்க்கார், இப் பொழுதோ ஸோவியத் சர்க்காரின் வேண்டுகோளுக் கிணங்கியது. உடனடியாகச் சமரஸப் பேச்சுகள் ஆரம்ப மாயின. அதே சமயத்தில் பிரிட்டிஷ் சர்க்காரும் ஸோவியத் சர்க்காருடன் சமரஸப் பேச்சுகளை ஆரம்பிக்க விரும்பியது. ஆகவே, ஏக காலத்தில் ஒரு பக்கம் ஸோவியத் சர்க்காருக்கும் ஜெர்மன் சர்க்காருக்கும் இடையேயும், மற்றொரு பக்கம் ஸோவியத் சர்க்கா ருக்கும் பிரிட்டிஷ் சர்க்காருக்கும் இடையேயும் சமரஸப் பேச்சுகள் ஆரம்பமாயின. நாலு மாதமாக இந்தப்

பேச்சுகள் நடைபெற்றன. ஆரம்பத்திலிருந்தே சமரஸப் பேச்சுகளின் போக்கு ஜெர்மனிக்குச் சாதகமாக இருந்தது. ஸோவியத் சர்க்கார் பிரிட்டிஷ் அரசாங்கத்தையும் ஹிட்லர் அரசாங்கத்தையும் ஒரேவிதமாகவே வெறுத்து வந்தது. ஆகவே ஸோவியத் சர்க்கார் ஜெர்மனியுடன் உடன்படிக்கை செய்துகொள்வதில் அதிக ஊக்கம் காட்டியதற்குக் காரணம் பிரியம் அல்ல. சமீபகாலம்வரை ஸோவியத் பூமிமீது படையெடுக்க ஹிட்லர் தயாராக இருந்தார். மேற்கத்தி ஜனநாயக நாடுகளைச் சேர்ந்த செல்வாக்குள்ளவர்களில் சிலர் அத்தகைய படையெடுப்பைச் சந்தோஷமாகவே வரவேற்றிருப்பார்கள். ஆனால் ஸோவியத் சர்க்காருடன் சமரஸப் பேச்சுகளை நடத்த ஹிட்லர் ஏன் இணங்கினார் என்று கேட்கலாம். ஜெர்மனி போலந்தைத் தாக்கும்போது ஸோவியத் ரஷ்யா நடுநிலைமை வகிக்கவேண்டும் என்பதுதான் ஹிட்லரின் நோக்கம். உக்ரேன்மீது படையெடுக்கும் உத்தேசம் தமக்குக் கிடையாது என்று ஹிட்லர் தாற்காலிகமாக உறுதி கூறிவிட்டார். நடுநிலைமை வகிக்க ரஷ்யா தயாராக இருந்தது. ஆகவே ஜெர்மனி ரஷ்யாவிடமிருந்து விசேஷச் சலுகைகளையோ பெரிய பிரதியுபகாரத்தையோ எதிர்பார்க்கவில்லை. ஆனால் பிரிட்டனே போலந்தை ஜெர்மனி தாக்கினால், ஜெர்மனியை எதிர்ப்பதற்கு நேச நாடுகளுடன் ரஷ்யாவும் ஒத்துழைக்க வேண்டுமென்று உறுதிமொழி கேட்டது. இந்த உறுதிமொழியை அளிப்பது மிகவும் கஷ்டம் அல்லவா? போலந்துக்கு நேச நாடுகள் உத்தரவாதம் அளித்ததால், ஸோவியத் சர்க்காருடன் லாபகரமாக உடன்படிக்கை செய்துகொள்ளும் சந்தர்ப்பத்தைப் பிரிட்டன் இழந்தது. நான்கு வருஷங்களாக ரஷ்யாவின் நலனைக் கருதிப் போராட மறுத்த நேச நாடுகள், இப்பொழுதோ தங்களுடைய நலனுக்காக ரஷ்யா போராட வேண்டும் என்று கருதினால் ஸோவியத் சர்க்கார் எவ்வாறு இணங்கும்? முதலில் மேற்கத்தி நாடுகளை முறியடிக்கும் பொருட்டு, ஸோவியத் ரஷ்யாவுக்கு விரோதமான தனது கொள்கையைத் துறந்துவிட்டு ஹிட்லர் ஸோவியத் சர்க்காருடன் சமரஸப் பேச்சுகளை

ஆரம்பித்த அதே சமயத்தில், பிரிட்டனும் சமரஸப் பேச்சு களை ஆரம்பித்தது. அந்த நிலைமையில் அவர்களுடைய பேச்சுகளால் எதிர்பார்த்த பலன் ஏற்படவில்லை. நேச நாடுகள் ரஷ்யாவுக்கு எவ்விதமான சலுகையும் காட்டத் தயாராயில்லை. ஆகவே, நேசநாடுகளுடன் உடன்படிக்கை செய்து கொள்ளுவதில் ரஷ்யாவுக்குச் சிரத்தை ஏற்பட வில்லை. போலந்தின் சுதந்திரத்தைப் பாதுகாக்க நேச நாடுகள் வாக்குறுதி அளித்தால், ரஷ்யாவை எதிர்பாரா மலே கிழக்கு முனையில் அவை போர் புரிந்தாக வேண்டும் என்று ஸோவியத் சர்க்கார் உறுதியாகக் கருதிவிட்டது.

ஜெர்மனியோ ஸோவியத் ரஷ்யாவிடமிருந்து எந்த விதமான சலுகைகளையும் கேட்கவில்லை. போலந்தைத் தாக்கும்போது ஸோவியத் ரஷ்யா நடுநிலைமை வகிக்க வேண்டும் என்பதுதான் ஜெர்மனியின் விருப்பம். மற்ற வர்களின் சுதந்திரத்தைப்பற்றி ஜெர்மனிக்குக் கொஞ்ச மும் கவலையில்லை. மாஸ்கோவுக்கு பிரிட்டிஷ் தூது கோஷ்டி வந்திருந்ததால், ஸோவியத் சர்க்காருக்கு மிகவும் சாதகமான நிலைமை ஏற்பட்டது. போலந்தைப் பங்கு போட்டுக் கொள்ளவும், பால்டிக் நாடுகளின் முக்கியமான படைத் தளங்களை ரஷ்யாவுக்கு விட்டுக் கொடுக்கவும் முன்னதாகவே ஒப்புக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். 1939-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 24-ந் தேதியன்று ஜெர் மனிக்கும் ஸோவியத் ரஷ்யாவுக்கும் இடையே அனுக்ர மிப்பு - உடன்படிக்கை ஏற்பட்டது. ரஷ்யாவுக்கு இது லாபகரமான பேரமே.

VIII போலந்தின் மறைவு

ரஷ்யாவுக்கும் ஜெர்மனிக்குமிடையே அனுக்ரமிப்பு - ஒப்பந்தம் ஏற்பட்டு ஒரு வாரத்திற்குப் பின்னர் ஹிட்லர் போலந்துமீது படையெடுத்தார். நேசநாடுகள் போலந்துக்குத் தாங்கள் கொடுத்த வாக்குறுதியை நிறை வேற்றும் பொருட்டு ஜெர்மனிமீது யுத்தப் பிரகடனம் செய்தன. இவ்விதமாக இரண்டாவது ஐரோப்பிய யுத்தம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

ஒரு மாதத்திற்குள் போலந்து நசுக்கப்பட்டது. மேற்கத்தி நாடுகளின் உதவி உடனடியாகப் போலந்துக்குக் கிடைக்கவில்லை. ஜெர்மனியருக்கு மிகவும் பராக்கிரமம் வாய்ந்த விமானப் படை இருந்ததால், இவ்வளவு துரிதமான வெற்றி கிடைத்தது. போலந்தின் விமான நிலையங்கள் தகர்க்கப்பட்டன. டெலிபோன்கள், பாலங்கள் முதலியன அழிக்கப்பட்டன. ரஷ்யர்களும் இந்தச் சந்தர்ப்பத்தை உபயோகித்துக் கொண்டு போலந்துக்குள் பிரவேசித்தனர். போலிஷ் சர்க்கார் ருமேனியாவுக்குச் சென்றுவிட்டதால், போலந்திலுள்ள ஒயிட் ரஷ்ய மக்களையும் உக்ரேனிய மக்களையும் பாதுகாப்பதற்காகப் போலந்துக்குத் தங்களுடைய படைகள் அனுப்பப்பட்டிருப்பதாக ஸோவியத் சர்க்கார் அறிவித்தது. ஜெர்மனியரால் அடிபட்டு ஏற்கெனவே 'முதுகெலும்பு' முறிந்த போலந்தில் பிரவேசித்து ஆக்ரமிப்புச் செய்ய ரஷ்யாவுக்கு மிகவும் சுலபமாயிற்று. அநேகமாக ரஷ்யர்களுக்கு எதிர்ப்பேயில்லை. போலந்து முழுவதும் ஜெர்மனி கைப்பற்றவிடப்பட்டால், ரஷ்யாவுக்குச் சொந்தமான போலந்துப் பகுதியில் வாழும் மக்களும் ஹிட்லர் ஆட்சிக்கு உட்பட்டுவிடுவார்கள் என்று ஸோவியத் சர்க்கார் அஞ்சியது. ஆகவே ஒயிட் ரஷ்யர்கள் வாழ்ந்து வந்த பிரதேசத்தையும் உக்ரேனியரின் பிரதேசத்தையும் போலந்தில் ரஷ்யர் கைப்பற்றிக் கொண்டனர்.

போலந்திலே ஜெர்மன் ராணுவமும் ஸோவியத் ராணுவமும் ஒன்றோடொன்று போட்டி போட்டுக்கொண்டு அதிக இடத்தைக் கைப்பற்றும் பொருட்டு முன்னேறின. அந்த வேகப் போட்டியில் ரஷ்யரே வெற்றி பெற்றனர். கருங்கடலுக்கும் ரஷ்ய உக்ரேனுக்கும் செல்லும் பாதையையும் மற்றும் பல கேந்திர ஸ்தானங்களையும் ரஷ்யர் கைப்பற்றிக் கொண்டனர். எந்தச் சமயத்திலும் ஹிட்லர் ரஷ்யா மீது பாய்ந்துவிடுவார்; அப்பொழுது அவரை எதிர்ப்பதற்குத் தயாராக இருக்கவேண்டும் என்ற நோக்கத்துடனேயே ரஷ்யர் போலந்தில் கேந்திர ஸ்தானங்களைக் கைப்பற்றினர். ஆகவே, ரஷ்யாவுடன் நேச உடன்

படிக்கை செய்து கொண்டதன் மூலம் ஹிட்லர் தமது ஆணித்தரமான கொள்கைகளைத் தத்தம் செய்துவிட்டார். சாத்விகமான ஜெர்மானியர்கள்கூட ரஷ்யாவின் போக்கைக் கண்டு நொந்துகொண்டனர். ஜெர்மன் ராணுவமே தீவிரமாகத் தாக்கிப் போலந்தை ஜயித்தது. அப்படியிருந்தபோதிலும், எவ்விதமான சிரமமும் எடுத்துக் கொள்ளாத — போலிஷ் போர்க்களத்திலே ஒரு பீரங்கி கூடச் சுடாமலும், ஒரு உயிரைக் கூடத் தியாகம் செய்யாமலும் இருந்த — ஸோவியத் ரஷ்யாவுக்குப் போலந்தின் பாதிப் பாகத்தை ஜெர்மனி தூக்கிக் கொடுக்க வேண்டியதாயிற்று. ஆகவே ஹிட்லர் ஸோவியத் நட்பையும் நல்லெண்ணத்தையும் பெறுவதற்குப் பெரிய தியாகத்தைச் செய்ய வேண்டியதாயிற்று. இந்தத் தியாகம் அவருக்கு மகத்தான நஷ்டமே.

ஜெர்மன் ராணுவமும் ரஷ்ய ராணுவமும் போலந்தின் மத்திய பாகத்தில் சந்தித்தன. விஸ்துலா நதிக்கரையோரமாக ஒரு ராணுவ எல்லைக் கோடு நிர்ணயிக்கப்பட்டது. அந்த எல்லைக் கோடு வார்ஸாவின் சிற்சில பகுதிகளின் வழியாகவும் சென்றது. போலந்தின் உயிர்நாடியான விஸ்துலா நகரமே ரஷ்யாவுக்கும் ஜெர்மனிக்கும் இடையே நிர்ணயிக்கப்பட்டுள்ள எல்லையாகத் தெரிந்தது. இதன் மூலம் ரஷ்யரல்லாத ஏராளமான மக்கள் ஸோவியத் சர்க்காரின் ஆட்சிக்கு உட்பட்டிருப்பார்கள். ஐரோப்பிய நாடுகள் ஸோவியத் சர்க்காரின் 'பூமி - ஆசை'யைக் கண்டு கலவரமடைந்தன. ஆனால் ரஷ்யா, உண்மையான எல்லை நிர்ணயிக்கப்பட்ட சமயத்தில், பழைய எல்லைக் கோட்டிலிருந்து ஓரளவு பின் வாங்கியது. இது காரணமாக ரஷ்யரல்லாதாரில் அநேகர் ஸோவியத் ஆட்சிக்கு உட்படவில்லை.

சமீப காலம்வரை மனித வர்க்கத்தின் பரம விரோதி என்று திட்டிக்கொண்டிருந்த ஹிட்லருடன் — பாஸிஸ்டு நாடுகள் அனைத்தையும் போல்ஷிவிஸத்தை எதிர்த்துப் போராட ஒன்று திரட்டிய ஜெர்மன் சர்வாதிகாரியுடன் — ஸ்டாலின் எவ்வாறு நேச உடன்படிக்கை

செய்து கொள்ளத் துணிந்தார் என்று உலக மக்கள் அனைவரும் ஆச்சரியப்பட்டனர். ஸோவியத் ரஷ்யாவுடன் வார்த்தைப்போர் தொடுக்க ஹிட்லர் தம்முடன் ஜப்பானையும் இத்தாலியையும் சேர்த்துக் கொண்டாரல்லவா? அவர் பொது உடைமை எதிர்ப்புக் கோஷ்டிக்குத் தலைமை வகித்தார். ஸோவியத் நிர்வாகத்தை யூதர்களின் ஆட்சி என்று அவர் கேலி செய்தார். ஜெர்மன் பத்திரிகைகள் மூலமாகவும் பிரசங்க மேடைகள் மூலமாகவும், ஸ்டாலினையும் போல்ஷிவிக்கர்களையும் கடுமையாகத் தாக்கி வந்திருந்தார். "கீழ்த்திசையிலுள்ள நாடுகளுடன் நாங்கள் பரஸ்பர சகாய உடன்படிக்கை செய்துகொள்ள மாட்டோம். எக்காரணம் கொண்டும் ஜெர்மானியர் போல்ஷிவிக்கர்களுக்காகச் சண்டை போடமாட்டார்கள். ரஷ்யாவுடன் உடன்பாடு செய்து கொள்வதைப் பார்க்கிலும் நான் தற்கொலை செய்துகொள்வேன்" என்று ஒரு சமயம் ஹிட்லர் கூறினார். ஆனால் அதே ஹிட்லர், மேற்கத்தி நாடுகள் ஜெர்மனியை வளைத்து வருவதையும், ஸ்டாலினின் சினேகிதத்தைப் பெற அவை தீவிரமாக முயற்சி செய்து வந்ததையும் பார்த்ததும், பழைய விரோதங்களையெல்லாம் மறந்துவிட்டார். உடனே அவர் ஸ்டாலினின் நட்பை அவாவினார். அதன் பயனாகவே ரஷ்ய-ஜெர்மன் உடன்படிக்கை ஏற்பட்டது. இந்த உடன்படிக்கை ஜெர்மனிக்கு மகத்தான வெற்றி என்று ஹிட்லர் பறைசாற்றவும், அவருக்கு ஜெர்மன் பத்திரிகைகள் ஒத்தூதவும் ஆரம்பித்தன. ஆனால் உண்மையில் ரஷ்ய-ஜெர்மன் உடன்படிக்கை ஸ்டாலினுக்கு ஒரு மகத்தான ராஜதந்திர வெற்றியாகும். ஸ்டாலினின் முதல்தரமான ராஜதந்திரத்தைக் கண்டு மேற்கத்தி வல்லரசுகளின் ராஜதந்திரிகள் பிரமிப்பு அடைந்தனர். பால்டிக் நாடுகளில் ஸ்டாலினுக்குச் செல்வாக்கு அதிகரித்தது. இவ்விதமாக ஸ்டாலின் ஒரே மூச்சில் பொதுஉடைமை எதிர்ப்புக் கோட்டையைத் தகர்த்துவிட்டார். ஸோவியத் அந்நிய நாட்டுக் கொள்கையிலே திடீரென்று மாறுதல் ஏற்பட்டும், ஹிட்லர் தமது பழைய விரோதி என்பதை ஸ்டாலின் மறந்துவிடவே யில்லை.

ஐரோப்பாவில் எப்படியாவது யுத்தம் ஏற்பட வேண்டும் என்று ஸ்டாலின் விரும்பினர். முதலாளித்துவ நாடுகள் ஒன்றோடொன்று சண்டைபோட்டு மண்டையை உடைத்துக் கொண்டால் ஸோவியத் ரஷ்யாவின் பலமும் அந்தஸ்தும் அதிகப்படும் என்று ஸ்டாலின் எண்ணி யிருக்கக் கூடும். ஹிட்லரின் ஆக்ரமிப்புச் சக்தியை ஐரோப்பிய யுத்தத்தின் மூலமாக அழிக்க முடியும் என்றும் ஸ்டாலின் எண்ணியிருக்கக் கூடும். இத்தகைய பலவிதமான நோக்கங்களுடனேயே ஸ்டாலின் ஜெர்மனி யுடன் நேச உடன்படிக்கை செய்திருக்கக் கூடும் என்று பலவிதமான அபிப்பிராயங்கள் கூறப்பட்டு வந்தன ஆனல் சமாதானத்திலே எப்பொழுதும் ஆர்வம் காட்டி வந்த ஸ்டாலின் ஐரோப்பாவில் யுத்தம் மூளவேண்டும் என்று விரும்பியிருப்பார் என்று தக்க ஆதாரமில்லாமல் சொல்ல முடியாது. இதை வருங்காலச் சரித்திர ஆசிரியர் களின் முடிவுக்கு விட்டுவிடுவதே நலம்.

IX துரோகமா, தந்திரமா?

போலந்தின்மீது ஜெர்மனி படையெடுத்த சமயத்தில் மற்ருெரு பக்கத்திலிருந்து ஸ்டாலின் தாக்கு வதற்குக் காரணம் என்ன? இது ஆக்ரமிப்பு இல்லையா? இதைத் துரோகச் செயல் என்று ஏன் சொல்லக்கூடாது என்று கேட்கலாம். ஒரு நாட்டை மற்ருெரு நாடு காரண மின்றித் தாக்குவது ஆக்ரமிப்பே. ஆனல் போலந்தை ஆக்ரமிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் ஸ்டாலின் தாக்கவில்லை. ஸோவியத் ரஷ்யாவின் தற்காப்பைக் கருதியே அந்தத் தாக்குதல் நடந்தது. மேலும் போலந்து சர்க்கார் ருமேனியாவுக்கு ஓடும் வரையில் — ஜெர்மன் துருப்புகள் போலந்தின் வழியாக ஸோவியத் ரஷ்யாவின் எல்லையை நோக்கி முன்னேற ஆரம்பிக்கும் வரையில், செஞ்சேனை தாக்கவில்லை. அந்த முக்கியமான கட்டத்திலே செஞ்சேனை போலந்தில் பிரவேசித்திருக்கா விட்டால், ஹிட்லர் 100 மைலுக்குப் பக்கத்திலிருந்தே,

அதாவது, ரஷ்யாவின் எல்லையிலிருந்தே ரஷ்யாமீது படையெடுக்க வசதி ஏற்பட்டிருக்கும். போலந்துக்குள் செஞ்சேனை பிரவேசத்ததிலிருந்து, பின்னால் ஏற்படக் கூடிய ஜெர்மன் படையெடுப்பை எதிர்ப்பதற்கு ஸ்டாலின் தயாராகி வந்தார் என்பது நன்கு புலனாயிற்று. பால்டிக் நாடுகளையும் பெஸரேபியாவையும் ஸோவியத் ரஷ்யா ஆக்ரமித்ததற்கு இதுவே காரணம்.

அடுத்தபடியாக லிதுவேனியா, எஸ்தோனியா, லாட்வியா முதலிய சிறிய பால்டிக் நாடுகள்மீது ஸோவியத் ரஷ்யா கவனம் செலுத்த ஆரம்பித்தது. வெர்ஸேல்ஸ் உடன்படிக்கை மூலமாகச் சிருஷ்டிக்கப்பட்ட இந்த மூன்று குட்டி நாடுகளும் ரஷ்யாவைக் கடற்கரையிலிருந்து உட்பக்கத்திற்கு விரட்டின. கடற்படையுள்ள வல்லரசு என்ற முறையில் ரஷ்யாவுக்கு பால்டிக் கடற்கரையில் கேந்திர ஸ்தானங்கள் அவசியமல்லவா? ஆனால் பால்டிக் கடற்கரையை ரஷ்யா அணுகவொட்டாமல் பால்டிக் நாடுகள் மூலம் சற்றுத் தூரத்திலேயே நிறுத்திவைக்கப் பட்டது. ஆகவே, அந்தக் கடற்கரையை அடைவதற்கு ஸோவியத் ரஷ்யாவுக்குச் சிறந்த சந்தர்ப்பம் வாய்த்தது. மேலும் பால்டிக் நாடுகளை ஜெர்மனி கைப்பற்றிக் கொண்டு அவற்றைப் படைத் தளங்களாக உபயோகித்து ஸோவியத் ரஷ்யாவைத் தாக்கக்கூடும் என்ற பயம் ஸ்டாலினுக்கு இருந்தது. வெர்ஸேல்ஸ் ஒப்பந்தத்தின் மூலம் பால்டிக் குட்டி நாடுகளைச் சிருஷ்டித்த இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் மூச்சுவிடக்கூட நேரம் கிடையாது. பால்டிக் நாடுகளை ரஷ்யா என்ன செய்தாலும் பிரிட்டனும் பிரான்ஸும் தலையிடக் கூடிய நிலைமையில் இல்லை. பால்டிக் பிரதேசத்தில் மீண்டும் ஸோவியத் ஆதிக்கம் ஏற்படுவதை எப்பொழுதும் எதிர்த்து வந்திருக்கும் ஜெர்மனியோ இப்பொழுது செயலற்றுப் போய் விட்டது. ரஷ்யாவுடன் செய்துகொண்ட நேச உடன்படிக்கை ஜெர்மனியின் கைகளைக் கட்டிவிட்டது. "பால்டிக் பசங்களா! யுத்தம் உங்களிடம் வராமல் உங்களைப் பாதுகாக்க ஆசைப்படுகிறேன். நான் சொல்

வதைக் கேளுங்கள். உங்களுடைய கடற்படை அரண்களை என்னுடைய உபயோகத்துக்கு விட்டுவிடுங்கள். அந்த அரண்களோ பழைய ரஷ்ய ஆதிபத்தியத்தில் இருந்தவை தான்'' என்று உபதேசம் செய்தும், பயமுறுத்தியும் ஸோவியத் ரஷ்யா பால்டிக் நாடுகளுடன் உடன்படிக்கை செய்துகொண்டது. இந்த உடன்படிக்கையின் மூலம் ரஷ்யாவுக்குத் தான் கேட்ட சலுகைகள் கிடைத்து விட்டன. பால்டிக் நாடுகளின் உள்நாட்டு விஷயங்களில் தலையிடுவதில்லை என்றும் ஸோவியத் ரஷ்யா வாக்குறுதி யளித்திருந்தது. ஆனால் பிரான்ஸ் வீழ்ச்சியடைந்த பின்னர் இந்த வாக்குறுதியைக் 'குப்பைத் தொட்டி'யில் வீசி விட்டு பால்டிக் நாடுகளை ரஷ்யா ஆக்ரமித்துக்கொண்டது. இந்தச் சிறிய நாடுகள் ஆக்ரமிக்கப்பட்டதுடன் அல்லாமல் இவை ஸோவியத் மயமாக்கப்பட்டன. இவ்விதமாகத் துப்பாக்கி எடுக்காமலே ஸோவியத் ரஷ்யா பேனா முனையிலே தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டது.

பால்டிக் நாடுகளை ஸோவியத் ரஷ்யா ஆக்ரமித்தது ஜெர்மனியின் மண்டையில் விழுந்த பலத்த அடி. பால்டிக் நாடுகளிலே பல நூற்றுண்டுகளுக்கு முன்னர் குடியேறிய ஜெர்மன் குடும்பங்களையும் ஹிட்லர் ஜெர்மனிக்குத் திரும்ப அழைத்துக்கொள்ள ஒப்புக்கொண்டார். பாவம்! இந்த ஜெர்மன் மக்கள் தங்களுடைய சாமான்களை அவசர அவசரமாக மூட்டைக் கட்டிக்கொண்டு பால்டிக் பிர தேசத்தைவிட்டு வெளியேறி, கிழக்குப் பிரஷ்யாவுக்கும் ஜெர்மனியின் மற்றைப் பாகத்திற்கு மிடையேயுள்ள போலிஷ் பிரதேசத்திலே குடியேறலாயினர். இந்த ஏற் பாட்டினுல் பால்டிக் பிரதேசத்தில் வாழ்ந்துவந்த ஜெர்மன் மக்கள் சொல்லவொண்ணுத கஷ்ட நஷ்டங்களுக்குள் ளாயினர். இதெல்லாம் ரஷ்யாவுடன் ஹிட்லர் நேச உடன்படிக்கை செய்துகொண்டதால் 'கைமேல்' பலன்!

ஸோவியத் ரஷ்யா இப்பொழுது தனது வலது பக்கத்தில் உள்ள பின்லந்துமீது கவனம் செலுத்த ஆரம் பித்தது. பின்லந்திடமும் கடற்படை அரண்கள் கேட்டது

ஸோவியத் ரஷ்யா. சமரஸப் பேச்சுகள் ஆரம்பமாயின. பேச்சுகள் நடக்க நடக்க, கோரிக்கைகளும் மேன்மேலும் அதிகரித்து வந்தன. இறுதியில் ஸோவியத் ரஷ்யா 1939-ம் வருஷம் நவம்பர் மாதம் 30-ந் தேதியன்று பின்லந்துமீது படை யெடுத்தது. சட்ட பூர்வமான பின்னிஷ் சர்க்காரை அதிகாரத்திலிருந்து நீக்கிவிட்ட தாக ஸோவியத் சர்க்கார் அறிவித்தது; ஒரு பிஞமி மந்திரி சபையை பின்லந்தில் அமைத்துவிட்டது. அந்தச் சர்க்காருடன் ஸோவியத் சர்க்கார் உடன்படிக்கை செய்துகொண்டது. அந்த உடன்படிக்கைமூலம் ரஷ்யா கேட்ட கடற்படைத் தளங்கள் ரஷ்யாவுக்குக் கொடுக்கப் படவேண்டும். பாக்கியுள்ள பின்லந்தின் சுதந்திரப் பாது காப்புக்கு ஸோவியத் சர்க்கார் உத்தரவாதம் அளிக்கும். ஆனல் உண்மையான பின்லந்து சர்க்கார் ஸோவியத் சர்க்காரையாவது அவர்களால் நியமிக்கப்பட்ட பிஞமி மந்திரி சபையையாவது சிறிதும் லட்சியம் செய்யவில்லை. பின்லந்துக்காரர்கள் மிகவும் ஆவேசத்துடன் ரஷ்யரை எதிர்த்துப் போராடினர். அகில உலகமும் அவர்களுடைய வீரத்தைப் பாராட்டியது. பின்னிஷ்காரர்கள் சர்வதேச சங்கத்திடம் முறையிட்டுப் பார்த்தார்கள். ஆனல் ஒரு வரும் ஒத்தாசைக்கு வரவில்லை. ஜெர்மனியால் உதவி செய்திருக்கலாம். ஆனல் அதுவும் செய்யவில்லை; செய் யவும் முடியாது. ஏனெனில் ரஷ்யாவுடன் செய்து கொண்ட நேச உடன்படிக்கை ஜெர்மனியின் 'பல்லைப்' பிடுங்கிவிட்டது. இறுதியில் ரஷ்யப் படைகள் அலை அலையாகச் சென்று தாக்கவே, இவ்வளவு அமோகமான ஆள் - பலத்தை எதிர்த்துத் தாக்க முடியாமல் பின்னிஷ் காரர்கள் சோர்வு அடைந்தார்கள். பிறகு அவர்கள் குறைந்த பட்ச நஷ்டத்துடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டனர் ரஷ்யாவுடன். மீண்டும் பிஞமி மந்திரி சபையை ஸோவியத் சர்க்கார் தங்களுடைய 'பைக்குள்' போட்டுக்கொண்டனர்.

பின்லந்தின் சரித்திரத்தைச் சுருக்கமாகப் பரிசிலனை செய்தால் அந்த நாட்டின்மீது ஸோவியத் ரஷ்யா படை

யெடுக்க உண்மையில் அவசியம் ஏற்பட்டதா என்பதைத் தெரிந்துகொள்ளலாம். சென்ற மகாயுத்தத்தின் பயனாக பின்னிஷ் குடியரசு ஏற்பட்டது. ரஷ்யாவின் ஜார் மன்னர் முறியடிக்கப்பட்டு, அங்கு ஸோவியத் அரசாங்கம் ஏற்பட்டதும், பின்லந்து சுதந்தர நாடாக இருக்க அனுமதிக்கப்பட்டது. அந்தக் காலத்திலிருந்து பின்லந்து சிறிய குடியரசாகவே யிருந்து வந்திருக்கிறது. முதலில் பின்லந்து ஸ்வீடனின் ஆதிக்கத்திற்கு 600 வருஷ காலம் உட்பட்டிருந்தது. பின்னர் ஜார் சக்கரவர்த்தி தனது ஆட்சியை பின்லந்தில் ஸ்தாபித்துக்கொண்டார். 1917-ம் வருஷத்தில் ரஷ்யாவிலே புரட்சி நடந்துகொண்டிருந்தபோது பின்லந்து தன்னை ஒரு சுதந்திரக் குடியரசாகப் பிரகடனம் செய்தது. அப்பிரகடனத்தை நேச நாடுகளும் ரஷ்யாவும் ஒப்புக்கொண்டன. ஸோவியத் ஆட்சி ஏற்பட்டதிலிருந்து சிறிய நாடுகளின் சுதந்திரத்தை மதிக்கவேண்டுமென்பது லெனின் பின்பற்றிவந்த நிரந்தரமான கொள்கையாகும். அக் கொள்கையை ஸ்டாலினும் அப்படியே பின்பற்றிவந்தார். திடீரென்று பின்லந்து விஷயத்தில் ரஷ்யாவின் கொள்கை மாறுவதற்குக் காரணம் என்ன? ஸ்டாலினுக்கு ஆக்ரமிப்பு - புத்தி ஏற்பட்டுவிட்டதா? ஹிட்லரின் தலைமையில் ஜெர்மனி பின்பற்றிவந்த ஆக்ரமிப்புக் கொள்கையையே ஸோவியத் ரஷ்யா பின்லந்தைத் தாக்கியதற்குக் காரணமாகும். தற்பாதுகாப்பின் பொருட்டே பின்லந்துமீது ரஷ்யா படையெடுத்ததாக ஸ்டாலின் கூறினார். ஹிட்லர் மேலும் கிழக்கே முன்னேறுமல் இருக்கும்பொருட்டே ஸ்டாலின் இந்த நடவடிக்கையை எடுத்துக்கொண்டார். பின்னிஷ் துருப்புகள் லெனின்கிராடுக்கும் மர்மான்ஸ்க் ரயில் வேக்கும் சமீபத்திலிருந்ததால் அவற்றைப் பின்னுக்குக் கொண்டுபோகுமாறு ஸ்டாலின் கேட்டார். பின்னிஷ் சர்க்கார் ஜெர்மனியைக் கலந்து யோசித்துத்தான் ரஷ்யாவுக்கு வெகு சமீபத்திலே மானர்ஹீம் அரண்களைப் பலப்படுத்தித் துருப்புகளையும் வைத்திருந்தனர். அந்த அரண்களை நிர்மாணித்த ராணுவ நிபுணரும் தளபதியுமான மானர்ஹீமோ பாஸிஸ்டுகளின் சிறந்த நண்பர்

அவர் எப்பொழுதுமே ஜெர்மன் பிற்போக்காளருடன் ஒத்துழைத்து வந்திருக்கிருர். ஜெர்மானியர் ரஷ்யாமீது படையெடுக்கத் தீர்மானிக்கும்போது அவர்கள் பின்னிஷ் காரர்களைக் கலந்துகொண்டு மானர்ஹீம் அரண்களிலிருந்து தாக்கி உடனடியாக லெனின்கிராடை ஆக்ரமித்து மாஸ்கோவை வளைக்க முற்படுவார்கள் என்று ஸ்டாலினுக்கு நன்கு புலப்பட்டது. பின்னிஷ் தளங்களுக்குப் பதிலாக ரஷ்யப் பிரதேசத்திலிருந்து வேறு இடங்களை ஈடாகக் கொடுக்கவும் ஸ்டாலின் தயாராக இருந்தார். ஆனல் பின்னிஷ் சர்க்கார் தங்கள் நாட்டின் சுதந்திரத்திற்கே ஆபத்து வந்துவிட்டதாகக் கூக்குரலிட்டுக்கொண்டு ஸ்டாலினின் வேண்டுகோளை நிராகரித்தது. ஆகவே ஸ்டாலின் தனது நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள பலாத்காரத்தை உபயோகிக்க வேண்டியதாயிற்று. பின்லந்துமீது ஸ்டாலின் ஆரம்பித்த போர் பின்னல் ஏற்படக்கூடிய ரஷ்ய—ஜெர்மன் போருக்குப் பீடிகையாகவே இருந்தது. ஸ்டாலின் பின்லந்துமீது அப்பொழுது படையெடுத்து அதை ஆக்ரமித்திருக்காவிட்டால், ரஷ்யரால் லெனின்கிராடை ஜெர்மன் முற்றுகையிலிருந்து காப்பாற்றியிருக்க முடியாது. இது இப்பொழுது சரித்திர பூர்வமான உண்மையாகிவிட்டது.

X ஐரோப்பா அடிபணிந்தது

யுத்தத்தில் பிரவேசித்ததிலிருந்து ஜெர்மனிக்கு வெற்றிக்குமேல் வெற்றி கிடைத்துக்கொண்டிருந்தது. ஜெர்மன் துருப்புகள் கால்வைத்த இடமெல்லாம் புயல் வேகத்தில் முன்னேறிக் கொண்டிருந்தன. 1940-ம் வருஷம் முதல் 6 மாதங்களுக்குள் ஐரோப்பாவின் எல்லைப் படத்தில் விசேஷ மாறுதல்களை உண்டு பண்ணிவிட்டார் ஹிட்லர். ஒரே தினத்தில் டென்மார்க் கைப்பற்றப் பட்டது. நார்வே மீதும் நாஜிகள் படையெடுத்தனர். காலதாமதம் செய்து நார்வேயில் இறங்கி, ஜெர்மானியரை

எதிர்க்க முற்பட்ட நேசப்படைகள் விரட்டி யடிக்கப் பட்டன. ஹாலந்தும் ஆக்ரமிக்கப் பட்டது. இன்னும் சில தினங்களில் பெல்ஜியத்தில் ஜெர்மன் துருப்புகள் பிர வேசித்தன. ஜெர்மன் யந்திரப் படைகள் வட பாகத்தில் இருந்த நேசப்படைகளை வளைந்து கொண்டன. நேசப் படைகள் ஜெர்மானியரை எதிர்த்துப் போராட முடியா மல் கடல் மார்க்கமாகத் தப்ப நேர்ந்தது. அடுத்தபடியாக நாஜிகள் பிரான்ஸ் மீது படையெடுத்துத் துரிதமாக முன்னேறினர். பிரெஞ்சுக்காரர்களும் ஜெர்மானியரை எதிர்த்துப் போராட முடியாமல் சரணுகதி யடைந்தனர். பிரான்ஸ் வீழ்ச்சியடைவதற்குச் சற்று முன்பு 'இத்தாலிக் குள்ளநரியும்' கூட்டுக்கொள்ளையில் பங்கு பெறும் பொருட்டு பிரான்ஸைத் தாக்கியது. இறுதியில் ஜெர்மனி யின் பிரதான எதிரியான இங்கிலாந்து ஒன்றுதான் எஞ்சி நின்றது. அதைத் தாக்குவதற்கு ஜெர்மானியர் தங்க ளிடம் சரணுகதியடைந்த பிரான்ஸைப் பிரம்மாண்டமான படைத்தளமாக உபயோகிக்கலாயினர். ஹிட்லர் ஏராள மான தரைப் படைகளையும் விமானப் படைகளையும் இங்கி லாந்தைத் தாக்குவதற்குத் தயாராக பிரெஞ்சுக்கரையில் திரட்டி வைத்திருந்தார்.

இங்கிலாந்து மக்களை விமானப் படையெடுப்பின் மூலம் பணியவைக்கும் பொருட்டு ஹிட்லர் தமது வெடி விமானங்களையும் சண்டை விமானங்களையும் அலை அலை யாக அவர்கள்மீது ஏவிவிட்டார். நிஜமான படையெடுப் பிற்கு இந்த விமானத் தாக்குதல் பீடிகையே. குண்டு-மழைக்கு இங்கிலாந்து மக்கள் சிறிதும் அஞ்சவில்லை. அவர்களுடைய தைரியமும் உறுதியும் பன்மடங்கு அதிகரித்தன. அவர்கள் பெருவாரியான உயிர்ச்சேதத் தையும் பொருட்சேதத்தையும் கண்டு சிறிதும் கலங்க வில்லை. இறுதியில் ஹிட்லர் தமது விமானப் படை யெடுப்பில் தோல்வி யடைந்தார்.

பிரிட்டன்மீது படையெடுக்க உறுதிகொண்டிருந்த ஹிட்லர் தயங்க ஆரம்பித்தார். படையெடுப்பிலே வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கையை அவர் இழந்து

விட்டார். அபாயகரமான சூதாட்டத்தில் இறங்க விரும்பவில்லை அவர். மற்றொரு பயமும் உண்டு ஹிட்லருக்கு. பிரிட்டனுடன் இறுதியாகப் போராடிக் கொண்டிருக்கும்போது, பின்னாலிருந்து ரஷ்யா தாக்காம லிருக்கவேண்டும். ரஷ்யாமீதோ ஹிட்லருக்குச் சிறிதும் நம்பிக்கை கிடையாது. ஆகவே அவர் தமது போர்த் திட்டத்தையே தலை கீழாக மாற்றிவிட்டு, ரஷ்யாவை முதலில் ஆக்ரமிக்கப் பலமான முஸ்தீபுகளைச் செய்ய லானார்.

எக்காரணமும் இன்றி முசோலினி 1940-ம் வருஷம் அக்டோபர் மாதம் 9-ந் தேதியன்று கிரீஸ்மீது படை யெடுத்தார். கிரேக்கர்கள் முசோலினியின் ஆக்ரமிப்பை மிகவும் வீராவேசமாக எதிர்த்துப் போராடினார்கள். முசோலினியின் நடவடிக்கை ரஷ்யருக்கு மனக் கசப்பை உண்டுபண்ணியது. இவ்விதமாக ரஷ்யருக்குச் சிரத்தை யுள்ள பால்கன் நாடுகளிலும் யுத்தம் பரவ ஆரம்பித்தது. அவசரப்பட்டு கிரீஸை முசோலினி தாக்கியது ஹிட்ல ருக்குக்கூடப் பிடிக்கவில்லை. ஆனால் முசோலினியைப் பங்காளியாகச் சேர்த்துக்கொண்ட பின்னர், அவரை ஹிட்லரால் எவ்வாறு கைவிட முடியும்? ஹிட்லர் உதவிக்குப் படைகளை அனுப்பியதால்தான், முசோலினி யால் கிரீஸை ஜயிக்க முடிந்தது. இங்கிலாந்துமீது படையெடுக்க முடியாத ஹிட்லர், அன்று நெப்போலியன் செய்ததைப் போலவே வேறு திசையில் கவனம் செலுத்த ஆரம்பித்துவிட்டார்.

கிரீஸுக்கு உடனடியாக ஹிட்லரால் படைகளை அனுப்ப முடியவில்லை. ஏனெனில் கிரீஸுக்குச் செல்லும் பாதையிலே உள்ள ஹங்கேரி, ருமேனியா, பல்கேரியா, யூகோஸ்லேவியா முதலிய நாடுகளை ஹிட்லர் பிடித்தாக வேண்டும். முதலில் ஹிட்லர், ஹங்கேரி ருமேனியாமீது கவனம் செலுத்தலானார். ஹங்கேரி சென்ற மகா யுத்தத்தில்கூட ஜெர்மனியுடன் தீவிரமாக ஒத்துழைத்து வந்திருக்கிறது. ஆகவே ஹங்கேரியைப் பற்றி ஹிட்லர் கவலைப்படவில்லை. ஹங்கேரியிடமிருந்து டிரான்ஸில்

வேனியா மாகாணத்தைப் பிடுங்கி ருமேனியாவிடம் கொடுத்தார் ஹிட்லர். ருமேனியா திருப்தியடைந்து விட்டது. ஆனல் ஹங்கேரிக்கு மனக்கொதிப்பு ஏற் பட்டது.

ஹங்கேரிக்கும் ருமேனியாவுக்கு மிடையே மனஸ் தாபம் வளர்ந்தது. ஹிட்லரின் 'இளைய பங்காளி'யாகிய முசோலினி மத்தியஸ்தம் செய்து, டிரான்ஸில்வேனி யாவின் பெரும் பகுதி ஹங்கேரிக்குத் திரும்பக் கிடைக்கும் படி செய்தார். ஹங்கேரியின் எல்லை இப்பொழுது கருங் கடல்வரை நீண்டுவிட்டது. கருங்கடலை நோக்கி முன் னேறுவதற்கு ஹங்கேரி ஜெர்மானியருக்கு 'ராஜ பாதை' யாகிவிட்டது. ரஷ்யா ஹங்கேரியை எச்சரிக்கை செய்ததே தவிர, வேறு எவ்விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை. ருமேனியாவும் கரோல் மன்னரைத் தேசப் பிரஷ்டம் செய்துவிட்டு ஹிட்லரின் காலில் விழுந்துவிட்டது. ருமேனியா ஹிட்லரிடமிருந்து தனக்குப் பாதுகாப்பு ஒன்றையே எதிர்பார்த்தது. ஏனெனில் ருமேனியாவுக்கு ரஷ்யாவைப் பற்றி மிகவும் பயமிருந்தது. 1941-ம் வருஷம் பிப்ரவரி மாதத்தில் கருங் கடற் கரையோரமாக ஜெர்மானியர் ராக்ஷஸ பீரங்கிகளை நட்டனர். தளங்களையும் அமைத்துக் கொண்டனர். இவ்விதமாக ஜெர்மனியின் திருஷ்டி உக்ரேன்மீது நேரடியாக விழுந்தது.

அடுத்தபடியாக ஹிட்லர் பல்கேரியா, யூகோஸ்லே வியாமீது கவனம் செலுத்த ஆரம்பித்தார். இந்த நாடு களும் கிரீஸுக்குச் செல்லும் பாதையில் இருப்பதால், இவற்றையும் ஹிட்லர் ஆக்ரமித்தாக வேண்டும். இந்த இரு நாடுகளிலும் சோவியத் ரஷ்யாவுக்குச் செல்வாக்கு அதிகம். ஆனல் இவற்றுக்கிடையே மனஸ்தாபமும் பொருமையும் அதிகமாக இருந்ததால், இவற்றை ஹிட்லரால் சுலபமாக ஆக்ரமிக்க முடிந்தது.

சோவியத் ரஷ்யாமீது படை யெடுப்பதற்குப் பீடிகையாக ஹிட்லர் எல்லா ஏற்பாடுகளையும் செய்து

விட்டார். பால்கன் நாடுகள் அவருக்கு அடிமைப்பட்டு விட்டன. ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்கும் மத்தியில் உள்ள ஏஜியன் தீவுகளும் அவர் வசமாகிவிட்டன. தெற்கே துருக்கியுடன் உடன்படிக்கை செய்துகொண்டு, அதன் நடு நிலைமையை ஊர்ஜிதம் செய்துகொண்டார் ஹிட்லர். வடக்கே பின்லந்தும் ஜெர்மனிக்குக் கீழ்ப் படியத் தயாராயிருந்தது. இவ்விதமாக ஹிட்லர் சோவியத் ரஷ்யாவை எல்லாப் பக்கங்களிலும் வளைத்து விட்டார். சோவியத் ரஷ்யாவைத் தாக்குவதற்கு வேறு நல்ல சந்தர்ப்பம் வாய்ப்பது அரிதல்லவா?

XI ஜெர்மன் படையெடுப்பு

1941-ம் வருஷம் ஜூன் மாதம் 22-ந் தேதி ஹிட்லர், ரஷ்யா-ஜெர்மன் நேச உடன்படிக்கையைக் கிழித்து எறிந்துவிட்டு சோவியத் ரஷ்யாமீது படை யெடுத்தார். ரஷ்யா-ஜெர்மன் உடன்படிக்கை ஏற்பட்டபோது பிரமிப் படைந்த உலக மக்கள், இப்பொழுதோ உடன்படிக்கையை மீறி ஹிட்லர் ரஷ்யாமீது படையெடுத்ததைக் கேள்விப் பட்டு அதிர்ச்சி யடைந்தனர். ஆனால் ஸ்டாலினோ ஹிட்லரின் படை யெடுப்பை எதிர் பார்க்காமல் இல்லை. ஆக்ரமிப்பை எதிர்ப்பதற்கு அவர் ஏற்கெனவே பலமான முஸ்தீபுகளைச் செய்திருந்தார். ஏராளமான படை களையும் திரட்டி வைத்திருந்தார். ஆகவே பிரம்மாண்ட மான ரஷ்ய-ஜெர்மன் யுத்தம் ஆரம்பமாயிற்று. பிரிட் டனும் அமெரிக்காவும் ரஷ்யாவுக்குச் சகல உதவிகளும் செய்வதாக வாக்குறுதியளித்து, அதன் நேச நாடுக ளாயின.

"பத்து வாரங்களில் சோவியத் ரஷ்யாவை ஆக்ர மித்துவிடுவோம். எங்களுடைய கொடி மாஸ்கோமீது உல் லாசமாகப் பறக்கும்!" என்று ஹிட்லர் உலகத்தாருக்குத் தோள்கொட்டி அறிவித்தார். அதே சமயத்தில் அவ ருடைய துருப்புகள் சோவியத் ரஷ்யாவில் துரிதமாக முன்

னேறின. அவருடைய விமானங்கள் சோவியத் நகரங் களையும் படைத் தளங்களையும் தகர்த்தன. ஆரம்பத்தில் ரஷ்யர்களின் எதிர்ப்பு குறிப்பிடத்தக்கதாக இல்லை. எல்லா அரங்கங்களிலும் ரஷ்யர் ஒழுங்காக விட்டுக் கொடுத்துக் கொண்டே சென்றனர். ஆனால் பிரெஞ்சுக் காரர்கள் செய்த தவற்றை ரஷ்யர்கள் செய்யவில்லை. பிரான்ஸில் ஹிட்லரின் வெற்றியைத் துரிதப் படுத்திய லவால், பெட்டெயின் முதலிய ஐந்தாம்படைக் கோஷ்டி யினர் ரஷ்யாவிலே இல்லை. ஜெர்மானியர் முன்னேறிக் கொண்டுதான் இருந்தார்கள். ஆனால் ஒவ்வொரு மைல் தூரம் முன்னேறுவதற்கும் ஆயிரக்கணக்கான உயிர்களை அவர்கள் பலிகொடுக்கவேண்டி யிருந்தது. பிடித்த இடங்களிலோ பொது ஜனங்கள் அவர்களை அறவே பகிஷ் காரம் செய்தனர். உதாரணமாக, உக்ரைன் ஜெர்மானியர் கையில் சிக்கியதும், அங்கு விளைந்திருந்த தானியங்களை அறுவடை செய்ய லட்சக் கணக்கான தொழிலாளர்களை ஹிட்லர் ஜெர்மனியிலிருந்து அனுப்பவேண்டிய நிலைமை ஏற்பட்டதென்றால், ரஷ்ய மக்களின் தேசபக்தியை என் னென்பது? "நீங்களோ தனி ஜாதியினர், உங்களுடைய கலாசாரமும் பாஷையும் வேறு. உங்களை ரஷ்யரின் கொடுங்கோன்மையிலிருந்து விடுவிக்கவே நாங்கள் வந் திருக்கிறோம்" என்று நாஜிகள் செய்த பிரசாரத்தை உக்ரேனியர் காதில் போட்டுக் கொள்ளவில்லை. உக் ரேனியர்கள் மாத்திரமா? ரஷ்யாவின் ஒவ்வொரு சிறு பான்மையோரும் அவ்வாறே செய்தனர். ஜார் ஆட்சியைப் போன்ற கொடுங்கோன்மை ரஷ்யாவில் இருந்திருந்தால்— சில பணக்காரர்கள் பெரும்பான்மையோரான ஏழைகளைச் சுரண்டிக் கொண்டிருந்தால்—பலர் உழைப்பில் சிலர் சுக ஜீவனம் செய்துகொண்டிருந்தால்—ஜெர்மனியின் பிரம் மாண்டமான படை யெடுப்பை எதிர்க்க ரஷ்யர்கள் இவ் வளவு வீரமாகவும் ஊக்கமாகவும் முன் வந்திருக்கமாட் டார்கள். எத்தனையோ லவால்களும் பெட்டயின்களும் ரஷ்யாவிலும் தோன்றி, தேசத்தை ஹிட்லர் கையில் அர்ப்பணம் செய்திருப்பார்கள். ஆனால் லெனின் கண்ட அன்புமதம்—— ஜார் - கொடுமையினின்றும், பணக்காரர்

களின் ஆதிக்கத்தினின்றும் ரஷ்யப் பாட்டாளி மக்களை விடுவித்த சோஷலிஸம்—ரஷ்யரின் உடலிலும் உள்ளத்திலும் ஊறிப்போயிருந்தது. தங்களுடைய தேசம், தங்களுடைய வீடு, எல்லாம் தங்களுடையதே என்ற உணர்ச்சி, தேசத்தைப் பாதுகாப்பதற்கு எத்தகைய தியாகங்களையும் செய்யும்படி ரஷ்ய மக்களைத் தூண்டியது. முதியோர் இளைஞர்கள், குழந்தைகள் பெண்கள் என்ற வித்தியாசமின்றி, தேசமக்கள் அனைவருமே ஒரு பிரம்மாண்டமான படையாகத் திரண்டு தேசபக்தி என்னும் கனல் தங்கள் ஹிருதயத்தில் சுடர் விட்டெரிய, சத்துருவை எதிர்க்க ஆரம்பித்தனர், ஆவேசத்துடன். அவர்கள் செய்த தியாகங்கள் உலகத்தையே பிரமிக்கச் செய்தன. எனினும் ரஷ்யாமீது படையெடுக்கும் நோக்கத்துடன் நீண்ட காலமாக முஸ்தீபு செய்து, சகல ஆயுதங்களுடனும் இதர சாதனங்களுடனும் ஜெர்மானியர் பிரவேசித்ததால், ஆரம்பத்தில் அவர்களுக்கு வெற்றி கிடைத்து வந்ததில் ஆச்சரியம் இல்லை.

ஜெர்மானியர் ரஷ்யாவின் பல முனைகளில் நூற்றுக்கணக்கான மைல் முன்னேறி, பல கேந்திர ஸ்தானங்களைக் கைப்பற்றினர். அவர்களுக்கு வெற்றிக்குமேல் வெற்றி கிடைத்துக்கொண்டிருந்தது. ஜெர்மானியர் உக்ரேனை ஆக்ரமித்து விட்டனர். லெனின்கிராடின் சுற்றுப்புறங்களிலே அவர்களுடைய பீரங்கிகள் முழங்க ஆரம்பித்தன. க்ரிமியாவும் காகஸஸின் வாயிலாகிய ரோஸ்டாவும் அவர்கள் வசமாயின. மாஸ்கோவும் ஜெர்மன் முன்னணித் துருப்புகளுக்கு வெகு தூரத்தில் இல்லை. ரஷ்யரோ தங்களுடைய ஆரம்பத் தோல்விகளைக் கண்டு சிறிதும் கலங்கவில்லை, தங்களுடைய தலைவர்களிடம் நம்பிக்கை இழக்கவுமில்லை. தோல்விகளெல்லாம் அவர்களுடைய வீராவேசத்தையும் தியாகங்களையும் இன்னும் பன்மடங்கு பெருகும்படி செய்தன. தாற்காலிகமாகத் தோல்விகள் ஏற்படினும், சத்துருகளைத் துப்போன சமயத்தில் விரட்டி யடித்துவிடலாம் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை ரஷ்யருக்கு இருந்தது. ரஷ்யர்கள்

தினந்தோறும் நகரங்களையும் கிராமங்களையும் பறி கொடுத்துக்கொண்டும், பின்வாங்கிக்கொண்டும் வந்ததைக் கண்டு உலகின் பாட்டாளிமக்கள் மிகவும் துயரமடைந்தார்கள். உலகிலுள்ள ஒரே சோஷியலிஸ்ட் நாட்டுக்குப் பிராணுபத்து ஏற்பட்டு வந்ததை உலக மக்களால் சகிக்க முடியவில்லை. "இந்த ஆபத்திலிருந்து ரஷ்யா சீக்கிரத்தில் விடுபடவேண்டும். நாஜிகள் ரஷ்ய மண்ணிலே அழிந்துபோகவேண்டும்!" என்று உலக மக்கள் பிரார்த்தனை செய்தனர்.

XII லெனின்கிராட்

ஜெர்மானியருடன் ரஷ்யர் நடத்திவரும் ராக்ஷஸப் போரிலே சில ரஷ்ய நகரங்கள் சரித்திரமே கண்டிராத வீரச் செயல்களையும் தியாகங்களையும் புரிந்து அழியாப் புகழ் பெற்றுவிட்டன. ஆயிரக்கணக்கான மைல் தூரத்திற்கு விரிந்து கிடந்த போர் முனையிலே, ஆங்காங்கு நடந்துவந்த சண்டைகளின் போக்கையே மாற்றிவிட்டன இந்த வீர நகரங்கள். இந்த நகரங்களில் முதல் மூன்று ஸ்தானங்களை லெனின்கிராட், ஸ்டாலின் கிராட், செபஸ்டபோல் ஆகியவை வகிக்கின்றன.

ஜெர்மானியர், சோவியத் ரஷ்யாமீது படையெடுத்த மூன்ருவது மாதத்தில், அதாவது 1941-ம் வருஷம் செப்டம்பர் மாதத்தில், லெனின்கிராட் நகரை முற்றுகையிட்டனர். லாடோகா ஏரிக் கரையில் உள்ள ஷ்லஸல் பர்க் நகரை ஜெர்மானியர் கைப்பற்றிக்கொண்டு லெனின் கிராட் நகரைப் பூரணமாக வளைத்துகொண்டனர். அவர்கள் முற்றுகையை மிகவும் தீவிரமாக நடத்தினர். நாஜி விமானங்கள் அழகான அரண்மனைகள், தியேட்டர்கள், பொருட் காட்சிச் சாலைகள், புஸ்தக சாலைகள், ஆஸ்பத்திரிகள், தொழிற்சாலைகள் முதலியவற்றின்மீது குண்டுமாரி பொழிந்தன; அவற்றைத் தரை மட்டமாக்கின.

பொது ஜனங்கள்மீதும், அபலைகளான பெண்கள் மீதும், பால்மணம் மாருத குழந்தைகள் மீதும் குண்டுகளை வீசினர். பொது ஜனங்களை அழிக்கும் பொருட்டு நாஜிகள் தினசரி இடைவிடாமல் லெனின்கிராட் மீது பீரங்கிப் பிரயோகமும் செய்து கொண்டிருந்தனர். இரத்தப் பிரவாகம் ஓடும் இடைவிடாத சண்டை, இரவு பகலாகக் குண்டு வீச்சு, தூக்கமின்மை முதலியவை லெனின்கிராட் மக்களுக்குச் சர்வ சாதாரணமாகி விட்டன. ஆனல் அவர்கள் சிறிதும் கலங்கினர்களில்லை.

லெனின்கிராட் நகரத்தில் தமது படைகள் அதி சீக்கிரத்தில் பிரவேசித்துவிடும் என்று ஹிட்லர் உலகத்திற்கு மமதையுடன் அறிவித்தார். ஆனல் லெனின்கிராடுக்குச் செல்லும் பாதை அவருக்கு ராஜ பாதையாக அமையவில்லை. அந்தச் சரித்திரப் பெருமை வாய்ந்த நகரின் வாயிலில் வீரம் செறிந்த செஞ்சேனை கடுமையாக எதிர்த்து நின்றது. நாஜிப் படைகளுக்குப் பின் பக்கத்திலிருந்து பெண்கள் உள்ளிட்ட கொரில்லாப் படைகள் இடைவிடாமல் தாக்கின. தொழிற் சாலைகளிலே தொழிலாளர்கள் ஆயுதங்களை மலை மலையாக உற்பத்தி செய்து குவித்தனர். இவையெல்லாம் சேர்ந்து லெனின் கிராட் நகர் முழுவதையுமே ஒரு மலைக் கோட்டையாக்கின. அந்தக் கோட்டையிலே நாஜிகள் மோதி மோதி வீணைகத் தங்களுடைய மண்டைகளை உடைத்துக் கொண்டனர். அவர்களுடைய பிரேதங்கள் மலை மலையாகக் குவிந்தன.

லெனின்கிராட் மக்களின் செவிகளைத் துளைத்துக் கொண்டிருந்த பீரங்கி முழக்கம் வர வரத் தூரத்தில் கேட்டது. கடைசியில் பீரங்கி முழக்கமே லெனின்கிராட் மக்களுக்குக் கேட்கவில்லை. ஆம், லெனின்கிராட் போர் முனையே வெகு தூரத்திற்குச் சென்று விட்டது, ஜெர்மானியர் பின்வாங்கியதால்.

1943-ம் வருஷம் ஜனவரி மாதம் 27-ந் தேதி லெனின்கிராட் மக்களுக்கு ஒரு புனிதமான தினம். ஏன்?

ரஷ்ய மக்களின் சரித்திரத்திலே அது ஒரு புனிதமான தினம் என்று சொல்வது மிகையாகாது. ஏனெனில் "நாஜிப்படைகளை லெனின்கிராட் நகருக்கு வெகு தூரத்திற்கு விரட்டி அடித்துவிட்டோம். சத்துருவின் முற்றுகையிலிருந்து, பீட்டர் மன்னர் ஸ்தாபித்த பிரசித்திவாய்ந்த செயின்ட் பீட்டர்ஸ்பர்க் என்னும் லெனின்கிராட் நகரத்தை விடுவித்து விட்டோம்" என்று ரேடியோவில் மக்களுக்கு அறிவிக்கப்பட்டது. 18 மாதமாகச் சகல கொடிய ஆயுதங்களையும் உபயோகித்து ஜெர்மானியர் நடத்திய பிரம்மாண்டமான முற்றுகை, வீறுகொண்டு எழுந்த லெனின்கிராட் மக்களின் எதிர்ப்பைத் தாங்கமுடியாமல் தகர்ந்தது. வாகை சூடிய லெனின்கிராட் மக்களுக்கு ஏற்பட்ட சந்தோஷத்திற்கு எல்லையே யில்லை. அவர்கள் கூட்டங் கூட்டமாக வீதிகளிலும் மைதானங்களிலும் நதிக் கரை யோரமாகவும் கூடிச் சந்தோஷ ஆர்ப்பாட்டம் செய்தனர். ஆனால் அந்தச் சந்தோஷத்தை ஒருவாறு கெடுக்கக்கூடிய சோகமும் ஜனங்களின் ஹிருதயத்தில் படிந்திருந்தது. அதாவது—அருமைப் புதல்வர்கள், குடும்பங்களை ரக்ஷித்து வந்த தந்தையர், சகோதரர்கள் முதலிய பலரை அநேகம் குடும்பங்கள் போர்க்களத்திலே பலிகொடுத்திருந்தன. எனினும் அந்தத் தியாகங்கள் வீணாகவில்லை யல்லவா? ஐயோ! அவர்களும் உயிரோடிருந்து இந்த வெற்றியைப் பார்த்திருக்கக்கூடாதா என்ற ஒரு குறையே லெனின் கிராட் மக்களுக்கு இருந்தது. லெனின்கிராடின் மகத்தான வெற்றி ரஷ்யாவின் சரித்திரத்திலே நிரந்தரமாக இடம் பெற்றுவிட்டது என்பதையும், லெனின்கிராட் - வீரத்தை உலகம் ஒருபோதும் மறக்க முடியாதென்பதையும் எண்ணி யெண்ணி லெனின்கிராட் மக்கள் ஆனந்தக் கண்ணீர் வடித்தனர்.



லெனின்கிராட் போர்முனை



லடோகா ஏரி
பால்டிக் கடல்
க்ரோன்ஸ்டாட்
க்ரோஸா
பொரிஸாவோ
கிரிவா
அரண்
லெனின்கிராட்
ஷலைஸ்ஸல்பர்க்
ஸின்யாவினோ
கோல்பினோ
பீட்டர்ஹாப்
க்ராஸ்னயெ செலோ
ஸ்டாலின் கால்வாய்
ஸ்விர் நதி
மர்மான்ஸ்க் இருப்புப்பாதை
வொல்கோவ்ஸ்டரய்
மிகைலோவ்ஸ்கி
வோல்கா நதி
ஜெர்மன் முன்னேற்றம் டிச 1941
1943 ஜன 12க்கு முன் ஜெர்மன் அணி
ரஷ்யத் தாக்குதல்
ரயில்வே
கால்வாய்
மைல்

ஸ்டாலின்கிராட் போர்முனை



XIII ஸ்டாலின்கிராட்

ஸ்டாலின்கிராட் போர் முடிந்து சுமார் இரண்டு வருஷங்கள் மறைந்துவிட்டன. எத்தனை வருஷங்களானாலும் ஸ்டாலின்கிராட் நகரின் சோவியத் சைன்யமும் மக்களும் நடத்திய வீரப் போரை—சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்குச் செய்த 'ரத்த ஸ்நானத்தை'—ரஷ்ய மக்களால், உலக மக்களால்தான், எவ்வாறு மறக்க முடியும்? ஸ்டாலின்கிராட் போர் ரஷ்ய மக்களின் ஒரு தனிப் பெரும் வீரகாவியமாகிவிட்டது. வருங்கால ரஷ்ய மக்கள் ஸ்டாலின்கிராட் வீரத்தைப் பாடிப் பாடிப் பூரித்துப் போவார்கள். 1942-செப்டம்பரில் ஆரம்பமான ஸ்டாலின் கிராட் போர் 142 நாள் நடைபெற்றது. ஸ்டாலின் கிராட் 'யமபுரியில்' புகுந்த 22 ஜெர்மன் டிவிஷன்களை ரஷ்யர் வளைத்து நிர்மூல மாக்கினர். ஹிட்லர் தமது துருப்புகளில் 3,30,000 பேரைப் பலிகொடுத்தும், ஸ்டாலின் கிராட் நகரைப் பிடிக்க முடியவில்லை. வீர ஸ்டாலின் கிராட் யுத்தத்தின் போக்கையே மாற்றிவிட்டது.

ஜெர்மானியர் ஸ்டாலின்கிராட் நகரை மூன்று பக்கங்களில் வளைத்துக் கொண்டனர். நாலாவது பக்கத்திலோ வோல்கா நதி. ஸ்டாலின்கிராடிலிருந்த ரஷ்யர் வோல்கா நதியின் மறு கரைக்குப் போக்குவரவு வைத்துக் கொள்ளாமல் தடுக்கும் பொருட்டு, ஜெர்மானியர் இடைவிடாமல் பீரங்கிப் பிரயோகம் செய்யலானார்கள். உண்மையிலேயே ஸ்டாலின்கிராட் நிலைமை அபாயகரமாக இருந்தது. அது அனுபவித்த கஷ்டங்களை என்னென்பது!

அக்கினிமழை பெய்தது, இடைவிடாமல் வீடுகள் தீப் பற்றி எரிந்தன. பகலில் மூண்ட தீ இரவிலும் எரிந்து கொண்டிருந்தது. இரவு பகல் வித்தியாசமின்றி, பீரங்கிகள் முழங்கிக்கொண்டிருந்தன; வெடி குண்டுகள் நகரத்திலே விழுந்து வெடிக்கும் சப்தம் செவியைப் பிளந்துகொண்டிருந்தது. குண்டுகள் வெடித்த அதிர்ச்சியில் பூமி குலுங்கிக்கொண்டிருந்தது, பூகம்பம் ஏற்பட்டதுபோல. ஆனால் ஸ்டாலின்கிராட் மக்கள்

சிறிதும் கலங்கவில்லை. ஜெர்மானியர் வீசிய ஒவ்வொரு குண்டும் அவர்களுடைய உறுதியைப் பலப்படுத்தியது. ஸ்டாலின்கிராட் நகரிலே குண்டுகள் தாக்காத இடமே இல்லை. ஹிட்லர் தமது சிறந்த படைகளை ஸ்டாலின்கிராட் மீது ஏவி விட்டிருந்தாரென்பதையும், அவர் ஸ்டாலின்கிராட் போரில் தமது அந்தஸ்தையும் பணயமாக வைத்துவிட்டார் என்பதையும் ரஷ்யர் அறிந்துகொண்டனர். ஆகவே ஸ்டாலின்கிராடைக் காப்பாற்ற ஸ்டாலின் தகுந்த சமயத்தில் நடவடிக்கை எடுத்துக்கொண்டார். சிறந்த சோவியத் சேனுதிபதிகளாகிய ஜெனரல் ஜுக்கோவ், ஜென்ரல் வோரனேப் இவ்விருவரையும் ஸ்டாலின்கிராட் போர்முனைக்கு அனுப்பிவைத்தார் ஸ்டாலின். அவர்கள் நாஜிகளின் போர்த் தந்திரத்தில் உள்ள 'ஓட்டை'களைக் கண்டுபிடித்துப் பிரம்மாண்டமான எதிர்தாக்குதல்களை ஆரம்பித்தார்கள். இந்தத் தாக்குதல்களின் போர்த் தந்திரத்தையும் துணிச்சலையும் கண்டு மலைத்துப் போயினர் நாஜிகள். அதிலிருந்து ஸ்டாலின்கிராட் போரின் போக்கே மாறிவிட்டது, ரஷ்யர்களுக்குச் சாதகமாக.

நவம்பர் மாதம் 19-ந் தேதியன்று ரஷ்யர் முதலாவது தாக்குதலை ஆரம்பித்தார்கள், ஸ்டாலின்கிராடை விடுவிப்பதற்காக. ஸ்டாலின்கிராட் வாயிலில் உள்ள ஜெர்மன் பாஸிஸ்டு துருப்புகளைப் பக்கவாட்டில் தாக்கி அவற்றைத் துவம்ஸம் செய்யவேண்டும், ஸ்டாலின்கிராட் நகரத்திலே இருந்த சத்துருப் படைகளை வளைத்துவிடவேண்டும்—இவைதான் சோவியத் சேனுதிபதிகளின் நோக்கம். அவர்களுடைய திறமை காரணமாகவும், அவர்களுடைய துருப்புக்கள் வீரப் போர் புரிந்ததாலும், இந்த நோக்கம் நிறைவேறியது. ஸ்டாலின்கிராடை விடுவிப்பதற்கு ரஷ்யர் ஆரம்பித்த முதல் தாக்குதலில் 95,000 ஜெர்மன் அதிகாரிகளும் துருப்புகளும் கொல்லப்பட்டனர். 72,400 ஜெர்மன் துருப்புகள் கைது செய்யப்பட்டனர். மற்றும் ஏராளமான யுத்த தளவாடங்கள் கைப்பற்றப்பட்டன. பல சத்துருப் படைகள் வளைத்துக் கொள்ளப்பட்டன.

ஸ்டாலின்கிராட் போரின் இரண்டாவது கட்டம் மத்ய டான் பிரதேசத்தில் ஆரம்பமாயிற்று. 1942-ம் வருஷம் டிசம்பர் மாதம் 16-ந் தேதிக்கும், 30-ந் தேதிக்கு மிடையே ரஷ்யர் ஸ்டாலின்கிராடில் இருந்த ஜெர்மன் படைகளையும், ஹிட்லரின் இதரக் கூலிப் பட்டாளங் களையும் பூர்ணமாக வளைத்தனர், ஒரு இரும்புச் சுவரைப் போல. அந்த இரும்புச் சுவர் இடைவிடாமல் நெருப்பை உமிழ்ந்துகொண்டிருந்தது ஜெர்மானியர்மீது. ஸ்டாலின் கிராட் போரின் இரண்டாவது கட்டத்திலே 59,000 ஜெர்மன் துருப்புகள் மாய்க்கப்பட்டன. 60,050 ஜெர்மன் துருப்புகளும் அதிகாரிகளும் கைது செய்யப் பட்டனர். மற்றும் ரஷ்யர் கைப்பற்றிய யுத்த தளவாடங் களுக்குக் கணக்கே யில்லை.

ஸ்டாலின்கிராட் போரின் மூன்ருவது கட்டமே இறுதிக் கட்டமாகும். ஜெர்மானியர் ஸ்டாலின்கிராடைக் கைவிட்டு ராஸ்டோவை நோக்கிப் பின்வாங்கியிருக்கலாம். ஆனல் ஸ்டாலின்கிராட் நகரில் வளைத்துக்கொள்ளப்பட்ட லக்ஷக்கணக்கான ஜெர்மன் துருப்புகளின் உயிரைப் பார்க்கிலும் ஹிட்லர் தமது அந்தஸ்தையே பெரிதாகக் கருதினர். ஸ்டாலின்கிராடில் வளைக்கப்பட்ட ஜெர்மன் துருப்புகளுக்கு ஸப்ளை வரமுடியவில்லை. அவர்களை நெரித்துக்கொண்டிருந்த சோவியத் ‘இரும்பு வளைய’த் தைத் தகர்க்கும்பொருட்டு ஹிட்லர் புதிய படைகளை அனுப்பினர். ஆனல் அந்த இரும்பு வளையத்தை, வைராக்கிய சோவியத் படைகளைத் தகர்த்துக்கொண்டு ஸ்டாலின்கிராடில் சிக்கிய ஜெர்மன் படைகளை விடுவிக்க முயன்ற நாஜிப் படைகள் அலறிக்கொண்டு முதுகு காட்டி ஓடின. மூன்ருவது கட்டத்திலே 21,000 ஜெர்மன் பாஸிஸ்டு துருப்புகள் அழிக்கப்பட்டன. 5,200 நாஜி-அதிகாரிகளும் துருப்புகளும் கைது செய்யப்பட்டனர். ஸ்டாலின்கிராடில் வளைக்கப்பட்ட ஜெர்மன் படைகள் உயிர் தப்புவதற்கு மார்க்கமில்லை. அவை சரணுகதி யடையவும் பிடிவாதமாக மறுத்துவிட்டன.

1943 ஜனவரி மாதம் 10-ந் தேதியன்று சோவியத் துருப்புகள், ஸ்டாலின்கிராடில் 'சிறைப்பட்டிருந்த' ஜெர்மன் சைன்யத்தை மூர்க்கமாகத் தாக்க ஆரம்பித்தன. அவற்றை அழித்துவிடும் நோக்கத்துடன்தான். அடிமேல் அடி கொடுத்தால் அம்மியும் நகருமல்லவா? ரஷ்யர் ஒவ்வொரு அரணைகக் கைப்பற்றிக்கொண்டு முன்னேற லாயினர். ஜனவரி மாதம் 27-ந் தேதியிலிருந்து ஜனவரி மாதம் 31-ந் தேதிவரை சண்டை. மிகவும் கோரமாக நடந்தது. ஜெர்மானியர் பின் வாங்கிக்கொண்டே யிருந்தனர். 1943-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 2-ந்தேதி யன்று சரித்திரப் பெருமை வாய்ந்த ஸ்டாலின்கிராட் போர் முடிவடைந்தது, ரஷ்யருக்கு மகத்தான வெற்றி யுடன். ஜெர்மன் சைன்யம் நிர்மூலம் செய்யப்பட்டது. ஜெர்மன் சேனாதிபதி பீல்டு மார்ஷல் பாவ்லஸும் வேறு 24 தளபதிகளும் கைது செய்யப்பட்டனர். "சபாஷ் ஸ்டாலின்கிராட்!" என்று உலகின் சுதந்திர மக்களும் சுதந்திரப் போர் செய்துகொண்டிருந்த மக்களும் சந்தோஷ ஆரவாரம் செய்தனர், தங்களுக்கே வெற்றி கிடைத்ததைப்போல.

ஸ்டாலின்கிராட் தனது வீரத்தையும் இணையற்ற தியாகத்தையும் தனது ரத்தத்தைக்கொண்டே எழுதி விட்டது சரித்திரத்திலே. உலகம் உள்ளளவும்—மனித நாகரிகம் நிலைத்திருக்கும் வரையிலும்—ஸ்டாலின்கிராடின் புகழ் அழியாது. அடிமைத்தனத்தைக் கொளுத்த விரும்பும் மக்களுக்கு—சுதந்திரத்திற்காகச் சாவைத் தழுவத் தயங்காத ஜனங்களுக்கு,—கரை தெரியாத கால சமுத்திரத்திலே ஒருபோதும் மங்காமல் ஒளி வீசி வழிகாட்டும் தீபஸ்தம்பம் போல விளங்கும் ஸ்டாலின்கிராட்!



XIV செபஸ்டபோல்

லெனின்கிராட், ஸ்டாலின்கிராட் நகரங்களின் வீரச் செயல்களையும் தியாகங்களையும் பற்றி நாம் முந்தின அத்தியாயங்களில் படித்தோம். சோவியத் ரஷ்யாவின் மூன்ருவது வீர நகரமாகிய செபஸ்டபோல் கருங்கடல் கரையோரமாகவுள்ள துறைமுகப் பட்டின மாகும். 8 மாத காலமாக ஜெர்மானியர் செபஸ்டபோல் நகரை மிகவும் மூர்க்கமாக முற்றுகை போட்டனர். தற் காலத்தின் கொடிய ஆயுதங்கள் அனைத்தையும் அவர்கள் உபயோகித்தனர். ஆனால் செபஸ்டபோல் பணியவில்லை. "இந்நகரத்திற்கு இவ்வளவு வைராக்கியமா?" என்று கேட்பதுபோல ஹிட்லர் மேன்மேலும் புதிய படைகளை செபஸ்டபோலுக்கு அனுப்பிக்கொண்டிருந்தார். ஆனல் அப்படைகள் செபஸ்டபோல் - போர்க்களத்திலே மண் ணோடு மண்ணுயின. ஹிட்லரின் படைபலத்தைக் குறைத்தும், யுத்த தளவாடங்களைச் சின்ன பின்ன மாக்கியும், செபஸ்டபோல் தனது வீரத்தை நிலை நாட்டிக் கொண்டது.

ஜெர்மானியர் 8 மாதமாக மூர்க்கமாய் முற்றுகை யிட்ட பின்னரும்—தங்களுடைய பிணக்குன்றுகள் மீது ஏறி இறங்கிக் கால்கள் ஓய்ந்த பின்னரும்—தங்களுடைய ரத்த வெள்ளத்திலே நீந்தி நீந்திக் கைகள் சோர்ந்த பின் னரும், செபஸ்டபோல் நகரை 1942-ம் வருஷம் ஜுலை மாதத்தில் பிடித்தனர். ஆனல் செபஸ்டபோல் நகரம் சரணகதியடையவில்லை. "எங்களால் இனிச் சண்டை செய்ய முடியவில்லை. உயிர்ச் சேதத்தையும் பொருட் சேதத்தையும் தவிர்ப்போம். நகரத்திற்குள் வாருங்கள், எஜமானர்களாக" என்று செபஸ்டபோலின் ஜனங்க ளாவது, சைன்யமாவது ஜெர்மானியருக்குப் பயபக்தியுடன் தெரிவித்துச் சரணகதி யடைந்திருந்தால் அல்லவா, செபஸ்டபோல் வீழ்ச்சி யடைந்ததாகவோ, அல்லது பணிந்ததாகவோ சொல்லலாம்? அவ்வாறு ஒன்றும் ஏற்பட்டுவிடவில்லை. ரஷ்யர்கள் கடல் மார்க்கமாக செபஸ்டபோல் நகரிலிருந்து வெளியேறினர். பிடிபட்ட

—ஆனால் பணிய மறுத்த—ஸெபஸ்டபோல் நகரிலே ஜெர்மானியர் வெற்றி மமதையுடன் பிரவேசித்தனர். ஆனால் அவர்களால் ஒரு உருப்படியான கட்டடத்தைக்கூடப் பார்க்க முடியவில்லை. ஸெபஸ்டபோல் நகரம் முழுவதும் பாழடைந்திருந்ததைக் கண்டு அவர்கள் ஏமாற்றமடைந்தனர். ஸெபஸ்டபோல் நகரை ஜெர்மானியர் பிடித்தார்களேயொழிய, அதை ஜயிக்கவில்லையென்று சொல்லவும் வேண்டுமோ? லக்ஷக்கணக்கான உயிர்களைப் பலிகொடுத்து விட்டுப் பிடித்த பாழடைந்த நகரைப் பாதுகாக்க வேண்டிய 'நஷ்டத்தொழிலும்' ஜெர்மானியருக்கு ஏற்பட்டது.

பாழடைந்த ஸெபஸ்டபோல் நகரையாவது இறுதி வரை ஜெர்மானியரால் தங்களுடைய ஆதிக்கத்தில் வைத்திருக்க முடிந்ததா? அதுவும் முடியவில்லை. 8 மாதமாக முற்றுகை போட்டு ஜெர்மானியர் பிடித்த ஸெபஸ்டபோலை மூன்றே வாரங்களில் ரஷ்யர் திரும்பப் பிடித்துவிட்டனர். 1944-ம் வருஷம் மேமாதம் 10-ந் தேதியன்று ஸெபஸ்டபோல் மீண்டும் தனது வீரப் புதல்வர்கள் வசமாயிற்று. ஸெபஸ்டபோல் ரஷ்யர் வசம் இருந்தபோது நடந்த முற்றுகையில் 3 லக்ஷம் ஜெர்மனியரும் ருமேனியரும் பலியாயினர். ரஷ்யர் திரும்ப முற்றுகை யிட்டபோது மேலும் 112,000 ஜெர்மானியர் உயிரிழந்தனர். ஆயிரக் கணக்கான ஜெர்மானியர் கப்பல்களில் தப்பியோட முயன்றனர். ஆனால் சோவியத் கடற்படை அவர்களைத் துரத்திச் சென்று நிர்மூலமாக்கியது. ஸெபஸ்டபோல் போர் முடிந்து சில தினங்களுக்குப் பின்னரும், அதன் கட்டடங்களிலிருந்து புகை கிளம்பிக்கொண்டிருந்தது. பீரங்கிக் குண்டுகளாலும் விமானக் குண்டுகளாலும் தகர்க்கப்பட்டிருந்த அந்த வீர நகரான ஸெபஸ்டபோலின் கட்டடங்களைக்கூட ரஷ்யர் செங்கொடிகளால் அலங்கரித்திருந்தனர். பொலிவிழந்த அக்கட்டடங்கள் ஸெபஸ்டபோல் நகர வீரத்தின் சிறந்த சின்னங்களாக விளங்கின. மழையிலும் வெய்யிலிலும் ஜெர்மானியருக்குப் பாதுகாப்பு அளிக்க மறுத்த அக்கட்டடங்களையும் ரஷ்யர் தங்களைப்போல வீரர்களாகவே, தேசபக்த மணிகளாகவே மதித்தனர்.

சோவியத் ரஷ்யாவின் பிரசித்தி வாய்ந்த சேனாதிபதி மார்ஷல் ஜுக்கோவ். அவருடைய படைகள் இப்பொழுது ஜெர்மன் தலைநகர் பெர்லினை நெருங்கிக்கொண்டிருக்கின்றன.



மாரிகாலத்தில் ரஷ்யர் பிரம்மாண்டமான எதிர்த் தாக்குதலை ஆரம்பித்து, ஜெர்மானியரைப் பின்னுக்குத் தள்ளி முன்னேற ஆரம்பித்தனர். அவர்களுடைய முன்னேற்றத்தை இப்படம் தெளிவாகக் காட்டுகிறது. ரஷ்யர்கள் இப்பொழுது போர் முனையையே ஜெர்மனிக்கு மாற்றி யிருப்பது குறிப்பிடத் தகுந்தது.

XV ரஷ்யரின் எதிர்த்தாக்குதல்

ஆரம்பத்தில் வெற்றிக்கு மேல் வெற்றி அடைந்து வந்த ஜெர்மன் படைகள் உத்ஸாகமாக மேன் மேலும் முன்னேறின. மாரி காலம் நெருங்கிவிட்டது. ரஷ்யாவின் பனி, இரும்பு - ஹிருதயம் படைத்த ராக்ஷஸ டாங்குகளின் மூச்சைக்கூடப் பிடிக்கலாயிற்று! இந்நிலையில் எலும்பு, வெறும் தசை, ரத்தம் இவற்றாலாகிய ஜெர்மானியர்களாலா அந்த ரஷ்ய 'தளபதி-பனி'யை எதிர்த்து நிற்க முடியும்? "சீக்கிரம் முன்னேறுங்கள். மாரிகாலம் நெருங்கிக்கொண்டிருக்கிறது. மாஸ்கோவில் குளிர் காயலாம்" என்று ஹிட்லர் உத்தரவு பிறப்பித்தார். ஜெர்மன் படைகளும் மாஸ்கோவை நோக்கி முன்னேறின. அப்பொழுதுதான் யுத்தத்திலே ரஷ்யாவுக்கு மிக நெருக்கடியான கட்டம். *1941*-ம் வருஷம் டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் சிற்சில இடங்களில் ஜெர்மன் படைகள் மாஸ்கோவுக்கு *25* மைல் தூரத்தில் இருந்தன. இன்னும் சில தினங்களில் அந்தத் தூரமும் *18* மைலாகக் குறுகியது. "ரஷ்யா வீழ்ச்சியடைந்துவிடும்" என்ற பேச்சு உலக முழுவதிலும் அடிபட ஆரம்பித்தது. ஸோவியத் சர்க்காரும் கூட, தங்களுடைய தலைநகரைக் குபிஷெவுக்கு மாற்றினர். யுத்த காலத்தில் தலைநகரத்தை மாற்றக் கூடிய நிலைமை ஏற்பட வேண்டுமானால் வீழ்ச்சி நெருங்கி விட்டதாகவோ, அல்லது ஜெர்மன் ஆக்கிரமிப்பை இனி மேல் தடுக்க முடியாது என்றோ தான் கருத முடியும்.

மாஸ்கோவைத் தாக்குவதற்குப் பிரம்மாண்டமான முயற்சியை ஜெர்மானியர் ஆரம்பித்த சமயத்தில்தான், அதுவரை ஹிட்லரை நோக்கிப் புன்முறுவல் செய்து கொண்டிருந்த 'அதிர்ஷ்ட தேவதை' ரஷ்யரை நோக்கி முகத்தைத் திருப்பிக் கொண்டது. என்ன ஆச்சரியம்! யுத்தத்தின் போக்கே மாறிவிட்டது. அந்தச் சமயத்தில் யுத்தப் போக்கை மாற்றிய சம்பவங்களைப்பற்றி விசேஷமாகத் தெரிந்துகொள்ள முடியாது. ஜெர்மன் சேனை

பதிகள் வருங்காலத்தில் தங்களுடைய ஞாபகங்களைப் புஸ்தக ரூபத்தில் வெளியிடும்போதுதான் அவ்விவரங்களெல்லாம் தெரியவரும்.

மாரிகாலம் வந்துவிட்டதால் மாஸ்கோமீது தாக்குதலை ஆரம்பிப்பதற்குத் தகுந்த சந்தர்ப்பம் போய்விட்டதாக ஜெர்மன் சேனுபதிகள் ஹிட்லரிடம் தெரிவித்திருக்கலாம். ஆனால் அவர்களுடைய ஆலோசனையை ஹிட்லர் நிராகரித்திருக்க வேண்டும். இதுவரை வெற்றி-மதுவைக் குடித்துக்கொண்டேயிருந்து மதியிழந்த ஹிட்லர், மின்னல் - வேகத்தில் மாஸ்கோவையும் பிடித்துவிடலாம் என்று எண்ணினுர். மாரிகாலத்தை லட்சியம் செய்யாமல் மாஸ்கோவைப் பிடிக்கும் நோக்கத்துடன் பெருந் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டது. ஸோவியத் செஞ்சேனையின் எதிர்ப்பும் என்றுமில்லாதபடி கடுமையாகி ஹிட்லரின் நோக்கத்தைச் சிதறடிக்க ஆரம்பித்தது. 1941-ம் வருஷம் அக்டோபர் மாத இறுதியில் ஜெர்மானியரின் முன்னேற்றம் ஸ்தம்பித்துவிட்டது, ரஷ்யரின் ஆக்ரோச எதிர்ப்பின் காரணமாக. ரஷ்ய இலையுதிர் காலத்தின் சேறும் ஜெர்மானியருக்குப் பெருந் தொல்லை கொடுத்தது. இவ்விதமாக மாஸ்கோவைப் பிடிப்பதற்கு ஜெர்மானியர் ஆரம்பித்த கடைசி முயற்சியும் தோல்வியடைந்தது.

பின்வாங்க ஆரம்பித்தனர் ஜெர்மானியர் கட்டுப்பாடாக. யுத்த ஆரம்ப காலத்திலிருந்து எந்தப் போர் முனையிலும் பின் வாங்குதலை அறிந்திராத ஜெர்மன் படைகள் மாஸ்கோ முன்பு மனமுடைந்து மண்டியிட்டுப் பின்வாங்க ஆரம்பித்தன என்றுல், அகில உலகமும் ஏன் ஆச்சரியப் படாது? உலக மக்கள் அனைவரின் திருஷ்டியும் ரஷ்யாமீது விழுந்தது.

பிடித்த இடங்களை விட்டுக்கொடுக்க ஜெர்மானியருக்கு மனம் வரவில்லை. ஆனால் அவற்றைப் பாதுகாக்க அவகாசமோ வசதியோ இல்லை. ஜெர்மன் துருப்புகள் பனி தாங்க முடியாமல் விறைத்துக்

கொண்டிருந்தன. 'கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை' என்பது பழமொழி. இது ஜெர்மானியர் சம்பந்தப்பட்டவரை ருஜுவாகிவிட்டது. ஏனெனில் ஏறக்குறைய மாஸ்கோவை வளைத்துக்கொண்ட ஜெர்மன் துருப்புகள், நோக்கம் நிறைவேறும் சமயத்திலே வாபஸாக நேரிட்டதல்லவா? மாஸ்கோவுக்கு மேற்கேயுள்ள முக்கியமான நகரங்களைக் கைவசம் வைத்துக்கொண்டு தற்காப்புப் போரை மாத்திரம் நடத்தி மாரிகாலத்தைக் கழித்து விடலாம் என்று ஜெர்மானியர் நினைத்தனர். ஆனால் அந்த நினைப்பிலே ரஷ்யர் மண்ணைப் போட்டனர். ரஷ்யரும் களைத்துப் போயிருக்கவேண்டுமென்று ஜெர்மானியர் எண்ணியிருந்தனர். ஆகவே பெரிய எதிர்த் தாக்குதலை ரஷ்யரால் நடத்த முடியாதென்றும், ரஷ்ய கொரில்லாக்கள் கொடுக்கக் கூடிய தொந்தரவுகளைச் சாமானியமாகச் சமாளித்துக்கொள்ளலாம் என்றும் ஜெர்மன் சேனுபதிகள் மனக்கோட்டை கட்டினர். ஆனால் ரஷ்யரோ அதுதான் சமயம் என்று எண்ணிப் பெருவாரியான எதிர்த் தாக்குதலை ஆரம்பித்தனர். ஜெர்மன் சேனுபதிகளின் மனக் கோட்டையும் இடிந்து விழுந்தது; மனவுறுதியும் குலைந்தது. மாதக் கணக்கில் சண்டை போட்டுக் களைப்படைந்திருந்த அந்த ரஷ்யர்களிடம் இவ்வளவு அபூர்வமான சக்தி இருக்குமென்று ஒருவருமே எண்ணவில்லை. இவற்றை யெல்லாம் பார்க்கும்போது யுத்தத்திலே நெருக்கடியான கட்டம் ரஷ்யாவுக்கு ஏற்பட்டிருந்தபோதிலும் எவ்வளவு திறமையாகவும் தந்திரமாகவும் ஸ்டாலினும் அவருடைய சகாக்களும் போரை நடத்திவந்தார்கள் என்பது தெளிவாயிற்று.

மாரிகாலத்தில் ஹிட்லரின் சேனைகளுக்குப் பெரிய சோதனை ஏற்படும் என்று எதிர் பார்த்து, ஊக்கமும் திறமையும் வாய்ந்த ஏராளமான புதிய படைகளை ஸ்டாலின் தயாராக நிறுத்தி வைத்திருந்தார். அவர் எதிர்பார்த்தபடி மாரிகாலமும் வந்தது. ஜெர்மானியருக்குத் தொல்லையும் ஏற்பட்டது. வாபஸாகிக்கொண்டிருந்த ஜெர்மன் துருப்புகளை அடித்து நொறுக்குவதற்கு,

மாரிகாலத்தில் புதிய படைகளையும் உடனே ஸ்டாலின் பயன் படுத்திக்கொண்டார். நிலைமை நெருக்கடியாகி விட்டது ஜெர்மானியருக்கு. ஜெர்மன் சேனாபதி வான் பாருச்சிட்ஸை ஹிட்லர் பதவியிலிருந்து நீக்கித் தாமே படைத்தலைமை வகிக்கலானார். யுத்தத்தின் போக்கிலே ஏற்பட்ட புரட்சிகரமான மாறுதலுக்கு இதைவிட வேறு அத்தாட்சி வேண்டியதில்லை. மாஸ்கோவைப் பிடிக்கத் தவறியதற்காக மற்றும் பல ஜெர்மன் 'தளபதிகள் பதவியை இழந்து அவமானத்திற்கு உள்ளானார்கள்.

XVI ஜெர்மன் வாபஸ்

ரஷ்யத் துருப்புகள் ஜெர்மானியருக்குக் கொஞ்சங்கூட ஓய்வு கொடுக்கவில்லை. அவர்கள் விறுவிறுப்பாக ஜெர்மானியரைத் துரத்திக்கொண்டு செல்லலாயினர். 'தளபதி-பனி' அவர்களுக்கு மிகவும் உதவியாக இருந்தது. தினந்தோறும் பல கிராமங்களும் நகரங்களும் மீட்கப் பட்டன. இடையே ஏராளமான ஜெர்மன் துருப்புகள் வளைக்கப் பட்டன. மத்திய டான் பகுதியில் பொகுச்சார் என்னும் இடத்திற்குச் சமீபமாக ரஷ்யர் வாரனேஷ்—ராஸ்டோவ் ரயில்வேயை நோக்கி முன்னேறினர். கோட்டல் நிக்கோ என்னும் நகரத்தை ரஷ்யர் கைப் பற்றி, ராஸ்டோவ் நகரத்திற்கும் காக்கஸஸ் பிரதேசத் திற்கும் செல்லும் பாதையை அடைந்தனர். 1942-ம் வருஷம் ஜனவரிமாதம் 7-ந்தேதியன்று ரஷ்யர் மில்லவோ என்னும் நகரைக் கைப்பற்றினர். கர்ஸ்க், கார்க்கோவ் முதலிய நகரங்களும் மீட்கப்பட்டன. இவ்விதமாக மாரி காலயுத்தத்தில் மாத்திரம் 1,85,000 சதுரமைல் விஸ் தீரணமுள்ள—அதாவது, பிரிட்டனைப் போல மூன்று மடங்கு பூமியை ரஷ்யர் மீட்டனர். 8,50,000 ஜெர்மன் சோல்ஜர்களுக்கு அதிகமாகப் பலியாயினர். 3,43,000 ஜெர்மானியர் கைது செய்யப்பட்டனர்.

1943-ம் வருஷம் பிப்ரவரி மாதத்திற்கும் 1944-ம் வருஷம் பிப்ரவரி மாதத்திற்கும் இடையே யுள்ள ஒரு வருஷ காலம் ரஷ்யா—ஜெர்மன் யுத்தத்தில் மிகவும் முக்கியத்வம் வாய்ந்தது. யுத்தத்தின் போக்கை அடியோடு மாற்றிய பல முக்கியமான வெற்றிகள் ரஷ்யருக்குக் கிடைத்தன. ஸ்டாலின்கிராட், லெனின்கிராட் நகரங்கள் மீட்கப்பட்டன. உக்ரேனை ஜெர்மானியரிடமிருந்து விடுவிப்பதற்கு இறுதிப் போராட்டமும் நடந்து கொண்டிருந்தது. மற்றும் கர்ஸ்க், ஓரல், பெலோகிராட், கார்கோவ், பிரியான்ஸ்க், ஸ்மோலன்ஸ்க், கீவ், நோவோரஸிஸ்க், டோனட்ஸ், ஜிடோமீர் முதலியவையும் மீட்கப்பட்டன.

டெஸ்னே, ஸோஜ், நீப்பர், வோல்கோ முதலிய நதிக்கரை யோரங்களில் நடைபெற்ற யுத்தங்களிலும் ரஷ்யருக்கு மகத்தான வெற்றிகள் கிடைத்தன. ஜெர்மனியின் பிரதானமான படைகள் கிழக்குப் போர் முனையில்தான் இருந்தன. அப்படியிருந்தும் தன்னந் தனியாகச் செஞ்சேனை ஹிட்லரின் சேனைகளை எதிர்த்து அவற்றின் தெம்பைத் தகர்த்துவிட்டது. 1943-ம் வருஷம் ஜுலை மாதத்திலே ஹிட்லர் மொத்தம் 287 டிவிஷன் படைகளைக் கிழக்குப் போர் முனையில் நிறுத்தி யிருந்தார். இவற்றில் 207 டிவிஷன் படைகள் ஜெர்மனியைச் சேர்ந்தவை. 1943-ம் வருஷத்தில் நடைபெற்ற மிகவும் பிரம்மாண்டமான யுத்தங்களை உலகம் ஒருபோதும் கண்ட தில்லை. டாங்குகளும் விமானங்களும் பீரங்கிகளும் கணக்கு வழக்கின்றி இந்த யுத்தங்களிலே உபயோகிக்கப்பட்டன. ஆயுதங்கள் மாத்திரம் இருந்தால் ஜயித்துவிட முடியுமா? முக்கியமாக யுத்த தந்திரம் அவசியம் அல்லவா? புதுவிதமான ஆயுதங்கள் மிகவும் தந்திரமாகவும் சாமர்த்தியமாகவும் ரஷ்யரால் பயன்படுத்தப் பட்டன. ஜெர்மானியர் உபயோகித்த டைகர் - டாங்குகள் முதலிய புதிய டாங்குகள் ரஷ்யரைத் திணற அடிக்கவில்லை. ஜெர்மானியரின் புதிய வித விமானங்கள் ரஷ்யரின் உறுதியைக்

குலைக்கவில்லை. யூரல் பகுதியில் ஸ்தாபிக்கப்பட்ட தொழிற்சாலைகளில் உற்பத்தியான தற்கால முதல் தரமான ஆயுதங்கள் ஸோவியத் செஞ்சேனைக்கு வந்து குவிந்த வண்ணமா யிருந்தன. இந்த அமோகமான ஆயுத சப்ளை ஸோவியத் வெற்றிக்கு அடிகோலியது. ஆனல் அஸ்திவாரம் மட்டும் பலமாயிருந்தால் ஒரு திவ்ய மான ஆலயத்தைக் கட்டி முடித்துவிட முடியுமா? கல்-தச்சர்களும் வேண்டுமல்லவா? அந்த ஆலயத்தை ஒத்தது தான் ரஷ்யரின் வெற்றி. அந்த ஆலயத்தைக் கட்டும் கல்-தச்சர்களைப் போன்றவர்களே வீரம் செறிந்த ரஷ்ய மக்கள். நீடித்த யுத்தங்களிலே ஆரம்ப சூரத்தனம் காட்டி வெற்றி பெறும் வல்லரசுகள் போகப் போக வலி யிழந்து சோர்வடைந்து தவிர்க்க முடியாத இறுதித் தோல்விக்குள்ளாகின்றன என்பதற்குச் சரித்திரத்திலே எத்தனையோ உதாரணங்கள் உள்ளன. இவ்விதமாகத் தான் முதலாவது உலக யுத்தத்தில் கெய்ஸரின் ராணுவம் தோல்வியடைந்தது. அந்தச் சாயல் ஹிட்லரின் ராணு வத்தின் மீதும் விழுந்துவிட்டது. ஆரம்பத்தில் தோல்வி மேல் தோல்வியடைந்து யுத்தத்தின் பிற்பகுதியிலே தலை நிமிர்ந்து நெஞ்சுறுதி கொண்டு ஆக்ரோசத்துடன் எதிர்த் தாக்குதல்களை நடத்திச் சத்துருவை முறியடிக்கும் நாடுகளும் உண்டு. இதற்கும் சரித்திரத்தில் உதா ரணங்கள் உள்ளன. அத்தகைய நாடுகளின் வரிசையிலே ஸோவியத் ரஷ்யாவே முதல் ஸ்தானத்தை வகிக்கிறது.

பின்வாங்க ஆரம்பித்த ஜெர்மானியர் பின் வாங்கிக் கொண்டே சென்றனர். மாரிகாலம் போய்க் கோடை காலமும் வந்தது. இவ்வாறு பருவங்கள் மாறினும் யுத்தப் போக்கு ஜெர்மானியருக்குச் சாதகமாக மாற வில்லை. லட்சக் கணக்கான உயிர்களைப் பலி கொடுத்துப் பிடித்த கேந்திர ஸ்தானங்கள் ரஷ்யர் கைக்கு மாறின. 1944-ம் வருஷம் ஜூலை மாதத்தில் பிஸ்கோவ் என்ற நகரத்தை ரஷ்யர் மீட்டனர். இதுவே ஜெர்மானியர் வசம் பாக்கி யிருந்த, யுத்தத்திற்கு முற்பட்ட ரஷ்யாவின், கடைசி நகரமாகும். பின்னர் ஸோவியத் படைகள்

போலந்தில் கராக்கோவை நோக்கி முன்னேற ஆரம்பித்தன. ருமேனியா, பல்கேரியா, பின்லந்து, யூகோஸ்லேவியா முதலிய நாடுகள் ஜெர்மனியிடமிருந்து விடுவிக்கப்பட்டன. ஸெக்கோஸ்லோவேகியாவிலும் சோவியத் துருப்புகள் பிரவேசித்தன. நார்வேயிலும் ரஷ்யர் முன்னேறி கிர்க்கெனஸ் என்னும் இடத்தை விடுவித்தனர். ஜெர்மன் ராணுவத்தின் ஜனன பூமியென்று கருதப்படும் கிழக்குப் பிரஷ்யாவில்—ஜெர்மன் மண்ணிலே 90 மைல் முனையில் ரஷ்யர் முன்னேறினர்.

கடைசி வரையில் ஹிட்லருக்குத் துரோகம் செய்யாமல் இருந்த ஹங்கேரிக்குள்ளும் ரஷ்யர் வேகமாக முன்னேற ஆரம்பித்தனர். இப்பொழுது ஹங்கேரியின் முக்கால் பங்குக்கு அதிகமாக ரஷ்யர் வசமாகிவிட்டது. ஹங்கேரியின் தலைநகராகிய புடாபெஸ்டின் பெரும் பகுதியை ரஷ்யர் கைப்பற்றிவிட்டனர். ஆஸ்ட்ரியாவின் எல்லையையும் ரஷ்யர் நெருங்கிக்கொண்டிருக்கின்றனர். 1945 ஜனவரி 20-ந் தேதியன்று ரஷ்யர் தென் போலந்தில் ஒரு ராக்ஷஸப் போரை ஆரம்பித்து கிராகோவைக் கைப்பற்றினர். இத்துடன் அவர்கள் நிற்கவில்லை. ஜெர்மன் ஸைலீஷியாவிலும் அவர்கள் புகுந்து முன்னேற ஆரம்பித்தனர். அவர்கள் மேற்கு ஸைலீஷியாவின் தலைநகராகிய ஓபலினைக் கைப்பற்றினர். இவ்விதமாக, ரஷ்யாமீது படையெடுத்த ஜெர்மானியரின் பூமிக்கே யுத்தத்தைக் கொண்டுபோய்விட்டனர் ரஷ்யர். "நாஜி மிருகத்தை அதன் குகையிலே அடித்து வீழ்த்துவோம்! எங்களுக்கு ஜெர்மன் மக்கள்மீது விரோதம் கிடையாது. அவர்களை அநாவசியமாக யுத்தத்திலே இழுத்துவிட்ட நாஜி - அரக்கர்களையும் அவர்களுடைய ராணுவ பூதத்தையும் ஒழிக்கவே நாங்கள் சபதம் செய்திருக்கிறோம்" என்று ஸ்டாலின் கூறியிருப்பது குறிப்பிடத் தக்கது.

XVII பெர்லினுக்கு 'யாத்திரை'

"நாங்கள் பெர்லினுக்குத் 'திவ்ய யாத்திரை' செய்கிறோம். எங்களை எந்தச் சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது" என்று வீர முழக்கம் செய்து கொண்டு ரஷ்யர் ஜெர்மன் தலைநகரை நோக்கி முன்னேறிக்கொண் டிருக்கிறார்கள். கிழக்குப் போர் முனையில் மிகவும் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருப்பதாக நாஜித் தலைவர்களே ஒப்புக்கொள்ளுகிறார்கள். பெர்லினைக் காக்க அவசரமாக அகழிகள் தோண்டப்பட்டு வருகின்றன, அங்கிருந்து ஜனங்கள் வெளியேறி வருகிறார்கள். பெர்லின் நகரின் ஒவ்வொரு கல்லுக்கும் போராடப்போவதாக நாஜிகள் வீறு கூறியிருக்கிறார்கள். இப்புஸ்தகத்தை எழுதி முடிக்கும் சமயத்தில், ரஷ்யர் ஜெர்மனியில் பிராங்க்பர்ட் நகருக்கு வடக்கே ஓடர் நதியை அடைந்துவிட்டனர். இந்த இடத்திற்கும் பெர்லினுக்குமிடையே உள்ள தூரம் 45 மைல். மெமலை ரஷ்யர் கைப்பற்றி லிதுவேனியாவையும் விடுவித்துவிட்டனர். கிழக்குப் பிரஷ்யாவின் முக்கால் பங்கு ரஷ்யர் வசமாகிவிட்டது. அங்குள்ள 25 ஜெர்மன் டிவிஷன்கள் துண்டிக்கப்பட்டு விட்டன. கிழக்குப் பிரஷ்யாவின் தலை நகராகிய கோனிக்ஸ்பர்கிற்காக இப்பொழுது கடும்போர் நடந்துகொண்டிருக்கிறது.

ஏற்கெனவே இரண்டாம் போர்முனையை ஆரம்பித்து பிரான்ஸை விடுவித்துள்ள பிரிட்டிஷ், அமெரிக்கத் துருப்புகள் பிரெஞ்சுத் துருப்புகளுடன் மேல் திசையில் ஜெர்மனிக்குள் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. ஆகவே ஹிட்லர் 'விதைத்த' யுத்தம் அவருக்கே ஆபத்தாகிவிட்டது. அவர் உபயோகித்த ஆயுதங்கள், யுத்த தந்திரங்கள் எல்லாம் அவர் மீதே ஏவப்படுகின்றன. இப்பொழுதுள்ள நிலைமையில் ஜெர்மன் வீழ்ச்சி அதி தூரத்தில் இல்லை.

The Indian Express Branch Press, Mt. Rd., Madras.

கைக்குப் பூஷணம் வீட்டுக்குப் பொக்கிஷம்

தினமணி வெளியீடு

பதிப்பாசிரியர் : பி. ஸ்ரீ

			ரூ.	அ.
1.	மகாத்மா காந்தி — நினைவு மாலை [2-ம் பதிப்பு]		0	12
2.	ரவீந்திரநாத டாகுர்	....	0	8
3.	கைலாஸம்—மானஸஸரோவர்	....	0	8
4.	போலந்து—பின்லந்து	....	0	12
5.	சிறு கதை மஞ்சரி	....	1	0
6.	ஹாஸ்ய நாடகங்கள், கட்டுரைகள்	....	2	0
7.	தில்லைக் கோவிந்தன்	....	1	0
8.	அன்னை கஸ்தூரிபா	....	0	12
9.	முன்னிலா	....	0	12
10.	தளவாய்த் தாத்தா (அரியநாயக முதலியார்)		0	12
11.	மௌலானா ஆஜாத்	....	1	0
12.	கதை வனம்	....	1	0
13.	நவரஸங்கள்	....	0	12
14.	வீர ரஷ்யா (பாகம் I)	....	0	12
15.	காந்தியத் திட்டம்	....	1	8
16.	தற்காலப்போர்க் கருவிகள்	....	1	0
17.	கதா நாடக மஞ்சரி (ப்ரொபெசர் எஸ். கே. யக்ஞ நாராயணையர்)	....	0	8

(ஒவ்வொன்றுக்கும் தபால் செலவு பிரத்தியேகம்)

கபீர்தாஸ் ....

ஐசுவரிய அமெரிக்கா ....

தஞ்சை நாயக்கர் ....

} அச்சில் உள்ளன